

# செந்தமிழ்


| தொகுதி | திருவள்ளுவர் ஆண்டு கககூகூ. பங்குனி | பகுதி |
|---|---|---|
| சூந | மார்ச்—1968 | ந. |


## பொருளடக்கம்


க. தமிழ்ப் பெண்கள் — 1
தமிழவேள் பி. டி. இராசன்

உ. எல்லிஸ் மொழி பெயர்ப்பு — 11
V. G. சீனிவாசன், பீ. ஏ., எல். டி.

ந. இலக்கியத்து நடை — 19
வை. தட்சிணமூர்த்தி, எம். ஏ.

ச. புராணத் திருமலைநாதர் — 27
மு. அருணசலம், எம். ஏ.

ரு. பரணிக்கோர் சயங்கொண்டான் — 35
மு. வை. அரவிந்தன், எம். ஓ. எல்.

சூ. பண்டைக்காலப் பாத்தூண் நெறி — 50
டாக்டர் மொ. அ. துரைஅரங்கசாமி.

எ. சங்கச் செய்திகள் — 81

அ. மதிப்புரை — 88

இந்தியக் குடியரசுத் தலைவர், மாட்சிமிகு, டாக்டர். சாகீர் உசேன் அவர்கள், நம் மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் தலைமைப்புரவலராக (Patron-in-Chief) இருக்க அன்புடன் இசைவு தந்துள்ளனர். அதற்கென அவர்கள் அளித்த ஒப்புதற் கடிதம் கீழே தரப்பெற்றுள்ளது.

**Dr. ZAKIR HUSAIN**

*President of the Republic of India*

is pleased to be the

**PATRON - in - CHIEF**

of the Tamil Sangam, Madurai

by Command of the President of the Republic of India.

Sd. ( )

Major General

Military Secretary to the President

Military Secretary's office

29 December 1967.

# தமிழ்ப் பெண்கள்

(பி. டி. இராசன், தலைவர், மதுரைத் தமிழ்ச் சங்கம், மதுரை.)

தமிழகத்தில் வரலாற்றுக் காலத்திற்கு முன்பிருந்தே சிவ வழிபாடு இருந்து வருகின்றது. சிவம், ஆணும் பெண்ணுமாகிய இரு கூறு கொண்டது. அதனால் தமிழரினம் ஆணும் பெண்ணுமாகிய இரு பால்களையும் சமநிலையில் வைத்துப் பேணிவந்தது புலப்படும்.

## தொல்காப்பியம்

வரலாற்று எல்லையில் அகப்பட்ட பழந்தமிழ் நூல்களுள், தொல்காப்பியம் மிகப் பழமையானது. அந்நூலில், ஆணும் பெண்ணும் சமநிலையில் வைத்தே, உரிய கருத்துக்கள் உரைக்கப்படுகின்றன. பெண்ணினத்தைச் சில நாட்டவர் நூல்களில் தாழ்த்திப் பேசியதுபோல், தொல்காப்பியத்தில் பேசுவது கிடையாது[1]. மேற்கு ஆசியாவில் ஏறத்தாழ நாலாயிரம் ஆண்டுகட்கு முன் நிலவிய சமயங்கள் பெண்களை ஆண்களுக்கு இரண்டாவதாகவே வைத்துப் பேசுவதைப் படிக்கின்றோம்[2]. அவர்களை அடிமைகளாகக் கருதியதும், விலைப்பொருளாக விற்றதும் போன்ற கருத்துக்கள் அதேகாலத்தில் நிலவிய தொல்காப்பியத்திலோ அதனை அடுத்து நிற்கும் சங்க இலக்கியங்களிலோ காண்பதில்லை.

தொல்காப்பியர் ஆணுக்கும் பெண்ணுக்கும் உள்ள தகுதிகளைக் கூறும் பொழுது "ஆண்மகனுக்குப் பெருமையும், அறிவும், உரனும் இன்றியமையாதன" என்றும்[3], பெண்டிர்க்கு அதனினும் உயர்வாகச் "செறிவும் நிறைவும் செம்மையும் செப்பும் அறிவும் அருமையும் இன்றியமையாதன" என்றும்[4], கூறியுள்ளார். மேலும் பெண்களுக்குரிய கல்வியைக் கற்பு என்று குறிப்பிட்டு, "அஃது அவர்களுக்கு உயிரினும் பலபடியாகச் சிறந்தது" என்றும் வற்புறுத்துகின்றார்[5, 6]. கணவ

னுக்கும் மனைவிக்கும் உள்ள தொடர்பைக் கூறுகின்றபோது புறத்தே சென்று அவன் ஈட்டிக் கொண்டுவரும் பொருளைச் செலவிடுதற்குரிய உரிமையை மனைவிக்குக் கொடுக்கின்றான். இருப்பினும் மனைவி, தன் கணவனுக்கு உரிய பெருமையை நிலை நாட்டி, அன்பில் வேறுபடாமல் அவனுடைய மனைக்கிழத்தியாய் மாண்புறுவள்[7, 8]. மேலும் கணவனிடத்தே குற்றம் காணின் கடிந்து திருத்துவதற்கும், நலன்கண்டவிடத்துப் பாராட்டு வதற்கும் மனைவிக்கு உரிமையுண்டு[9].

**சங்க கால இலக்கியங்கள்:**

தொல்காப்பியத்தை அடுத்து நிற்கும் சங்க இலக்கியங்கள் பதினெட்டனுள் (பத்துப்பாட்டு, எட்டுத்தொகை) ஆணும் பெண்ணும் தம்மில் தாமேகண்டு, காதலராகிப் பின்னர்க் கண வன் மனைவியராய் மனையறம் புரிவதையே பொருளாகக்கொண்டு பாடப்பட்ட பாடல்கள் மிகுதியாகக் காணப்படுகின்றன. அவற் றுள் எங்கும் தலைவியைத் தாழ்த்தி உரைக்கும் கருத்துக்களைக் காணமுடியாது. இவ்வுலக வாழ்வுக்கு இன்றியமையாதது பொருள். எனினும் அதனினும் பெரிதாகப் பெண்டிரை மதித்த னர் தமிழர்[10]. இல்லறத்தில் நின்று பொருளைப் பேணி வாழ்வதெல்லாம் விருந்து பேணுவதற்கேயாம் என்பது தமிழர் கொள்கை. அத்தகைய விருந்தோம்பலாகிய அறத்தைச் செய் யும் பொறுப்பு மனையாளைச் சார்ந்தது. அங்ஙனம் அவள் செய் தற்குத் துணைபுரிதல் கணவனின் கடமை. தன் கணவனும் தானுமாக இருந்து விருந்தினரைப் போற்றுவதற்காகவே பகைப்புலம் சென்ற கணவன் விரைவில் திரும்பிவரவேண்டு மென்று எண்ணுகின்றாள் மனைவி. போருக்குச் சென்ற கணவனும் “அரசன் ஆற்றும் இப்போர்த் தொழில் விரைவில் முடிந்தால் என் துணைவி விருந்துபேணும் பெருமையை அடைவாள்” என்று எண்ணுவான்[11]. விருந்தினர் பகலில் அன்றி இரவில் வந்தா லுங்கூட வரவேற்கும் நற்பண்பும் இல்லாளிடையே இருந் தது[12]. தன் “கணவனோடு உடன் உறைந்து விருந்துபேணி, இன்புறும் மனைவாழ்க்கையைவிடத் தேவருலகம் இனியதல்ல” என்பது சங்ககால மங்கைகொண்ட கொள்கையாகும்.[13] இங் ஙனம் ஆண்மகனும் “விருந்துசெய்துவாழும் மண்ணுலக வாழ் விற்குத் தேவருலகு ஒப்பாகாது” என்று கருதினன்[14]. தான் ஈட்டிய செல்வங்களனைத்தையும் தன் மனைவிக்கு அளித்துப்

பெருமைப்படும் கணவன், அப்பொருளில் உரிமை கொண் டாடாமல் அவளை மட்டுமே உரிமைப் பொருளாகக் கருதினன்[15]. சேர வேந்தரில் ஒருவனை மாக்கோதை என்பவன் கூறுகின்ற கருத்தொன்று, அவனுக்கும் அவனுடைய மனைவிக் கும் உள்ள உயர் நட்பை எடுத்துக்காட்டுகின்றது. அவன், தன் மனைவி இறந்தபோது "என் துயரம் எவ்வளவு பெரிதாயினும், என் உயிரைப் போக்கி அவளுடன் சேர்க்கும் வலியற்றது. அவள் இறந்தும் இன்னும் யான் வாழ்கின்றேன். இதுதான் என் காதலின் பண்போ" என்று புலம்புகின்ருன்[16].

சான்ருண்மை என்பது எல்லாப் பெருங்குணங்களும் நிறைந்த தன்மையாகும். இத்தகைய சான்ருண்மை ஆண்களுக் குக் கூறப்படுவது போலவே, பெண்களுக்கும் கூறப்படுகிறது. "தன் கணவன் சான்ருேரால் இகழப்படினுங்கூட அவனையே ஏத்திப் பேணுவது மங்கை நல்லாளின் கடமை. அதுவே பெண் களுக்குரிய சான்ருண்மையாகும்"[17].

தமிழக மகளிர்க்கு மறுமணம் புரிந்துகொள்ளும் மரபு சங்க காலத்தில் இருந்ததாகத் தெரியவில்லை[18]. பெண்கள் போர்க்குச் செல்லும் வழக்கமும் இல்லை. அவர்கள் போர்க்கு ஆகார் என விலக்கப்பட்டனர்[19]. ஆனல் பாசறைகளில் உள்ள புண்பட்ட வீரர்களுக்குப் பெண்கள் மருத்துவ வுதவி செய்வது உயர்வாகக் கருதப்பட்டது[20]. சங்க காலத்தில் ஆடவருக்கும் மகளிர்க்கும் சமநிலையிலேயே கல்வி வழங்கப்பட்டிருந்தது. மகளிர்க்கே சிறப் பாக உரியவற்றைக் கற்றும் கேட்டும் உணர்வது கற்பு எனப்பட் டது. பொதுவாக அரசியல், சமயம், சமுதாயம், தொழில் முத லானவற்றை அறிந்துகொள்வது 'கல்வி' எனப்பட்டது. இக்கல்வி இருபாலார்க்கும் உரியதாகும். இத்தகைய கற்பிலும், கல்வியிலும் சிறந்து விளங்கும் மகளிர்க்கு அரசியலில் சமஉரிமை வழங்கப்பட் டது. அரசியலில் வேந்தர்க்கிடையே தூதுபோதல் உயர்ந் தோர்க்கே உரியது என்று தொல்காப்பியர் கூறுவர்[21]. அச் செயலை ஒளவையார் போன்ற பெண்பாற் புலவர்கள் மேற்கொண் டிருந்தனர் என்ற செய்தியைச் சங்க இலக்கியங்கள் எடுத்துரைக் கின்றன.

காக்கை பாடினியார் நச்செள்ளையார் என்ற மற்றொரு மங்கைநல்லார், ஆடுகோட்பாட்டுச் சேரலாதன் என்ற சேர வேந்தன் அவையில் இருந்தனர். அம்மன்னன், ஆடல் பாடல்

களிற் கருத்தை மிகச் செலுத்தியதால் அரசியலுக்கு ஊறு உண்டாகும் என்று நினைத்து அவனுக்கு நல்லறிவு வழங்கிய செய்தியைப் பதிற்றுப்பத்தில் காண்கின்றோம்.

**திருக்குறள்:**

இச்சங்க காலத்திலேயே வாழ்ந்த வள்ளுவப் பெருந்தகை யாரும் திருக்குறளில் பெண்களைத் தாழ்வாகக் குறிக்கவில்லை. பெண், ஆடவருக்கு உயரிய துணை, அதாவது 'வாழ்க்கைத்துணை' என்று அவர் குறிப்பதொன்றே பெண்ணினத்தின் சமநிலை உரிமை அவர் காலத்தில் சிறந்திருந்ததைக் காட்டுவதாகும். "பெண்ணிற் பெருந்தக்க யாவுள" என்று[22] கூறுகின்றார். கணவனுக்கும் மனைவிக்கும் உள்ள தொடர்பை உலக வாழ்வில் உடம்புக்கும் உயிருக்கும் உள்ள தொடர்பாகும்[23] என்பர். குடும்ப வாழ்வில் முதன்மை இடம் பெண்ணிற்கே வள்ளுவர் கொடுத்துள்ளார்[24].

**காப்பியங்கள்:**

திருவள்ளுவரையடுத்துக் காப்பிய காலத்தை நோக்கும் போது சிலப்பதிகாரமும், மணிமேகலையும் நம்முன் நிற்கின்றன. இவ்விரண்டும் பெண்ணின் ஏற்றம் உரைப்பன. சிலப்பதிகாரத்தில் கண்ணகி, தெய்வமாகி, வேந்தர்களும் கோயில் எடுத்து வழிபடும் அளவுக்கு உயர்ந்த செய்தி பேசப்படுகிறது. அக்காலத்தில் அரசர்கள், அமைச்சரோடிருந்து ஆராயுமிடத்து, அரசியரும் உடனிருந்து அறிவுரை கூறும் வழக்கத்தைச் சிலப்பதிகாரத்தின் வாயிலாகத் தெரிகின்றோம். சிலம்பை அடுத்துத் தோன்றிய "மணிமேகலை"க் காப்பியத்தில் மணிமேகலை என்ற ஒரு நாடக மகள் (இவர் மாதவியின் மகள்) அருளறம் கேட்டுப் புத்த பிக்குணியாகி உயர்ந்ததையும், மக்களின் பசிப்பிணி போக்கப் பெருந்தொண்டு செய்ததையும், சிறைக்கோட்டத்தை அறக்கோட்டம் ஆக்கியதையும் காண்கின்றோம். இக்காப்பியம் தோன்றிய காலத்தில்தான் வேற்றுச் சமயக் கருத்துக்கள் (நியாயம், வைசேடிகம், சாங்கியம், மீமாம்சை, ஆருகதம்) புகுந்து, மகளிரைக் கீழ்மைப்படுத்தும் முயற்சி தலைகாட்டத் தொடங்கிற்று. மணிமேகலை, அப்போது நாட்டில் நிலவிய பல்வகைச் சமயங்களின் கருத்துக்களை அறிய முயன்றபோது "அவற்றைப் பெண்ணுக்கு உரைத்தல் ஆகாது" என்ற கொள்கையைக் காட்டி "அவள் ஆண் உருக் கொண்டு அவற்றைக் கேட்டல் வேண்டும்" என்று அக்கால அறிஞர்கள் அவளுக்கு உரைத்தனர்.

இம்மணிமேகலைக்குச் சில நூற்றாண்டுகளுக்குப் பின், காரைக்காலில் தோன்றிய புனிதவதியார் என்னும் சைவமங்கை, தமது அறிவாலும், ஒழுக்கத்தாலும், அருட்பெருமையாலும் உயர்ந்து விளங்கினார். தன்னைக்கொண்ட கணவனாலேயே "நற்பெருந்தெய்வம்" என்று வணங்கப்பெற்றார்.

**சைவ வைணவ சமய நூல்கள்:**

பல்லவர் காலத்தில், பெண்களைத் தாழ்த்துகின்ற ஒரு முயற்சி, சைவ, வைணவம் தவிரப் பிற சமய நூற் புலவர்கள் உள்ளத்தில் இடம்பெற்று, மெல்லப் பரவிக்கொண்டிருந்தது. ஆயினும், மகளிரது சமநிலை குறிக்கத்தக்க அளவு குறையவில்லை. பல்லவர் காலத்தே வாழ்ந்த திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தர் போன்ற சைவ குரவர்கள் பாடிய பல்லாயிரக்கணக்கான தேவாரப் பாக்களில் யாண்டும் பெண்களைச் சமநிலையில் வைத்துப் பாராட்டிய பான்மையையே பார்க்கலாம்.

திருநாவுக்கரசருக்குச் செம்மை நெறிகாட்டிச் சமய குரவராகச் சைவ உலகுக்கு அளித்த பெருமை அவருடைய தமக்கையாராம் திலகவதியார்க்கே உரியது. அதே காலத்தில் மதுரையில் பாண்டிய அரசன் நெடுமாறனுக்கு மனைவியாய் விளங்கிய மங்கையர்க்கரசியாருடைய அரியமுயற்சி, திருஞானசம்பந்தரைப் பாண்டி நாட்டிற்கு வருவித்து, அவ்வம்மையாரின் கணவனையும், சைவ சமயத்தையும் ஒருசேரக் காத்தது. அத்தகைய மங்கை நல்லாளை "எங்கள் தெய்வம்" என்றே பெரியோர்கள் பாராட்டி வந்துள்ளனர்.

**கல்வெட்டுகள்:**

அக்காலத்தில் பொதுப்பணியில் சிறப்புற்ற மகளிர்க்கு 'எட்டி' என்றும், 'காவிதி' என்றும் அரசர்கள் பட்டம் வழங்கிச் சிறப்பித்திருக்கிறார்கள்[25]. பிற்காலத்தில் சோழமன்னன் குடும்பங்களில் தோன்றிய செம்பியன் மாதேவி, குந்தவைப்பிராட்டியார் போன்ற பெண்மகளிர், அரசு நன்னெறியில் இயங்குதற்கேற்ற அறிவுப்பணியும், சமய வளர்ச்சிக்கேற்ற கோயிற்பணியும் புரிந்துள்ளனர்.

தொண்டை நாட்டில், உருத்திரன் மேரூர், தெள்ளாறு முதலிய இடங்களில் ஊராட்சிபுரியும் பஞ்சாயத்துக்களில், பெருங்

கருணையாட்டி முதலிய மகளிர் தலைவியாய் இருந்த சிறப்பைச் சோழர் காலக் கல்வெட்டுக்கள் எடுத்துரைக்கின்றன.

**சில பழக்கவழக்கங்கள்:**

போர்த் தொழிலில் ஆடவரே ஈடுபட்டனர் என்பதையும் பெண்கள் போர்க்கு ஆகார் என விலக்கப்பட்டனர் என்பதையும் முன்னர்க் கண்டோம். இதனால் மக்கள் தொகையில் ஆடவர் எண்ணிக்கை குறைந்தும், மகளிர் எண்ணிக்கை மிகுந்தும் இருப்பது இயல்பே. எனவே மிகுந்த எண்ணிக்கை கொண்ட மகளிர் சிலர், தங்களை மணந்துகொள்ளக்கூடிய அளவில் ஆடவர் தொகை இல்லாததால் "வரைவில் மகளிர்" ஆகிப் பரத்தையர் ஆயினர். அப்பரத்தையர் ஆடல் பாடல் முதலான கலைகளைப் பயின்று ஆடல் மகளிராகவும், கணிகையராகவும் விளங்கினர். அவர்களிற் சிலர் பொருளே பெரிதெனக்கொண்டு வாழ்ந்தவரும் உளர். அவர்கள் 'பொருட்பெண்டிர்' எனவும் 'இருமனப் பெண்டிர்' எனவும் அழைக்கப்பட்டனர். இவ்வரைவில் மகளிர் சிலர் ஒரு ஆடவனோடு மட்டுமே தொடர்புடையவராய் இருந்தது உண்டு. அப்படி இருந்தும் அவளுக்குப் பிறக்கும் பிள்ளைகட்கு, அவ்வாடவனுக்குரிய செல்வத்தில் உரிமை கிடையாது.

பரத்தையர் என்றும், வரைவில் மகளிர் என்றும் அழைக்கப்பெற்ற பெண்கள் ஆடல், பாடல் முதலிய கலைகளில் தேர்ந்தவர்களாக இருந்ததுடன் அக்கலையை வழிவழியாகப் போற்றி வளர்த்தும்வந்தனர். மேலும், இல்லறத்தில் ஈடுபட்ட ஆடவர் சிலருக்கு இவர்கள் காமக்கிழத்தியராகவும் இருந்தனர். பொதுவாகக் குடும்பப்பெண்களுக்கு அஃது,ஓரளவு பாதுகாப்பாக இருந்தது என்றே கூறலாம். இத்தகைய பெண்கள், உரோம் நாட்டில் "Vestal Virgin" என்றும், கிரீசில் "Hetaira" என்றும் இருந்ததாக அறிகின்றோம்.

பிற்காலத்தில் பெண்டிரிற் சிலர், தம்மை ஆண்டவன் அருட்பணிக்கு என உரிமையாக்கிக்கொண்டு, திருக்கோவில்களில் பணிபுரியத் தொடங்கினர். கோவில்களில் திருவிளக்கு ஏற்றுதல், கோவிலைத் துப்பரவு செய்தல், கோலமிட்டு அழகுபடுத்துதல், விழாக்காலங்களில் ஆடல் பாடல்களால் மக்களை மகிழ்வித்தல் முதலான தொண்டுகளைச் செய்துவந்தனர். இவர்களைக் "கோயிற் பெண்கள்" என்றும், "தேவரடியார்கள்"

என்றும் கல்வெட்டுக்கள் கூறும். அரசரும், கோயிலாரும் இவர்களுக்கெனத் தனிமதிப்புக் கொடுத்து வந்தனர். இவர்களுக்கென நிலங்கள் மானியங்களாகவும் வழங்கப்பட்டன. 20–ஆம் நூற்றுண்டின் முற்பகுதியில், இவர்கள் செய்துவந்த தொண்டினைச் சிலர் தவருகப் புரிந்துகொண்டதால் "தேவதாசி ஒழிப்புச் சட்டம்" கொண்டுவரப்பெற்று, இவர்களது பணி, கோவிலிலிருந்து விலக்கப் பெற்றது.

**முடிவுரை:**

இவற்றுல் தமிழரினம் கி. பி. 12, 13–ஆம் நூற்றுண்டுவரை, பெண்ணுக்குச் சமுதாயத்திலும், அரசியலிலும் சமஉரிமை அளித்திருந்தமை அறிகின்றோம்.

ஆனுல் காப்பிய காலத்தில் தலைகாட்டிய பெண்களின் உரிமையைப் பறிக்கும் முயற்சி, இடைக்காலங்களில் பைய வளர்ந்துவந்த சமயக்கருத்துக்களோடு கலந்து, பெண்பாலார்க்கு ஞான நூலறிவும், பொதுக்கல்வி அறிவும் வேண்டா என விலக்கி அவர்களை அடிமைகளாக்குவதில் முனைந்தன.

அக்காலத்தே தோன்றிய இளம்பூரணர், பரிமேலழகர் போன்ற உரைகாரர்கள் இக்கருத்துக்களைத் தம் உரைகளில் புகுத்திவிட்டனர்.

தமிழகத்தில் ஐரோப்பியராட்சி நிலைபெறுகிறவரை, இக் கொள்கை மக்களிடையே விரிவாகப் பரவிப் பெண்ணினத்தை, உரிமையற்ற அடிமையாக்கிக் கல்வியில்லாத குருடுமாக்கியது. அதனுல் நாட்டில் கல்லாமையும், மூட நம்பிக்கைகளும், குருட்டுப் பழக்கவழக்கங்களும், சாதி சமய வேற்றுமைகளும் தோன்றி நாட்டை அலைக்கழித்தன. ஐரோப்பியர் ஆட்சியில்தான் வாழ்க்கையில் பெண்களுக்கு உரிய உரிமையை மதிக்கக்கூடிய வகையில் வழங்கவேண்டும் என்ற எண்ணமும், அவர்களுக்கும் ஆண்களைப்போன்ற கல்வியறிவை வழங்குவது முறை என்ற கருத்தும் மக்களிடையே இடம் பெற்றது.

அறிஞர் பலர் இவ்வுண்மையை உணர்ந்து, மகளிர்க்காகப் பள்ளிகளும், கல்லூரிகளும் நிறுவ முன்வந்தனர் மாயூரம் வேதநாயகம் பிள்ளை, கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை, திரு. வி. கலியாணசுந்தரனுர், சுப்பிரமணிய பாரதியார், பாரதிதாசன்

போன்ற புலவர் பெருமக்கள் பெண்ணுரிமையைப் பாதுகாப்ப தில் பெரிதும் முனைந்தனர். பெண்ணினத்தின் பெருமையை மக்களுக்கு நூல்வாயிலாக எடுத்துரைத்த மேற்கண்ட சான் றோர்களில் வேதநாயகம் பிள்ளை எழுதிய 'பெண்மதி மாலை'யும் திரு. வி. க. வின் 'பெண்ணின் பெருமை'யும் மகளிரின் சமஉரி மைக்கு ஆதரவு அளித்தன.

ஒரு காலத்தில் நாடெங்கும் மலர்ந்து, அறிவு மணம் வீசிய பெண்ணின் பெருமை, இடைக்காலத்தில் வாடி வதங்கினும், இப்போது மறுமலர்ச்சியுற்று அரசியல் வானத்திலும், கலை உலகிலும் நறுமணம் வீசிக்கொண்டிருப்பது போற்றத்தக்கது.

இன்று அரசியல் தலைமையிலும் ஆண்மக்களோடு, பெண் மக்களும் சமநிலையில் இடம் பெற்று, நாட்டாட்சி நடத்து வதற்குத் தகுதியும் உரிமையும் பெற்றுள்ளனர்.

அன்று மணப்பிடிப்பிலிருந்து விடுதலைபெற முடியாத நிலையில் இருந்த மகளிர்க்கு இன்று அதனினின்றும்கூட விடுதலை பெறுமளவுக்கு உரிமை கொடுக்கப்பட்டுள்ளது. இவை யெல்லாம் இன்றைய பெண்ணினத்தின் உயர்வுக்குப் போதிய சான்றுகளே! ஆயினும் மணவிலக்குச் செய்துகொள்வதற்கு (divorce) ஏற்ற உரிமை சட்டப்படி, மகளிர்க்கு வழங்கப்பட்டி ருந்தாலும், இங்கிலாந்து நாட்டினைப்போல, மகளிர் தங்கள் மணவிலக்கு உரிமையைத் தாம் விரும்பியபடியே முற்றிலும், பயன்படுத்துவதற்கு ஆடவர் உள்ளம் இடம் கொடுக்கவில்லை என்பதை நாம் ஒத்துக்கொள்ள வேண்டும். மகளிர் இவ்வுரிமை யையும் விரைவில் பெறுவார்களாக!

# மேற்கோள் நூல்கள்


1. Israel......A Young State in Asia: By Aubreyc C. Page 1 and 6
2. The Source ...... By Mitchner
3. தொல்காப்பியம் : பொருள் : களவியல் : 7
4. தொல்காப்பியம் : பொருள் : பொருளியல் 15
5. தொல்காப்பியம் : பொருள் : களவியல் : 22 : 1-2
6. தொல்காப்பியம் : பொருள் : கற்பியல் : 11 : 1-4
7. தொல்காப்பியம் : பொருள் : கற்பியல் : 6 : 3-4
8. தொல்காப்பியம் : பொருள் : கற்பியல் : 6 : 1
9. தொல்காப்பியம் : பொருள் : கற்பியல் : 32 : 1-2
10. அகநானூறு : 43 : 13-15
11. ஐங்குறுநூறு : 442
12. நற்றிணை : 142 : 9-11
13. குறுந்தொகை : 288 : 3-5
14. குறுந்தொகை : 101 : 1-3
15. புறநானூறு : 122 : 8-10
16. புறநானூறு : 245 : 6-7
17. பரிபாடல் : 20 : 88-89
18. கலித்தொகை : 114 : 20-21
19. புறநானூறு : 9 : 1-2
20. தொல்காப்பியம் : பொருள் : கற்பியல் : 35
21. தொல்காப்பியம் : பொருள் : அகத்திணையியல் : 26
22. திருக்குறள் : 54
23. திருக்குறள் : 1122
24. திருக்குறள் : 56
25. பெருங்கதை : 2 : 3 : 144-145

# மேற்கோள் நூல்கள்


1. Israel.....A Young State in Asia: By Aubrey G. Page 1 and 6
2. The Source ..... By Mitchner
3. தொல்காப்பியம் : பொருள் : களவியல் : 7
4. தொல்காப்பியம் : பொருள் : பொருளியல் 15
5. தொல்காப்பியம் : பொருள் : களவியல் : 22 : 1-2
6. தொல்காப்பியம் : பொருள் : கற்பியல் : 11 : 1-4
7. தொல்காப்பியம் : பொருள் : கற்பியல் : 6 : 3-4
8. தொல்காப்பியம் : பொருள் : கற்பியல் : 6 : 1
9. தொல்காப்பியம் : பொருள் : கற்பியல் : 32 : 1-2
10. அகநானூறு : 43 : 13-15
11. ஐங்குறுநூறு : 442
12. நற்றிணை : 142 : 9-11
13. குறுந்தொகை : 288 : 3-5
14. குறுந்தொகை : 101 : 1-3
15. புறநானூறு : 122 : 8-10
16. புறநானூறு : 245 : 6-7
17. பரிபாடல் : 20 : 88-89
18. கலித்தொகை : 114 : 20-21
19. புறநானூறு : 9 : 1-2
20. தொல்காப்பியம் : பொருள் : கற்பியல் : 35-4
21. தொல்காப்பியம் : பொருள் : அகத்திணையியல் : 26
22. திருக்குறள் : 54
23. திருக்குறள் : 1122
24. திருக்குறள் : 56
25. பெருங்கதை : 2 : 3 : 144-145

# எல்லிஸ் மொழி பெயர்ப்பு

V. G. சீனிவாசன், B. A., L. T.,

பிரான்சிஸ் வைட் எல்லிஸ் (Francis Whyte Ellis) என்ற ஆங்கிலேயர் திருக்குறட் பாக்கள் சிறவற்றை ஆங்கிலத்திலே பெயர்த்து வெளியிட்டார். குறட்பாக்களுக்கு அரிய விளக்கவுரையும் எழுதினர். பொருத்தமாகப் பல தமிழ்ச் சுவடிகளினின்றும் நல்ல எடுத்துக்காட்டுகளெனப் பல்வேறு செய்யுட்களைத் தமிழிலே அச்சிட்டதோடல்லாமல் அவற்றுக்கெல்லாம் ஆங்கிலப் பெயர்ப்பினையும் தந்தார். தமிழகத்திற்கு வந்து வாழ்ந்து, தமிழ்கற்று, ஏட்டுச் சுவடிகள் பலவற்றைக் கண்டு சேர்த்துச் சென்னைக் கோட்டையிலே நூலகம் ஒன்றும் நிறுவினர். தமிழ்ச் செய்யுட்களை முதன் முதலாக மொழி பெயர்த்தவர் இத்துரை மகனுரே யாவர்! மொழி பெயர்ப்பாளருள் முதல்வராகவும், முன்னோடியாகவும், முன்மாதிரியாகவும் அமைந்த நற்றொண்டர் இவரே யாவார்! Ellis's Cural பதிப்பு 1819-இல், எல்லிஸ் தமது நாற்பதாவது வயதிலே காலமானதுடன் திடீரென நின்றுவிட்டது போலும்! இப்பெருந் தமிழ்த் தொண்டரது பணியே பீட்டர் பெர்சிவல், ஈ. ஜே. ராபின்சன், பூஜ்ய துரு, ஜி யூ. போப் ஆகியோரை மொழிபெயர்ப்புப் பணியில் ஊக்கியிருக்க வேண்டும். எல்லிஸ் மொழிபெயர்ப்புக்களில் சிலவற்றை ஈண்டுக் காண்போம்.

### திருக்குறள்

அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு.

### Tiru Cural

As ranked in every alphabet the first
The self-same vowel stands, so in all words,
Th' eternal God is chief.

## 2. திருவாய்மொழி

உயர்வற வுயர்நல முடையவ னெவனவன்
மயர்வறு மதிநல மருளின னெவனவன்
அயர்வறு மமரர்க ளதிபதி யெவனவன்
துயரறு சுடரடி தொழுதெழென் மனனே.

## Tiruvay–Mozhi

Who but the possesseth in the highest degree the highest virtue ?

Who but he vouchafest clearness of understanding to dispel the fantasies of the world ?

Whe but he is the Lord of deities free from all aflictions ? Bow O my soul! at his resplendent feet by which the miseries of the world are removed.

## 3. திருவாசகம்

குறைவிலா நிறைவே கோதிலா வமுதே
யீறிலாக் கொழுஞ்சுடர்க் குன்றே
மறையுமாய் மறையின் பொருளுமாய் வந்தென்
மனத்திடை மன்னிய மன்னே
சிறைபெரு நீர்போற் சிந்தைவாய்ப் பாயும்
திருப்பெருந் துறையுறை சிவனே
இறைவனே நீயென் னுடலிளங் கொண்டா
யினியுன்னை யென்னிரக் கேனே.

Thow art the full weight without diminution, thow art unadulterated nectar, thow art a hill of unextinguishable, eternal light;

Thow comest in the words and in the scriptures and art for ever fixed in my mind;

Like undammed water thow flowest into my thoughts, O Siven of Tiruperundurai!

O Lord thow hast taken thy abode within me,— what more can I ask ?

## 4. சிவவாக்கியம்

அரியுமல்ல வரனுமல்ல வயனுமல்ல வப்புறங்
கருமைவெண்மை செம்மையுங் கடந்துநின்ற காரணம்
பெரியதல்ல சிறியதல்ல பெண்ணு மாணுமல்லவே
துரியமுங் கடந்துநின்ற தூரதூர தூரமே.

## Siva-Vacyam

It is not Ari, it is not Aren, it is not Ayen;
Far beyond the black (the colour of Vishnu) the white (the colour of Siven) or the red (the colour of Brahma) soars the everlasting cause;
It is not great, it is not small, neither is it male, nor female;
Beyond every state of corporeal being it is farther, farther, and farther still.

## 5. தேம்பாவணி

அறக்கட னீயே யருட்கட னீயே
அருங்கரு ணாகர னீயே
திறக்கட னீயே திருக்கட னீயே
திருந்துள மொளிபட ஞான
நிறக்கட னீயே நிகர்கடந் துலகின்
நிலையுநீ யுருநீ நிலைநான்
பெறக்கட னீயே தாயுநீ யெனக்குப்
பிதாவுநீ யனைத்துநீ யன்றே.

## Tembavani

Thow art the sea of virtue, thow art the sea of grace, thow art the most benevolent;
Thow art the sea of power, thow art the sea of prosperity, thow art the sea of wisdom which enlighteneth the mind;
Thow art the confirmation and the life of the world, to whom is no likeness;

Thow art the sea by which I am confirmed,
thow art to me as a mother and father;
art thow not all to me ?

### 6. சிந்தாமணி

இலங்க லாழியி ளுன்களிற் றீட்டம்போற்
சலங்கு தெண்டிரை மேய்ந்து கணமழை
பொலங்கொள் கொன்றையி ளுன்சடை போன்மின்னி
விலங்கல் சேர்ந்துவிண் ணேறிவிட் டார்த்தவே.

### Chintamani

Like a herd elephants belonging on some resplendent Emperor, the gregrious clouds, having grazed on the clear waves of the troublous ocean, darting lightnings, resembling the beautiful golden flowers of the condei on the dark hair of Siva, having reached the mountains and climbed the sky, wide opening bellowed aloud.

### 7. கம்பராமாயணம்

நீற ணிந்த சடவு ணிறத்தவான்
ஆற ணிந்துசென் றூர்கலி மேய்ந்தகிற்
சேற ணிந்த முலைத்திரு மங்கைதன்
வீற ணிந்தவன் மேனியின் மீண்டவே.

### Camben's Ramayanam

The clouds which were of the colour of the god who is covered by grey ashes white proceeding on their way, having arrived and grazed on the waters of the ocean, return like the young Goddess of felicity on whose breast is rubbed the yellow paste of the sweet-smelling and like the dark body of him who is adorned by her splendour.

### 8. திருமுருகாற்றுப்படை

சீரை தைஇய வுடுக்கையர் சீரொடு
வலம்புரி புரையும் வானரை முடியினர்

மாசற விமைக்கு முருவினர் மானி
னுரிவை தைஇய வூன்கெடு மார்பி
னென்பெழுந் தியங்கும் யாக்கையர் நன்பகற்
பலவுடன் சழிந்த வுண்டிய ரிகலொடு
செற்ற நீக்கிய மனத்தினர் யாவையுங்
கற்றோ ரறியா வறிவினர் கற்றோர்க்குத்
தாம்வரம் பாகிய தலைமையர் காமமொடு
கடுஞ்சினங் கடிந்த காட்சிய ரிடும்பை
யாவது மறியா வியல்பினர் மேவரத்
துனியில் காட்சி முனிவர் முற்புக;

## Tiru Murugattu-Padai

They who are clothed in garments formed of bark, whose revered heads are covered by hair white as the shell of the conch, whose form shine with spotless lustre, whose emaciated breasts are covered by deer-skins, whose ribs are seen protruding from their bodies, who often refrain from food throughout the day, whose minds are void of hatred and obstinacy, who know all of which even the learning are ignorant, who are the extreme heads of the wise, who are sages divested both of desire and savage anger, who by their nature know no sorrow; may these the contemplative sages of faultless wisdom gather together and precede him ?

## 9. பெரியபுராணம்

கேடு மாக்கமுங் கெட்ட திருவினா
ரோடுஞ் செம்பொனு மொக்கவே நோக்குவார்
கூடு மன்பிற் கும்பிட லேயன்றி
வீடும் வேண்டா நெறியின் விளங்கினார்.

## Periya-Puranam

The holemen, who have triumphed over adversity and prosperity, esteem a pot - shred and pure gold alike and, adoring God from love only not from the desire of heaven,

shine bright in the path of virtue.

## 10. நாலடி நானூறு

மறுமைக்கு வித்து மயலின்றிச் செய்து
சிறுமைப் படாஅ துயிர்வாழ்மின் அறிஞராய்
நின்றுழி நின்றே நிறம்வெருங் காரணம்
இன்றிப் பலவு முள.

## Naladi-Nanuru

Laying up seed for heaven, without delusion of mind and void of all distress, enjoy life like the wise, maintaining your proper station, but remembering always that there are various things that change their nature without efficient cause.

## 11. பழமொழி

தோற்ற மரிதாய் மக்கட் பிறப்பினு
லாற்றுந் துணையு மறஞ்செய்க – மாற்றின்றி
யஞ்சும் பிணிமூப் பருங்கூற் றுடனியைந்து
துஞ்ச வருமே துயக்கு.

## Pazha-Mozhi

When born in a human form, difficult of attainment, practise virtue to the utmost of thy power; for inevitable pain, uniting with fearful disease, old age and death, approacheth to destroy thee.

## 12. அருங்கலச் செப்பு

மாசுண்ட மார்க்கத்து நின்றாரைப் பூசித்தல்
பாசண்ட மூட மெனல்.

## Arungala-Cheppu

Honouring those as saints who pursue a faulty path; this is heretical folly.

## 13. அறநெறிச் சாரம்

மெய்ம்மை பொறையுடைமை மேன்மை தவமடக்கஞ்
செம்மையொன் றின்மை துறவுடைமை - நன்மை
திறம்பா விரதந் தரித்தலோ டின்ன
வறம்பத்து மான்ற குணம்.

Truth, humility, respect, devotion, temperance, impartiality, the forsaking of all things, retirement, benevolence, and pertenacious abstinence; the devotee who is endowed with these ten virtues possesses the highest qualities.

## 14. சிறுபஞ்சமூலம்

மக்கட் பெறுதன் மடனுடைமை நாணுடைமை
யொக்க வுடனுறைத லூராண்மை - தொக்க
விலைமக ளெல்லாதாட் கைந்திவையே கண்டீர்
தலைமகனைத் தாழ்க்கு மருந்து.

### Siru-Panja Mulam

The bearing of children, simplicity, modesty, constant residence with her husband and liberality; lo! these five form together a love-potion, which subjects their lords to the will of those whose favours cannot be purchased.

NOTE: The concluding sentence is a periphrasis for **matrons** in contradistinction to courtezans **விலைமகள்** who sell their favours.

## 15. நல்வழி

நீறில்லா நெற்றிபாழ் நெய்யில்லா வுண்டிபாழ்
ஆறில்லா வூருக் கழகுபாழ் — நேரே
யுடப்பிறப் பில்லா வுடம்புபாழ் பாழே
மடக்கொடியொன் றில்லா மனை.

Destitute of perfection is the forehead on which the sacred ashes are not rubbed; destitute of taste in the food

not enriched by clarified butter; destitute of beauty is the country in which there are no waters; destitute also is he who hath no brethren; but above all destitute is the house in which no tender vine flourisheth (i. e. which hath no mistress'.

## 16. புறநானூறு

படைப்புப் பலபடைத்துப் பலரோ டுண்ணும்
உடைப்பெருஞ் செல்வ ராயினு மிடைப்படக்
குறுகுறு நடந்து சிறுகை நீட்டி
யிட்டுந் தொட்டுங் கௌவியுந் துழந்து
நெய்யுடை யடிசின் மெய்பட விதிர்த்து
மயக்குறு மக்களை யில்லோர்
பயக்குற விலர்தாம் வாழு நாளே.

Though in the highest degree prosperous, yet, when an entertainment of many dainties hath been prepared for many guests, if no children come tottering into the midst, stretching out them little hands and causing a pleasing confusion by seizing on the food, eating with their mouths, mixing it together and scattering it about, fruitless are the lives of the givers of the feast.

# இலக்கியத்து நடை
# ( Style in Literature )

—*—

வை. தட்சிணாமூர்த்தி, எம். ஏ..
மதுரை.

## நடையின் சிறப்பு:

பதினெட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த ஆங்கிலத் தத்துவப் பேராசிரியர்களுள், லாக் அவர்களும், பெர்க்லி அவர்களும் குறிப்பிடத்தக்கவர்கள். தத்துவ அறிஞர் லாக்கின் தத்துவங்கள், லாக்கின் கொள்கை எனச் சிறப்பிக்குமளவிற்கு உயர்வு பெற்றன. பெர்க்லி அவர்களும் தான் சிந்தித்து உருவாக்கியதத்துவங்களைத் தமது எழுத்தில் வடித்தார். அவருடைய எழுத்துகட்கிடையே தத்துவம் மூச்சுத் திணர்வது இயல்பு. அவருடைய எழுத்து நடை அத்தத்துவங்கட்குக் கலையுருவையும், உணர்ச்சியைத் தூண்டும் இனிய மணத்தையும் ஈந்தது. ஏற்றத் தாழ்வற்ற இரு பெரும் அறிஞர்களின் கருத்துக்களுள்ளும், பெர்க்லியுடைய கருத்துக்கள் மக்கட்கு அறிமுகமான அளவு லாக்கின் கருத்துக்கள் அறிமுகமாகவில்லை. இதற்கான அடிப்படைக் காரணம், லாக்கிடம்ஓட்டமுள்ள நடைச் சிறப்பில்லை; அது பெர்க்லியின் கைப்பொருளாயது என்பதே.

ஒரு எழுத்தானது ஆக்கத்தில் அறிவைக் கலக்கும் தத்துவம் மிதந்து வரலாம்; கற்பனை நயம்கரை புரளலாம்; ஆனால் அவை படிப்பவரின் அறிவைக் கலக்கும் முன்னர் மனதுக்குள் புகுதற்கு, மொழிக்கண் எழும் எழுத்தில், நடை தேவை என்பது இன்றியமையாதது. வணிக நிலையங்களில் விளம்பரத்திற்காக வைக்கப்பட்டிருக்கும் பெண்ணுருவத்திற்கும், நடமாடும் உண்மைப் பெண்ணுக்குமுள்ள வேற்றுமை. சாயல் போன்றவற்றான் வருதல்போன்று இலக்கியத்தை வேறுபடுத்திக்காட்டுவது இலக்கியநடையேயாகும். ஒரு கொலை வழக்கைப்பற்றிக் காவல்நிலையத்தார் எழுதும் அறிக்கைக்கும், புதின ஆசிரியன் அதே கொலை

வழக்கைத் தன் கதையுள் கையாண்டு எழுதுகையில் எழும் உணர்ச்சியைத் தட்டியெழுப்பும் பண்புக்கும் இடையே வரும் வேற்றுமையும் நடைச்சிறப்பால் வருவதே. மனித உடலின் இயக்கத்துக்கு மூச்சும், குருதியோட்டமும் காரணமாவது போன்று இலக்கிய இயக்கத்துக்கு எழுத்துநடையும், கருத்தாழமும் உயிரூட்டுவன. ஆங்கிலத்திறனாய்வாளர் சிலர் "மனிதனுக்கு ஆடை அழகுதருவது போன்று, இலக்கியத்திற்கு அழகுசெய்வது நடை" என்பர்; மற்றும் சிலர் ஆடை கழற்றமுடிந்தது; நடையோ இலக்கியத்தோடு பிரிக்க முடியாது பின்னிப் பிணைந்திருப்பது ஆகையால் அது மனித உடலை நிரந்தரமாகப் போர்த்தியிருக்கும் தோல் போன்றது என்பர். அது தோல் போன்றும், ஆடை போன்றும், மூச்சுக்காற்றுப் போன்றும் பலபடச் செயல்புரியும் உயிர்ப்பண்பு என்பதே இவண் குறிக்கத்தக்கது. தொல்காப்பியச் செய்யுளியலுக்கு உரை எழுதும் இளம்பூரணர் "நடையென்றது அப்பாக்கள் இயலும் திறன்" என்பார். அத்திறனே எழுத்தாளனுக்குக் கைவரவேண்டியது. அத்திறனே எழுத்தாளனது கருத்துக்கும், படிப்போரது உள்ளத்துக்கும் தொடர்பை ஏற்படுத்துவது.

## நடையும் எழுத்தாளனும்:

எழுத்தாளன் துய்த்து, கேட்டு, அறிந்து, சிந்தித்த பின்னர்த்தான் தெளிந்தவற்றைத்தன்னுலியலும் முறையில்எழுத்தில் வடிக்கின்றான். வானொலியில் பேச்சுக்களையும், பாடல்களையும் கேட்கும் பொழுது அவற்றின் குரலொலியைக் கொண்டே யார் பேசுகிறார் அல்லது பாடுகிறார் என்பனவற்றை எளிதில் அறிவது போல், எழுத்து நடையைக்கொண்டே யார் எழுதியது என்பதை அறிந்துகொள்ளலாம். சாக்ரடீசின் எழுத்து நடை மிகுதியும் வினாக்களைக் கொண்டிருக்கும். பிளேட்டோவின் உரை நடை சுழன்று சுழன்று செய்திகளை வரையறுக்கும். சான்சனின் எழுத்துநடை ஒருதனிவகையானது. தமிழ் உரையாசிரியர்களுள் சேனாவரையர், மறுப்புக்களாகவும், தன் கருத்தை நிலைநாட்டுதலாகவும் எழுதிச் செல்கிறார். இளம்பூரணர் எளிய, ஒழுகிய நடையில் எழுதுகிறார். மேற்கண்ட இருவரும் ஒரே நூலுக்கு உரை எழுதுகையிலேயே நடையில், பொருள் கோள் முறை முதலியவற்றில்

வேற்றுமைகளைக் காண்கிறோம். நச்சினார்க்கினியர் கொண்டு கூட்டிப் பொருள் எழுதுகிறார். இவைபோன்று, கருத்தை வெளியிடும் முறையில் வரும் முறை வகுப்பு நடையின் பாற்படுகின்றது. நாவலர் சோமசுந்தர பாரதியார் அவர்கள் நீண்ட கூட்டுத் தொடர்களை எழுதுவார்கள். டாக்டர் சிதம்பரநாதனார் அவர்கள் உகரம் ஐகாரம் முதலியவற்றில் தொடரின் இறுதிச் சொல் முடிவதில் விருப்பமுள்ளவர்கள்.

பட்டறிவும், நூலறிவும் கொண்ட பெரியோர் தாம் கற்றவற்றுள் தமக்கு மிகவும் பிடித்தமானதாக இருக்கும் அறிஞரின் முறைகளோடு ஒன்றிவிடுகிறார்கள். அது போன்று தாம்தொடர்பு கொண்ட இலக்கியப்பண்புகள் பலவற்றினாலும்ஈர்க்கப்பட்டதன் பயனாக அவருடைய சொந்த நடை தோன்கிறது. இத்தகு நடைகைவரப் பெறுதற்கு மற்றொரு அடிப்படைக் காரணமாக இருப்பது, குறிப்பிட்ட எழுத்தாளனுக்கும் அவன் கொண்ட கருத்துக்கும் இடையே ஏற்படும் இடையறா உருக்கத்தோடியைந்த ஈடுபாடேயாகும். இதையே இராமலிங்கஅடிகள் 'நான் கலந்து பாடுங்கால், என்ற அடியில் குறிப்பிடுகிறார். கருத்தோடு தானும் கலந்து எழுதுகையில், கூறும் கருத்தில் புத்துணர்ச்சி தோன்றுகிறது. கல்மேல் கல்லடுக்க, கட்டிடம் உயர்வதுபோல் வழிவழிவந்த அதனையே எழுத்தாளன் தன் உணர்வு கூட்டி எழுதுகையில் அது மீண்டும் உயர்கிறது. புத்தன்ஹாம் என்ற அறிஞர், ''ஒவ்வொரு உணர்ச்சியும் ஒரு வீட்டைக் கட்டுகிறது'' என்பார். அதுபோன்றே எழுத்தாளனது உணர்ச்சி ஒரு புது நோக்கையே தோற்றுவித்துக் காட்டுகிறது. சக்திக்கும், பலவீனத்திற்கும் ஏற்ப, அவனது உண்மை அறிவின் நெறிநின்று அந்நடை எழுகிறது. போர்முனையில் வீரத்தைப் பாடுகிறான் ஒருவன். மற்றொருவன் சாவு முனைக்கு வேண்டாம்; அமைதிக்கு வழிநாடுங்கள் என்கிறான். இதுபோன்றது தான் தனி மனிதர்களின் இலக்கியக் கண்ணோட்டங்களில் வரும் வேற்றுமை. அவ்விலக்கியக் கண்ணோட்டத்திற்கேற்ப நடையிலும் போக்கு மாறும். ஒவ்வொரு எழுத்தாளனும் தனது கருத்துக்கும், கண்ணோட்டத்திற்கும், மன இயல்புக்கும் ஏற்ப நடையைத் தேர்ந்தெடுக்கிறான். அவனை அறியாது அது அவனதாக வெளிவருகிறது. எழுத்தாளனது நிழல்போன்று அது

தொடர்கின்றது எனில் மிகையாகாது. ஒன்பான் சுவைகட்கும் பாத்திரப் பண்புகட்கும் அப்பாற்பட்டுச் சொல்வரிசையில், வாக்கிய அமைப்பில் அது ஊடுருவிப் பாய்ந்து ஓடுகிறது.

எழுத்தாளனின் திறமையையும், மேதைத் தன்மையையும் காட்டுவது அவன் எடுத்தாளும் பொருள் மட்டுமன்று. அப் பொருளைப் படம் பிடித்துக் காட்டும் முறையுமாகும். காந்தியடிகள் ஒரு தத்துவ அறிஞர். கதரின் பொருளாதாரத்தையும் தத்துவத்தையும் அவர் வெகுவாக எழுதியுள்ளார். அவரின் மாணவரான டாக்டர் குமரப்பா அவர்கள் படிப்போர் வியக்கும் வண்ணம் அதையே புள்ளிவிவரங்களோடு எழுதினர். இராசாசி அதே கதரின் சிறப்பை ஒரு சிறு கதை வாயிலாக எழுதிவிட்டார். முந்தைய இருவர் நடையும் மனதில் தைப்பதை விட இராசாசி எழுதியது எளிதில் தைத்தது. இதுவே எழுத்தாளனின் நடையில் உள்ள உயிர்ப்பண்பென்பது. நடை, எழுத்தாளனது அறிவையும் ஆன்ம உணர்வையும், கலைத் திறமையையும் கண்ணாடி போல் எளிதிற் காட்டும் தன்மையது.

மற்றும் எழுத்தாளன் தனது நடையைப் பொறுத்தவரை காலத்துக்கு மிகவும் கடமைப் பட்டவன் டாக்டர் ருதர் போர்டு என்பவர் "எழுத்தாளன் தனது இனத்தின் மொழியைத் தன் தனித் திறமையின் அளவிற்கேற்பக் கையாள்கிறான்" என்பர். இக்காலப் பண்பு அல்லது வரலாற்றுப் பண்புக்கு எடுத்துக் காட்டாகச் சங்க இலக்கிய நடை, சமய இலக்கிய நடை, மறுமலர்ச்சி நடைபோன்ற தமிழ்நடைகளைக்கொள்ளலாம். திரு.வி.க. அவர்களைப்பின்பற்றி எழுந்த உரைநடை எழுத்தாளர்களுள் டாக்டர் மு. வ. ஒருவர். அவரது நடை இன்று தமிழகத்தில் ஒளிவீசுகிறது. அவரது ஆக்கங்களைப் படிப்பதிலும், அதுபோன்று எழுத முயல்வதிலும் ஆயிரமாயிரம் தமிழ் இளைஞர் இன்று முனைகின்றனர். இரா. பி. சேதுப்பிள்ளை, அறிஞர் அண்ணாதுரை முதலியவர்கள் நல்ல அடுக்குமொழி நடையைப் போற்றினர். பெருங்கவிஞர் பாரதியார் சிறிய தொடர்களில் உணர்ச்சியைக் கொட்டிக் காட்டினர். தெ. பொ. மீ. அவர்களின் நடையில் ஒரு எதுகைக் குரல் மிடுக்கோடு மிளிரும்.

**நடையும், காலமும்:**

பத்தொன்பதாம் நூற்றுண்டில் ஆங்கில இலக்கிய உலகில் கருத்துக்கு இருந்த மதிப்பைவிட, நடைக்கு ஏற்பட்ட மதிப்பே உயர்வானது. இன்றைய தமிழகத்திலும் வெற்றுச் சொல்லணியையும் நடை மிடுக்கையும் காட்டியே இளைஞர்களைக் கவர்ந்த அரசியல் கட்சியைக்காண்கிறேம்; இந்தியா விடுதலை எய்துதற்கு முன்னரும் பின்னரும் பாடல்கள் இயற்றிய கவிஞர்களின் பாடல்களை எடுத்துப் பார்த்தால் விடுதலை இழந்திருந்த காலத்திலும் பெற்ற பின்னரும் மொழி நடையில் இயல்பாக அரிய மாற்றங்களை நுணுகி ஆராயமுடியும். காலாகாலங்களில் எழும் உணர்வுச் சக்திகளின் பயனுக இக் கூறுமுறை மாறுபடுகின்றது. சேக்சுபியரின் நாடகங்களில் இவ்வேறு பாட்டைக் காணலாம்.

நடை என்பது சென்ற காலத்து இலக்கியப் போக்கில் போலித் தன்மையோடு தற்காலத்திற்கேற்ற உணர்வை ஊட்டும் பண்பையும் கலந்து பெற்ற ஒன்றே என்பாருமுண்டு. ஹெரடாட்டஸ், சாசர், சான்சன் ஆகியோரின் ஆங்கில நடை காலத்தால் வேறுபட்டுத் திகழ்வது நாமறிந்த ஒன்றே.

**நடையும், நாடும்:**

அறிஞர் ஹட்ஸன் அவர்கள் நாட்டின் நடை (National Style) என்று ஒன்றைக் குறிப்பிடுகிறுர்கள். தமிழ்இலக்கணமான தொல்காப்பியம் தமிழ் நாட்டு எழுத்து நடைக்கு வழி காட்டுகின்றது. மேலைநாட்டுத் திறனய்வாளர்கள், பிரஞ்சு, இத்தாலி, கிரேக்கம், ஆங்கிலநாட்டு இலக்கியங்களின் தனிநடைகளைப்பற்றி எழுதியுள்ளனர். ஆங்கிலேயரான சேக்சுபியர் சில நாடகங்களில் பிரஞ்சு நாட்டு மொழி நடையையும், சிலவற்றுள் இத்தாலிய நாட்டு நடையையும் கையாண்டிருக்கிறுர். இந்தியாவில் வங்கமும் தமிழ்நாடும், தமக்கே உரித்தான தனி மொழி நடைகளால் பெயர் பெற்றுள்ளன. தெலுங்கு, மலையாளம், இந்தி போன்ற சார்பு மொழிகட்கு இத்தனி உயர்வு அவ்வளவாக இருப்பதில்லை.

**நடையும் இலக்கியமும்:**

முத்து, பவழம் மற்றும் மணி வகைகள் பலவற்றையும் வரிசையாக அடுக்கி வைத்துள்ளார்கள். அது வெகு அழகாக

இருந்தது. ஒரு குழந்தை தன் கையால் தொட்டதும் அடுக்கும் கலைந்தது. அழகும் சிதைந்தது. காரணம் அம்மணிகள் எந்தக் கம்பியிலும் கோர்க்கப்படவில்லை. மணி நிரலை அழகு குலையாமல் வரிசையிற் காக்கும்பொறுப்பு, பொற் சரடில் தங்குவதுபோல், இலக்கியத்தின் சிறப்பையும், மெருகையும் கோத்துக் கோத்து நிற்கும் பொறுப்பு எழுத்து நடையில் தங்குகிறது கம்பராமாயணம், சிலப்பதிகாரம், சிந்தாமணி போன்றன நடையிற் சிறப் பெய்திடன. மணிகளைக் கோத்திருக்கும் சரடு பஞ்சாலானதா பொன்னாலானதா, வெள்ளியாலானதா, என்பதற்கேற்ப அவ் வணியின் அழகு அமைவது போன்று, தனித்தனி எழுத்தாளரின் கலைத்திறமைக்கும், பொருண்மைக்கும் ஏற்ப இலக்கியம் சிறப் புறும். சொற்களின் தேர்வு, சொற்றொகுதியின் நிரவல், வாக்கிய அமைப்பு, இவற்றிற்கிடையே எழும் தொடை நலம் போன்றவற் றாலாய தொகைப் பண்பான நடையே இலக்கியத்துக்கு எடுப்பினைத் தருகின்றது. இலக்கியத்தின் சில பகுதிகள் அல்லது வரிகள் எளிதில் மனதைக் கவரும் எடுப்பினைப் பெறுதற்குக் காரணமாயிருப்பன கருத்தாலன்றி, அக்கருத்தைக் கூறும் நடையாலமைவன இயல்பு. திருவாசகக் கருத்துக்கள் இராமலிங்க அடிகளின் வாயிலாகச் சிறப்புச் செய்யப்பட்டன. கீதைப்பொருள்களும், ஔவைப் பாட்டும் மகாகவிபாரதியின் வாயில் மணந்தன.

இலக்கியத்தில் நடை உயிர்நாடியாகத் திகழ்கின்றது. ''பல்வேறு மொழிகளில் உள்ள இலக்கியங்களை மொழி பெயர்க்கை யில், அந்நடைகளை அப்படியே மொழி பெயர்க்க இயலுமா? என்பது வினா. இலக்கியத்தின் பொருள் மொழி பெயர்க்கையில் கவிஞனின் அல்லது எழுத்தாளனின் உள்ளத்தை நன்கு புரிந்து கொள்ளும் ஆற்றலும், இருமொழிகளிலும் புலமையும் இருந்து உள்ளுணர்வோடு செய்யின், ஓரளவு இந்நடையை உருவாக்கிக் காட்ட முயலலாம். செய்திகளை அழுத்திக் கூறும் இடங்கள், விளிகள், வினாக்கள், ஓசைமிகும் உணர்ச்சிக் கட்டங்கள் ஆயவற்றை மொழிபெயர்க்கும்போது, மொழிபெயர்ப்பாளன் காட்டும் திறமையைப் பொறுத்தே வெற்றியும் தோல்வியும். பண்டைத் தமிழர் பாடல் வகைகளை ஓசை வகையால் பிரித்

தறிந்தனர். அதுபோன்றே நடையை ஓசை நயத்தாலும் எளிதில் அறிய இயலும்.

**நடையின் பண்புகள்:**

நடையில் அறிவுப் பண்புகள், உணர்ச்சிப் பண்புகள், கலைப் பண்புகள் ஆய மூன்று பண்புகளும் கலந்திருப்பன. இவற்றில் கலைப்பண்பு என்பது இசைநயம், பெருமை, அழகு, இனிமை முதலியவற்றோடு கூடி இன்பம் பயப்பது. உணர்ச்சிப் பண்பென்பது வேகம், சக்தி, ஈடுபடுத்துதல் முதலியவற்றோடு இணைந்து வருவது. இத்தகைய மூன்று பண்புகளும் அவற்றின் கூறுபாடுகளும் கொண்ட இலக்கிய நடை, இலக்கியத்தில் உள்ள மற்ற அனைத்தையும் விழுங்கிவிட்டுத் தான் மட்டும் எல்லாமாகி வெளித்தோன்றிச் சிறப்பிக்கும் இயல்புடையதாகும். லீவி (Lewe) என்ற அறிஞர், நோக்குக, உருக்கம், அழகு போன்ற மூன்றும்நடையின்பண்புகள்என்பார். ஸ்பென்சர் அவர்கள் இலக்கியக் கூறுகளை ஆளுவதில் எழுத்தாளர் கையாளும் சிக்கன அளவைப் பொறுத்ததே அவனது நடையின் வெற்றி என்பார்.

**நல்ல நடை:**

படிப்பவனுக்குச் சோர்வை ஏற்படுத்தாத எல்லாமே நல்ல நடையுடையன என்பார் வால்டேர். எந்த வொன்றாயிருப்பினும், அது அதே மொழியின் பொருட்சிதைவோ, தரச் சிதைவோ இன்றி வேறுமுறையில் எழுதப்பட்டு விடுமாயின் அது தரம் குறைந்த நடையுடையது என்பார் கோல்ரிட்ஜ். கல்லை விட்டு எறிந்தவுடன் அது வேகமாகக் கீழே விழுவதுபோல, எழுத்தாளனிடமிருந்து தங்கு தடையின்றி விழுவதே நடை என்கிறார் தோரோ. உயர்ந்த முறையிலும், எளிய முறையிலும் அமைவதே நல்ல நடை என்பது ஜார்ஜ் மெரிடிக் அவர்களின் கருத்து. எல்லாவற்றிற்கும் அப்பாற்பட்டு, நல்ல பெரிய வீட்டிற்குப் பல வாயில்களும் சன்னல்களும் இருப்பன போன்று, பல்வகைச் சுவை ட்கும், இலக்கியப் பண்புகட்கும் வாயில்களைக் கொண்டு நிற்பதே நல்ல நடை எனக் கூறி முடிப்போம்.

**நடை கைவரப் பெற:**

பெருமைமிக்க எழுத்தாளரான மாத்யூ ஆர்னோல்டிடம்

இளைஞர்கள் சென்று, எவ்வாறு நல்ல நடையில் எழுதக் கற்றுக் கொள்ளுவது என்று கேட்டார்கள். அவர் "........பூ........அதில் என்ன இருக்கிறது. சொல்லுவதற்கு எதையாவது வைத்துக் கொள் அதை எவ்வளவு தெளிவாக உன்னுல் சொல்ல முடியுமோ அவ்வாறு சொல். அதுதான் நடையைப் பற்றிய இரகசியம்" என்ருர். பொதுவாக நல்ல நடை கைவரப் பெற, போதிய செல்வமும், கருத்து வளமும் கொள்ளத் தக்கவாறு படிக்க வேண்டும். இந்நடை இலக்கணத்தினின்றும் வேறுபட்டு ஆனுல் அதற்குக்கட்டுப்பட்டுவெளிவரும் ஒரு சுயக் கட்டுப்பாடா கும். இளநிலையில் உள்ளவர்கள் எழுதி எழுதிப் பார்த்துத் தம் மனம் நிறைவு பெறும்வரை எழுதினுல் தாருகவே நல்ல நடை கைவரும். இந்நடை நமது மூளையின் தூண்டுச் சக்தியின் பயிற்சிக் கேற்ப அமையும் ஒன்ருகையால் அது எழுத்தாளனின் குணநலத்தினின்றே உருவாகின்றது. இன்னும் சுருக்கமாகச் சொன்னுல், சொல்லுதற்கேற்ற கருத்து வளமும், சொல் வளமும் அற்றவரிடம் நல்ல எழுத்து நடை உருவாக வழி இல்லை. இவற் றிற்கிடையேதான் பிற மூளைப் பயிற்சி, ஊக்கம் போன்றவற்ரு லான தூண்டுதல்கள் செயல்படுகின்றன.

முடிவாக, இலக்கியம் சிறப்படைவது எழுத்து நடையால்; அந்நடை சிறப்படைவதும், அவ்விலக்கியம் இறவா நிலை எய்து வதும், கருத்து வளத்தாலும், சொல் வளத்தாலும்; அத்தகைய வளங்கள் பெற விரும்பும் எழுத்தாளன் நன்கு படித்து, அறிந்து சிந்தனை செய்து தெளிந்தவற்றை, ஊக்கமுடனும், உண்மை உருக்கத்துடனும், பிறருக்கு எளிதில் புரியும் வண்ணம் எழுத முயல்கையில், நல்ல இலக்கிய நடை என்பது எழுத்தாளனின் எளிய கைப்பொருளாகும் எனக்கூறி முடிப்போம்.

# புராணத் திருமலைநாதர்

—○—

மு. அருணசலம், எம். ஏ.,
திருச்சிற்றம்பலம்.

தமிழ் இலக்கியத்தில் புராணம் என்பது மிகவும் சிறப்பான ஒரு பகுதி. வெறும் புனைந்துரை என்று அவ்வளவையும் தள்ளி விடுதல் அறிவுடைமையாகாது. திருக்குறள் போன்ற நூல்கள் மக்களை நல்வழிப்படுத்தியது போலவே புராணங்களும் ஆங்காங் குள்ளமக்களுக்குத்தெய்வபக்தியைஊட்டித்தமிழ்ச்சுவை மூலமாக வும், தலக்கதைகள் மூலமாகவும் மக்களை நல்வழிப் படுத்தி வந்திருக்கின்றன. பெரிய புராணமும், கந்த புராணமும், பரஞ் சோதி செய்த திருவிளையாடற் புராணமும் சிறந்த தமிழ் இலக்கி யங்கள் என்பதை அனைவரும் ஒப்புக்கொள்வர். இவற்றால் தமிழ் மக்கள் வாழ்க்கையும் பண்பாடும் வளம் பெற்றிருக்கின்றன.

பெரும் புராணங்கள் செய்தோர் மிகப்பலர். கந்த புராணம் பாடிய கச்சியப்ப சிவாசாரியர், உபதேச காண்டங்கள் பாடிய இருவர், பரஞ்சோதி முனிவர், அதிவீரராம பாண்டியன் முதலா னோர் குறிப்பிடத் தக்கவர்கள். இவர்களுள் புராணத் திருமலை நாதர் என்பவரும் ஒருவர். ஏனையோர் போல அவ்வளவு சிறப்பாக இவர் பெயர் வழங்கவில்லை. பின்வரும் குறிப்புக்களால் இவருடைய வரலாறும், சிறப்பும் சிறிது விளக்கம் பெறலாம்.

இவர் 16-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த பெரும்புலவர். இவர் செய்த நூல்களாக இரண்டு நூல்கள் இக்காலத்தில் அச்சிடப் பட்டுள்ளன. ஒன்று சிதம்பர புராணம். மற்றது சொக்கநாதர் உலா.

சிதம்பர புராணமானது பத்துச் சருக்கங்களும், எண்ணூற்றுப் பதின்மூன்று திருவிருத்தங்களும் கொண்டது. திருமுறைகளிலும் பழைய தமிழ் நூல்களிலும் தல புராணங் களிலும் பிரபந்தங்களிலும் சைவ சாத்திரங்களிலும் பயிற்சி

யுள்ளவர். இவருடைய பக்தியையும் செய்யுள் செய்யும் நயத்தையும் அறிந்த தில்லை மூவாயிரவரும், யதிகளும் மற்ற பெரியோர்களும் சைவ புராணத்தின் ஒரு பகுதியாகிய சிதம்பர புராணத்தைத் தமிழ்ச் செய்யுள் நடையாக மொழி பெயர்க்கும்படி சொன்னமையால்அங்ஙனமே செய்ய உடன்பட்டனர். மலைநாட்டிலிருந்து வடமொழிப் பிரதியொன்றை வருவித்து அதனைக் கொண்டு அவர்கள் கூறியவண்ணம் மொழிபெயர்த்தனரென்றும் அப்பிரதியில் அப்புராணத்தின் பிற்பகுதி இல்லையென்றும், பின்பு அகப்படாமையால் அப்பகுதி இவராற் செய்யப்படவில்லை யென்றும், அது கிடைக்கவில்லையே யென்ற வருத்தம் இவருக்கு இருந்ததென்றும் தெரிகின்றது.

அப்புராணத்தைக் கேட்டு அதன் சொற்சுவை பொருட்சுவைகளை நன்ருக அறிந்த பெரியோர்கள் இன்புற்று இவரைப் புராணத் திருமலை நாதர் என்று சிறப்பித்து வழங்குவாராயினர். இதை நூலின் பாயிரத்துள்ள பின்வரும் பாடல்களால் அறியலாம்.

"ஆற்றல் சான்றமூ வாயிர மறையவர் அரனுக்கு
ஏற்ற தொண்டர்கள் மறைநெறி யெதிகளா யுள்ளோர்
போற்றருஞ்சிதம் பரத்திடைப் புகழினைத் திகழச்
சாற்றவாய்வட மொழிவழித் தமிழிஞல் என்ருர்."

"சூழுமாகடற் புடவியாள் சுடர்முடிச் சகற்குஈ
ரேழு நூறுடன் முப்பஃ தியைந்தவாண் டெல்லைத்
தாழுமாமதிச் சடைமுடித் தனிமுத லென்றும்
வாழு மம்பலப் பெருமையை வழுத்தலுற் றனன்யான்"

இவற்ருல் இதனை மொழி பெயர்த்த காலம் சகாப்தம் 1430 என்றும் தெரிகிறது. இவ்வாண்டு கி. பி 1526. மேலும் நூலின் இறுதியில் உள்ள ஒரு பாடல் இம் மூல நூல் பற்றிய கருத்தைக் கூறுகிறது.

"இந்த எல்லை மலைநாட் டிடத்திலும்
வந்த தெய்வ வடமொழி யெப்படி
செந்தமிழ்த் தொடை யாப்பால் தெரித்தனம்
முந்து மற்றதும் வந்தால் மொழிதுமால்."

அடுத்துச் சொக்கநாதர் உலாவில் காணும் சில செய்திகள் இங்குச் சிந்திக்கத் தக்கன. பின்வரும் சிறப்புப் பாயிரங்கள் இரண்டும் ஆசிரியர் பெயரையும், ஆதரித்த அரசனையும் குறிப்பிடும்.

"சீரார் புராணத் திருமலைநா தன்கருணைப்
பாராளன் மெய்ஞ்ஞானப் பால்விளங்க—ஆராய்ந்து
வேதக் குலாவால் விரித்தால்வாய்ச் சொக்க
நாதர்க் குலாப் பாடினன்."

"வேதநூற் றென்முறைமை வீரமா றன்கடல்சூழ்
பூதலங்க ளன்பாய்ப் புரக்குநாள்—ஆதிநெறித்
தெய்வ மதுரைத் திருவால வாயுறைந்த
ஐயருலாக் கொண்டருளி னர்."

வீரமாறன் என்ற பாண்டியன் ஆட்சிக்காலத்தில் புராணத் திருமலைநாதர் சொக்கநாதர் உலாப் பாடினர் என்று அறிகிறோம். இப்பாண்டியனை இவர் உலாவில் குறிப்பிட்டுக் கூறியுள்ளார்.

"மதுரா புரேசற்கு வைதிக சைவ
விதியாரப் பூசை விளக்கிப்—பதியுறையும்
மன்னன் குடைவீர மாறன் குலதிலகன்
தென்னன் செழியன் செகதீரன்—முன்னை
ஒருநாள் மறைவிதியா லுற்றருளாற் கண்ட
திருநாளி லங்கோர் தினத்தில்"

இங்குக்குறிப்பிட்ட வீரமாறன் 1473 முதல் அடுத்த நூற்றாண்டின் தொடக்கத்தின் பின்னும் தென்பாண்டி நாட்டை ஆண்ட சடிலவர்மன் பராக்கிரமபாண்டியன் ஆவான். அன்றியும் உலாவில், நாயகன் என்னும் மண்டபத்தையும் முத்தளக்கும் திருவாயில் என்ற அவர் வாயிலையும் குறிப்பிட்டிருக்கிறார். (கண்ணிகள் 48, 144) இவை இரண்டும் குத்தியூர் சின்னப்ப நாயக்கர் கட்டியவை என்று திருவாலவாயுடையார் கோயில் திருப்பணி மாலை 37ஆம் செய்யுள் தெரிவிக்கிறது.

"மருவியசொக் கருக்கினி தாம்பூசை சந்தி
மண்டபங்க ணயகனு யகத்துப் பத்தி

யருண் மீகுசின் னிச்சுரமுத் தள்க்கும் வாயி
லகவணைகள் புறவணைக ளன்பாற் செய்தான்
ஒருமைதிகழ் மல்லைய சின்னப்ப பூப
னேங்கு புகழ் சேர்க்குத்தி யூரன்றனே.''

இத்திருப்பணியின் காலம் சகம் 1448, கி. பி. 1526. எனவே இதற்குப் பின்னரே திருமலைநாதர் இவ்வுலாப் பாடியிருக்கிறார் என்பது தெளிவு. இவற்றால் நாம் அறிவது இந்நூல்கள் செய்த புராணத் திருமலை நாதர் 16ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்திருந்தார் என்பதாகும்.

இவருடைய பெயர் புராணத் திருமலைநாதர் என்றே எல்லா இடங்களிலும் குறிப்பிடப் பட்டுள்ளது. இவர் புதல்வரான பரஞ்சோதி என்பவர் சிதம்பரப் பாட்டியல் என்ற ஒரு பாட்டியல் இலக்கண நூல் பாடினார். அதன் சிறப்புப் பாயிரங்கள் பின்னே வருவன.

''பூமன்னு பொழில் வெண்ணெய் மெய்கண்டான் கச்சிப்
புகழ்புனைத் துவஞானப்ரகாச மாய்வந்து
பாமன்ன வுரையென்ன அவனருளால் அவன்றன்
பதம்பரவிச் சிதம்பரப்பாட் டியலெனப்பேர் வகுத்-
தான்
மாமன்னு சிதம்பரபு ராணமுத னூலும்
மதுரையுலா வும்பகர்ந்தோன் மருவுகுல மைந்தன்
தேமன்னு புராணகலை பலதெரி புராணத்
திருமலை நாயக னருளின் றேசுபூண் டோனே.

''சிதம்பரப் பாட்டியலைச் செய்தான் தமிழாற்
சிதம்பர புராணமுதற் செய்து—விதம்பெறுசீர்
சேர்ந்த புராணத் திருமலைநா தன்தவத்தாற்
சார்ந்தபரஞ் சோதியென்பான் தான்.''

இங்குங்கூடப்,பரஞ்சோதியின் தந்தைபெயரைக்குறிப்பிடும் போது, புராணத் திருமலைநாதன் (நாயகன்) என்றே குறிப்பிட்டிருக்கக் காண்கிறோம். இங்ஙனம் சிறப்புப் பாயிரங்கள் அனைத்திலும் இவர் பெயர் புராணத் திருமலைநாதர் என்றே குறிப்பிடப்

பட்டுள்ளமை சிந்திக்கத் தக்கது. புராண என்ற அடைமொழி இவர் பெயரின்முன் சேர்க்கப் பெற்றிருந்தமைக்குக் காரணம் ஆராயத் தகுந்தது. சிறப்பான பல புராணங்கள் பாடியிருக்க வேண்டும் என்று நாம் யூகிக்கலாம்.

16ஆம் நூற்றுண்டுப் புலவர் வரலாறு எழுதிய சோமசுந்தர தேசிகர், "இவர் புராணப் பிரசங்கம் செய்தலில் வன்மை யுடைமையாற்போலும், புராணத் திருமலை நாதர் என்று அழைக் கப்பட்டார்" என்று குறிப்பிடுகிருர். இது பொருத்தமுடைய தாய்த் தோன்றவில்லை. பிரசங்கம் செய்தவர்கள் புராணிகர் என்று சொல்லப்பெற்று வாழ்ந்தார்கள். மெய்ப்பாத புராணிகர், புராணிகர் சோணசல பாரதி என்ற இலக்கிய ஆசிரியர் பெயர் களைக் காண்க. அங்ஙனமன்றி இவர் புராணத் திருமலை நாதர் என்று சொல்லப் பெற்றமையால் புராணங்கள் பாடியே புகழ் மிகுந்த இப்பெயர் பெற்ருர் என்று நாம் கருத வேண்டும்.

சைவ புராணத்துள் ஒரு பகுதியாகிய சிதம்பர புராணம் என்பதில் கிடைத்த அளவு மலைநாட்டு ஏட்டுப் பிரதியிலிருந்து மொழிபெயர்த்து வைத்துக்கொண்டு இவர் புராணம் பாடினர் என்றும், மேலும் வடநூல் கிடைத்தால் பாடுவோம் என்று கூறினர் என்றும் முன்னமே கண்டோம். சைவ புராணம் என்பது வடமொழிச் சிவமகாபுராணம் இதை வடமொழியிலிருந்து தமிழில் வசனமாக மொழிபெயர்த்து ஈக்காடு இரத்தினவேலு முதலியார் 1900இல் வெளியிட்டார். வடமொழி வாயு சங்கிதை யில் நான்காவதாகிய சைவ புராணத்தில் 12 சங்கிதைகள் உள்ளன என்றும், அவற்றின் அளவு இலட்சங்கிரந்தம் என்றும் சொல்லப்பட்டுள்ளது. பம்பாய் வடமொழிப் பதிப்பில் ஏழு சங்கிதைகள் உள்ளன. ஆனல் தமிழ்நாட்டில் வழங்கும் சைவ புராணத்தில் 6 சங்கிதைகளே உள்ளன. தமிழ் மொழி பெயர்ப் பிலும் 6 சங்கிதைகள் காணப்படுகின்றன. பொருத்தமில்லாதன என்று சில பகுதிகளை இரத்தினவேலு முதலியார் விலக்கி விட்டார் போலும்.

இம்மகாபுராணத்தைத் தமிழ் வசனத்தின் துணைகொண்டு கோயமுத்தூர் வேலாயுத பண்டிதர் என்பவர் செய்யுள் வடிவாக்கி

இரண்டு சங்கிதை, 21 அத்தியாயங்கள், 1909இல் வெளியிட்டார். ஞானசங்கிதை 1857 செய்யுள், தர்ம சங்கிதை 1174 செய்யுள்.

சிவமகாபுராணத்தில் மற்றொரு பகுதியாகிய வாயு சங்கிதையை 1319 செய்யுட்களாகக் குலசேகர வரகுணராம பாண்டியர் 16ஆம் நூற்றாண்டில் மொழி பெயர்த்திருந்தார். இந்நூல் 1889இல் அச்சிடப்பட்டது. வடமொழிப் புராணம் எவ்வளவு விரிந்தது என்பதைக் காட்டவே இவற்றைக் குறிப்பிட்டோம்.

இவ்வளவு பெரிதாகிய சிவ மகாபுராணத்தில் ஒரு பகுதி மட்டுமன்றி, நூல் முழுமையுமே நம் திருமலைநாதர் மொழி பெயர்த்துப் பாடினார் என்றும், அப்பாடற் பெருமை காரணமாகவே புராணத் திருமலை நாதர் என்று வழங்கப் பெற்றார் என்றும் நாம் கருத இடமுண்டு. தஞ்சை அரண்மனை சரசுவதி மகால் புத்தகசாலையில் 279 என்ற எண்ணுள்ள புராணஏடானது இவ்வாறு நாம் கருதுவதற்கு இடங்கொடுக்கிறது. இவ்வேட்டில் சரபபுராணம், ததீசிப் புராணம், வினா விடைப் புராணம் என்ற மூன்று பகுதிகள் ஒருசேர உள்ளன. (279 a, b, c) முதற் பகுதியான சரபு புராணமானது சிவபெருமான் சரபாவதாரம் எடுத்து நாரசிங்கத்தை அடக்கிய வரலாறு கூறுகிறது. இரண்டாம் பகுதி ததீசி முனிவர் இந்திரன் வச்சிராயுதம் செய்வதற்காகத் தமது முதுகெலும்பைக் கொடுத்த வரலாற்றைக் கூறுகிறது. மூன்றாம் பகுதி, அகத்திய முனிவர் வினவிய வினாக்களுக்கு முருகப் பெருமான் கூறிய விடையாக உள்ளது.

ஏட்டின் இறுதியில் "சிதம்பர புராணம் அருளிச் செய்த திருமலை நாயனார் அருளிச் செய்த சிவபுராணத்தில் வினவிடைப் புராணம் முற்றும்" என்று எழுதப்பெற்றுள்ளது. இத் திருமலை நாயனார் ஆவார் திருமலை நாதரே. இக்குறிப்பினால் நாம் அறிவது இம்மூன்று புராணங்களையும் பாடியவர் திருமலை நாதர், இவரே சிதம்பர புராணமும் பாடினார், இம்மூன்று புராணங்களும் சிவ புராணத்தின் பகுதிகள் என்ற செய்திகளாகும். எனவே, இத் திருமலை நாதர் சிதம்பர புராணம் உட்படச் சிவமகாபுராணத்திலிருந்து நான்கு பகுதிகளைத் தமிழில் பாடியிருக்கிற செய்தி

அறிகிறோம். சிதம்பர புராணம் நீங்கலாக மற்ற மூன்று பகுதிகளும் இதுவரை அச்சாகவில்லை.

இவற்றை நாம் கருதும்போது, திருமலை நாதர் இந்த நான்கு பகுதிகளையும் உள்ளடக்கிய சிவமகாபுராணம் முழுமையும் அன்று கிடைத்த அளவு, தமிழில் மொழி பெயர்த்திருந்தார் என்றும், சிவ மகா புராணத்தை மொழி பெயர்த்தமை காரணமாகப் புராணத் திருமலைநாதர் என்று அடைகொடுத்து வழங்கப் பெற்றார் என்றும் கருத இடமுண்டு. பிற பகுதிகள் இன்று கிடைக்கவில்லை.

இனி, இவர் மெய்கண்ட பரம்பரையில் தொடர்பு கொண்டவர் என்பதையும் நாம் அறிகிறோம். முன்னமே குறிப்பிட்ட "பூமன்னு பொழில் வெண்ணெய்" என்ற பாடலால் "வெண்ணெய் மெய்கண்டார்; கச்சியில் தத்துவஞானப் பிரகாசராய் வந்து பாமன்ன உரை என்று சொல்ல, அவன் அருளால் திருமலை நாதன் புதல்வன் பரஞ்சோதி சிதம்பரப் பாட்டியல் செய்தான்" என்று அறிகிறோம். மெய்கண்டார் வழியில் சிற்றம்பல நாடிகள் 1325-50இல் வாழ்ந்து சைவ பரம்பரையை வளர்த்தார். அவர் மாணக்கருள் கச்சி ஞானப்பிரகாசர் ஒருவர். இவரும் இவருடைய மாணக்கர் கண்ணப்பர் என்பவரும் சித்தர் காட்டில் சிற்றம்பல நாடிகளோடு கூட ஏக காலத்தில் சமாதி கொண்டார்கள் என்பது வரலாறு. நாடிகள் சமாதியடையும் காலம் நெருங்கிய துணர்ந்து, கச்சி ஞானப்பிரகாசர் என்ற பெயரையே சூட்டி ஆசாரிய அபிடேகம் செய்து, அவரைக் காஞ்சியில் தாம் இருந்த இடத்தில் தலைவராக்கினர். கண்ணப்பரை உடன் கொண்டு தாம் சித்தர் காடு அடைந்தார். இந்த இரண்டாவது ஞானப்பிரகாசர் தொடங்கியே காஞ்சி ஞானப் பிரகாசம் ஆதீனம் வழங்கிவருகிறது. இவருடைய காலம் கி பி. 1400 ஆகலாம் இவருக்குப் பின்வந்த ஆசாரியர்கள் ஞானப் பிரகாசர் என்றே பெயர் கொண்டிருந்தார்கள். இவர்களுள் ஒரு ஞானப்பிரகாசர் கிருட்டிணதேவராயர் காலத்தில் வாழ்ந்து அவர் மீது மஞ்சரிப்பாப் பாடியிருக்கிறார் இதற்காக இராயரிடம் பல விருதுகளும்பெற்றிருக்கிறார். இவரே பரஞ்சோதியைச் சிதம்பரப் பாட்டியல் பாடச் சொன்னவர். "பூமன்னு பொழில்

வெண்ணெய்'' என்ற பாடலால் இது தெளிவாகிறது. இவருக்கு முன்னிருந்த ஞானப் பிரகாசர் வழியாகப் புராணத் திருமலை நாதரும் உபதேச சம்பந்தம் பெற்றிருக்கலாம் என்று நாம் கருதக்கூடும்.

இதுகாறும் நாம் கூறியவற்றால், திருமலைநாதர் மெய்கண்ட பரம்பரையில் காஞ்சி ஞானப்பிரகாசராதீனத்தில் உபதேசம் பெற்றிருந்த பெரும் புலவர் என்பதும், சொக்கநாதர் உலாப் பாடினர் என்பதும் சிவ மகா புராணம் என்ற பெரு நூலைத் தமிழில் பாடிய சிறப்பினால் இவருக்குப் புராணத் திருமலை நாதர் என்ற சிறப்பான பெயர் வழங்கலாயிற்று என்பதும், பல பகுதி களாக அப்புராணத்தில் சிதம்பர புராணம் என்ற ஒரு பகுதி மட்டும் அச்சாகி இருக்கிறது என்பதும் மூன்று பகுதிகள் அச்சாகாமல் இன்று கிடைக்கின்றன என்பதும், இவர் காலம் 16ஆம் நூற்றாண்டின் முற்பகுதி என்பதும் தெளிவாகும்.

# பரணிக்கோர் சயங் கொண்டான்

மு. வை. அரவிந்தன். எம். ஒ. எல்.,
( தமிழ்த்துறை, அண்ணுமலைப் பல்கலைக் கழகம். )

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே தமிழகத்தில் இலக்கியக் கலை தோன்றிச் சிறப்புடன் விளங்கியிருக்கிறது. முற்காலத் தமிழ் இலக்கியங்கள் வாழ்க்கையை அடிப்படையாகக் கொண்டு உயிருள்ள இலக்கியமாகத் திகழ்கின்றன. பழந்தமிழ்ப் புலவர்கள் மக்கள் உள்ளத்தில் தோன்றும் உணர்ச்சிகளையும், அக்காலத்தில் நிகழ்ந்த புறநிகழ்ச்சிகளையும் நன்றாக அறிந்து அவற்றைப்பற்றிப் பாடினர்; இலக்கியம் செய்தனர். அகநிகழ்ச்சிகளைக் கூறும் பாக்களை அகத்திணை இலக்கியம் என்றும், புறநிகழ்ச்சிகளை விளக்கும் பாக்களைப் புறத்திணை இலக்கியம்என்றும் கூறினர். ஒவ்வொரு திணையையும் பல துறைகளாசப் பகுத்தனர்.

பின்னர்க் காலப் போக்கில் இலக்கிய உலகில் பல மாறுதல்கள்ஏற்பட்டன, புலவர்கள் அகத்தையும்,புறத்தையும்பற்றித் தனித்தனிப் பாக்கள் பாடுவதைக் கைவிட்டுக் காவியம் எழுதத் தொடங்கினர். காவியங்களில் வேண்டிய இடங்களில் அகத்திணைக் காட்சிகளையும் புறத்திணை நிகழ்ச்சிகளையும் அமைத்துக் கொண்டனர். அகப் பொருளை நாடகமாக அமைத்துக் கோவை பாடினர்; தாம் விரும்பும் அகத்திணைத் துறை ஒன்றிற்கு ஒரு நூல் செய்யும் பழக்கத்தை மேற்கொண்டனர். காதல், தூது, மடல்,குறவஞ்சிமுதலியசிற்றிலக்கியங்கள் அகத்திணைத் துறைகள் சிலவற்றை அடிப்படையாகக் கொண்டு எழுந்தவையாகும். இவ்வாறே புறத்திணைத் துறைகள் சிலவற்றைப் பற்றியும் தனித் தனிச் சிறுநூல்கள் எழுந்தன. ஆற்றுப்படை, களவழி, பரணி முதலிய சிறுநூல்கள் புறப் பொருள் துறைகள் சிலவற்றை விரித்துரைக்கின்றன.

போர்க்களத்தில் இறந்த மன்னர்களின் முடியை அடுப்பாகவும், தலையைத் தாழியாகவும் கொண்டு குருதிப் புனலாகிய உலையில் இறந்தவர்களின் தசை மூளை முதலியவற்றைப் பெய்து, தொடித் தோளைத் துடுப்பாக்கிக் கொண்டு, உணவு சமைத்துப் பேய்கள் உண்டுகளிக்கும் என்று புறப்பொருள் நூல்கள் கூறுகின்றன. பசியால் வாடிய பேய்கள் வயிறார உண்டபின், தம் பெரும் பசியைப் போக்கிய வெற்றி வேந்தனை வாழ்த்தி அவன் புகழைப் பாடி ஆடுவதுண்டு. இதை,

"முடித்தலை அடுப்பிற் பிடர்த்தலைத் தாழித்
தொடித்தோள் துடுப்பின் துழைஇய ஊன்சோறு
மறப்பேய் வாலுவன் வயினறிந் தூட்டச்
சிறப்பூண் கடியினம் செங்கோற் கொற்றத்(து)
அறக்களம் செய்தோன் ஊழி வாழ்கென
மறக்கள முடித்த வாய்வாட் குட்டுவன்"

என்று சிலப்பதிகாரம் கூறும். இந் நிகழ்ச்சியைப் புறத்திணை நூலோர் மறக்களவேள்வி என்ற துறைக்கீழ்க்குறிப்பிட்டுள்ளனர். மறக்கள வேள்வியைப்பற்றிப் பழம் புலவர்கள் மிகச் சுருங்கிய அளவில் பாடியுள்ளனர். ஆனால் பன்னிரண்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த ஒரு புலவர் அத்துறையை மிகவும் விரிவாக விளக்கிப் பெருநூல் இயற்றினர். இலக்கிய உலகிற்குப் பரணி என்ற புது வகையான நூலைப் படைத்து வழங்கினர். அவர் காட்டிய புது வழியைப் பல புலவர்கள் பின்பற்றிப் பரணி பாடினர். அவர் செய்த நூலின் அமைப்பு முறையும், கட்டுக் கோப்பும் பாவகையும் பரணி நூல்களுக்கு இலக்கணமாகிவிட்டன.

தமிழ் இலக்கிய உலகிற்குப் பரணி நூலை முதன் முதலில் வழங்கியவர் செயங்கொண்டார் என்னும் புலவர் ஆவார். அவர் சோழமன்னன் முதற் குலோத்துங்கனுடைய அவைப்புலவராய் இருந்தார் என்றும், அவர் வாழ்ந்த காலம் (குலோத்துங்கன் காலம் (1078—1118) பன்னிரண்டாம் நூற்றாண்டின் முற்பகுதி என்றும் சோழ நாட்டில் நன்னிலத்தை அடுத்த தீபங்குடியில் தோன்றினர் என்றும் அறிஞர்கள் கூறுகின்றனர்.

சோழ மன்னன் தனக்குக் கீழ்ப்பணிந்து கப்பங்கட்ட மறுத்த கலிங்கநாட்டு மன்னன் அனந்தபத்மனைப் போரில் (கி. பி. 1111 அல்லது 1112-ஆம் ஆண்டில்) புறங்கண்டு வாகைசூடினான் மன்னன் பெற்ற வெற்றியைக் கேட்டு இன்புற்ற புலவர் அவனது வெற்றியைப் புகழ்ந்து 'கலிங்கத்துப் பரணி' என்ற நூலை இயற்றினார்.

## அறிமுகம்

கலிங்கத்துப்பரணியை ஒட்டக்கூத்தர் தெய்வப்பரணி என்று புகழ்ந்துள்ளார். "பரணிக்கோர் சயங்கொண்டான்" என்று அந்நூலாசிரியரை வேறொரு புலவர் புகழ்ந்துள்ளார்.

கலிங்கத்துப்பரணி கலித்தாழிசையால் பாடப்பட்டிருக்கிறது.

இந்நூல் கடவுள் வாழ்த்து, கடைதிறப்பு, காடுபாடியது முதலிய பதின்மூன்று உட்பிரிவுகளை உடையது. ஒவ்வொருபகுதியிலும் புலவர் சோழ மன்னனைச் சிறப்பித்துப்பாடியுள்ளார்.

கடவுள் வாழ்த்தில் புலவர் தாம் வணங்கும் தெய்வத்தோடு பாட்டுடைத் தலைவனைத் தொடர்புபடுத்திப் பாடுகிறார். மன்னன் நெடிதிருந்து இனிதுவாழ வேண்டும் என்று தெய்வங்களை வாழ்த்துகின்றார்.

கடைதிறப்பில், கதவைத் தாழிட்டுக்கொண்டு உறங்கும் மகளிரைக் கலிங்க நாட்டு வெற்றியைக் கேட்கக் கதவைத் திறக்குமாறு வேண்டுகிறார்.

காளிதேவி உறையும் காட்டை மிகச் சுவையாகப் பாடுகிறார் புலவர். காட்டில் பொரிந்த காரை, கரிந்த சூரை, எரிந்த வீரை, உலர்ந்த வெள்ளில், வற்றிய வாகை-முதலிய பலவகை மரங்கள் நிற்கின்றன. பாலை நிலம்,

செந் நெருப்பினைத் தகடு செய்துபார்
செய்த தொக்குமச் செந்தரை

என்று கூறும்படி வெப்பமுடையதாக இருக்கின்றது. அங்குள்ள

வெடித்த மூங்கிலிலிருந்து உதிரும் முத்துக்கள் பாலைநிலத்தின் உடலில் தோன்றிய கொப்புளங்களை ஒத்திருக்கின்றன.

அக்கொடிய காட்டில் காளிதேவிக்குக் குலோத்துங்க சோழன், போரில் இறந்தவர்களின் தசை, குருதி, எலும்பு முதலியவற்றைக்கொண்டு ஒரு கோயில் அமைத்திருக்கின்றான். கோயிலைச் சுற்றி நின்று வீரர்கள் தேவியை வழிபடுகின்றனர். அவர்கள் தங்கள் தலைகளை அறுத்துத் தேவியின் கையிற் கொடுக்கின்றனர்.

அடிக்கழுத்தின் நெடுஞ்சிரத்தை அரிவ ராலோ
அரிந்தசிரம் அணங்கின்கைக் கொடுப்ப ராலோ
கொடுத்தசிரங் கொற்றவையைப் பரவு மாலோ
குறையுடலங் கும்பிட்டு நிற்கு மாலோ

தலைகள் மூங்கில்களில் தொங்கிக்கொண்டிருக்கின்றன. பிணங்களைக் கழுகும், பேயும், நரியும் தின்று களிக்கின்றன.

தேவியைப் பாடியது: அத்தகைய கோயிலில் காளிதேவி வீற்றிருக்கின்றாள். தேவியின் உருவத்தைப் புலவர் பலவாறு சிறப்பித்து அவள் பெருமையை விளக்குகிறார். நான்முகன், இந்திரன், விநாயகன், முருகன் ஆகிய நால்வரையும் தேவி ஈன்று புரந்தவள்.

பேய்களைப் பாடியது: தேவியைச் சுற்றிலும் பேய்கள் நிற்கின்றன. பனைமரம் போன்ற கைகால்கள், குகை போன்ற வாய், நீராப் பெரும்பசியால் வாடும் வயிறு, உள் ஒடுங்கி ஒட்டிய கன்னங்கள் – இவற்றையுடைய பேய்களின் தோற்றத்தைப் புலவர் நன்கு விளக்குகின்றார்.

பாந்தள் நால்வன போலும் உடல்மயிர்
பாசிபட்ட பழுந்தொளை மூக்கின
ஆந்தை பாந்தி யிருப்பத் துரிஞ்சில்புக்
கங்கு மிங்குமு லாவுசெ வியன
கொட்டி மேழியுங் கோத்தன பல்லின
கோம்பி பாம்பிடைக் கோத்தணி தாவிய
தட்டி வானைத் தகர்க்கும் தலையின
தாழ்ந்து மார்பிடைத் தட்டுமுதட்டின.

பேய்களில், கூன் உண்டு; குருடு உண்டு; செவிடும் ஊமையும் உண்டு. குறுமோடி, நிணமாலை, கூர் எயிறி, கலதி, நீலி என்பன பேய்களின் பெயர்கள்.

இந்திர சாலம்: முன்பு குற்றம் செய்துவிட்டு இமயத்திற்கு ஓடி ஒளிந்துகொண்ட முதுபேய் ஒன்று வருகிறது. அது காளி தேவியை வணங்கி அங்குத் தான் கற்றுவந்த இந்திரசாலம் வித்தையைக் காட்டுகிறது. பேய்கள் கண்டு மகிழ்கின்றன.

இராசபாரம்பரியம்: அம்முதுபேய், நாரதர் அறிவுரையின்படிக் கரிகாலன் இமயமலையில் எழுதியிருந்த சோழர் வரலாற்றைக் கற்றுணர்ந்து தேவிக்கு விரித்துரைக்கின்றது. இப்பகுதி வரலாற்றாராய்ச்சிக்குப் பயன்படுகிறது.

பேய்முறைப்பாடு: பேய்கள் காளிதேவியிடம் திரண்டு சென்று தம் பசியின் கொடுமையைக் கூறி அழுகின்றன:

"பாவியேம் பசிக் கொன்றில் லேம்"

"பதடிகளாய்க் காற்றடிப்ப நிலைநி லாமற்
பறக்கின்றேம் பசிக்க லைந்து!"

—பெரும்பசியான்

"அறவுலர்ந்து நெற்று யற்றேம்!"

உடனே முதுபேய் வட கலிங்க நாட்டில் தான் கண்ட தீநிமித்தத்தை உரைக்கின்றது. உடனே சோதிடப் பேய்கள் கனவு நிகழ்ச்சியையும் தீநிமித்தத்தையும் ஆராய்ந்து "குலோத்துங்கன் மத யானைகள் போருக்கு நிற்பதால் கலிங்க நாட்டில் பரணிப் போர் நிகழும்" என்று கூறுகின்றன. மற்றப் பேய்கள் கேட்டு மகிழ்கின்றன.

அவதாரம்: திருமாலின் அவதாரமாகக் கருதப்படும் குலோத்துங்க மன்னனின் பெற்றோர், பிறப்பு, வளர்ப்பு, கல்வி கற்றல், படை பயிலுதல், முடிபுனைதல், அரசாட்சிச் சிறப்பு முதலியவற்றை முதுபேய் கூறுகின்றது.

காளிக்குக் கூளி கூறியது: சோழன் பல இடங்களிலும் வேட்டையாடிக் காஞ்சிபுரம் வந்தடைந்தான். வேந்தர் பலர் தம் தம் திறைகளைச் செலுத்தி வணங்கி நின்றனர். கலிங்க வேந்தன் மட்டும் திறைசெலுத்த வராமை கண்டு சோழன் தன் படைத் தலைவன் கருணாகரத் தொண்டைமானைக் கலிங்க நாட்டின் மீது படையெடுத்துச்செல்லக் கட்டளை இட்டான்.

சோழன் படைகள் விரைந்து சென்று கலிங்க நாட்டை அழித்தன. கலிங்க மன்னன் தன் அமைச்சர் அறிவுரைகளையும் மதியாது போர்புரியத் தொடங்கினான்.

போர் பாடியது: இப்பகுதியில் புலவர் போரை மிகவும் சிறப்பித்துக் கற்போர் கண்முன் போர் நிகழ்ச்சிகளைக் காட்டுகின்றார்.

"வெங்களிற்றின் மத்தகத்தின் வீழுமுத்து வீரமா
மங்கையர்க்கு மங்கலப் பொரிச்சொரிந்த தொக்குமே"
"கவந்த மாட முன்பு தங்க ளிப்பொ டாடு பேயினம்
நிவந்த வாட லாட்டு விக்கு நித்த கார ரொக்குமே!"

கலிங்கர் தோற்று ஓடுகின்றனர். கலிங்க மன்னன் அனந்தபத்மன் ஒரு குன்றில் சென்று மறைந்துகொள்கிறான். சோழன் படைகள் இரவு முழுதும் அக்குன்றை வளைந்து நின்று, பொழுது விடிந்ததும் போர் தொடங்கி மன்னனை வீழ்த்துகின்றன.

களம் பாடியது:

"தேவாசுர ராமாயணம் மாபாரதம் உளவென்
றோவாவுரை ஓயும்படி உளதப்பொரு களமே!"

காளிதேவி பேய்களுக்குப் போர்க்களத்தைக் காட்டுகிறாள் களத்தில் குவிந்து கிடக்கும் பிணத்தையும், செந்நீர் வெள்ளத்தில் மிதக்கும் யானைகளையும், இன்னும்கண்டுவியக்கும் பலகாட்சிகளையும் காளிதேவி காட்டுகிறாள்.

பேய்கள் கூழடுதல்: யானைக் கொம்பால் பல் துலக்கி, களிற்றின் மதத்தைப் பூசி, வெண்மூளையைக்கொண்டு தலையைத்

தூய்மை செய்து குருதி வெள்ளத்தில் பேய்கள் நீராடுகின்றன. வெண்கொழுப்பை ஆடையாக உடுக்கின்றன. யானை, குதிரைகளின் அணிகளை எடுத்து அணிகின்றன. பின்னர்ப் பருந்து நிழலின் கீழ், யானைப் பிணங்களின் மேல் அடுப்பு அமைக்கின்றன. யானை வயிற்றைப் பானையாகக்கொண்டு, வீரர்களின் வெண் மூளையையும், செந்நீரையும், ஊனையும் அதில் பெய்து சமைக்கின்றன.

கூழுக்கு உலையரிசி வேண்டுமல்லவா? பெண்பேய்கள் வீரர்களின் பற்களைக்கிழிந்த முரசங்களில் இட்டு, யானைக்கொம்பால் குலோத்துங்க சோழன் புகழை வள்ளைப்பாட்டாகப் பாடிக்கொண்டு குற்றுகின்றன.

"முடியினால் வழிபட்டு மொழிந்த திறைஇடா வேந்தர்
அடியினால் மிதிபட்ட அருவரை நூறாயிரமே"

பேய்கள் கூழைப் பக்குவமாய்ச் சமைத்து இறக்குகின்றன. இறந்த மன்னர்களின் கேடயங்களையும் மண்டையோடுகளையும் உண்கலங்களாகக் கொண்டு, வரிசை வரிசையாக உட்கார்ந்து உண்ணுகின்றன. விருந்தினர், துறவோர், அறவோர் ஆகியவர்களை (பேய்கள்) ஓம்பியபின் உண்டு மகிழ்கின்றன.

பசி தீர்ந்தபின் களியாட்டம் தொடங்கிவிடுகிறது பேய்கள் ஓடி ஆடி மகிழ்கின்றன துள்ளிக்குதிக்கின்றன. சோழன் படைக்குத் தோற்ற பாண்டியர் ஓடியதையும், கலிங்கர் உயிர் பிழைக்கப் பயந்து குகையில் பதுங்கியதையும் நடித்துக் காட்டுகின்றன. சோழமன்னனை வாழ்த்தி மகிழ்கின்றன.

மணிமுடி:

ஒரு நூலுக்கு அதன் தலைப்பு மணிமுடி போன்றது. தலைப்பு நூலுக்கு அழகு தருவதோடு மட்டுமல்லாமல் நூலைக் கற்க வேண்டும் என்ற ஆவலையும் உண்டாக்குகிறது. நூலில் கூறப்படும் கருத்து யாது என்று எண்ணத் தூண்டுகிறது. நூலின் கருத்து முழுவதையும் நூலாசிரியன் அதன் தலைப்பில் பொதிந்து வைக்கின்றான். நூலின் தலைப்பு மக்களுடைய வாயில் பலமுறை உருள வேண்டியுள்ளது. ஆதலின் தலைப்பு, சொல்லுவதற்குஎளிதாகவும் கேட்பதற்கு இனியதாகவும்சிறியதாகவும் இருக்கும்படிப் புலவன்

அமைக்கிறான். சயங்கொண்டார் தம் நூலுக்குக் 'கலிங்கத்துப் பரணி' என்று பெயர் சூட்டாமல் 'கொற்றவன் பெற்ற வெற்றி' என்றோ, 'கலிங்க நாட்டில் சோழன் கொண்ட வெற்றி' என்றோ, 'வளவன் சூடிய வாகை' என்றோ தலைப்புச் சூட்டியிருந்தால் அத் தலைப்புச் சிறந்திருக்குமா?

கலிங்கத்துப்பரணி என்று சொன்னதும், கலிங்க நாட்டில் சோழன் படைகள் நிற்கும் காட்சி நம் கண் முன் தோன்றுகிறது. கடுமையான போர் நிகழ்கின்றது. போர்க்களத்தில் பெருகும் செந்நீர் வெள்ளத்தில் வீரர்களின் தலைகள் மிதக்கின்றன. கையும் காலும் இழந்த யானைகள் மலைபோல் சாய்ந்து கிடக்கின்றன. கழுகும் பருந்தும் வானத்தில் வட்டமிடுகின்றன. நரிகள் ஊளை யிடுகின்றன. இடையிடையே கருநெடும் பேய்கள் களத்தில் உலவு கின்றன; புலால் உணவு சமைக்கின்றன. வயிறுர உண்டபின் பரணி நாளன்று ஆடி மகிழ்கின்றன... இவ்வளவு காட்சிகளையும் தலைப்பே நம் கண்முன் நிறுத்திவிடுகிறது.

இந்நூல் பரணி என்று பெயர் பெற்றதற்குக் கூறப்படும் காரணங்கள் பல. உரையாசிரியர் நச்சினார்க்கினியர் காடுகெழு செல்விக்குப் பரணி நாட் கூழும் துணங்கையும்கொடுத்து வழிபடு வதோர் வழக்குப்பற்றிப் 'பரணி' என்னும்பெயர்பெற்றது என்று கூறுகிறார் பரணி நாளில் காளிதேவிக்குப் பேய்கள் திருவிழாச் செய்ததாகக் கலிங்கத்துப் பரணியும் கூறுகின்றது. எனவே பரணி என்ற சொல் ஆகு பெயராகி, அந்நாளில் பேய்கள் நடத் திய திருவிழாவைக் குறிப்பதாகக் கொண்டு, கலிங்கத்துப் பரணி என்ற சொற்றொடருக்குக் 'கலிங்க' நாட்டில் பரணி நாளில் நடந்த திருவிழா' என்று பொருள் கொள்ளுதல் சிறப்புடையது.

பரணி நூல்கள், போர்க்களத்தில் வெற்றி பெற்றவரைப் புகழ்வனவாய் இருப்பினும் தோல்வியுற்றவரின் பெயராலேயே பெரும்பான்மையும் வழங்கி வருகின்றன.

## கட்டமைப்பு

நூலிற்குக் கட்டமைப்பு (Structure) இன்றியமையாதது. கட்டமைப்பில்லாத நூல், கற்போர்க்குச்சோர்வை உண்டாக்கும்

கட்டமைப்புடைய நூல், கற்போர் உள்ளத்தின் தன்மை யறிந்து அமைக்கப்பட்ட நூல், விறுவிறுப்பான போக்கு உடையது; கற்போர் நெஞ்சத்தை மேன்மேலும் ஊக்கி, அடுத்து வரும் நிகழ்ச்சியை-பகுதியை ஆவலோடு எதிர்பார்க்கச் செய்யும் பண்புடையது. கட்டமைப்பில்லாத நூல் சிறப்பதில்லை. இனிப்பதில்லை.

பரணி கட்டமைப்புடைய நூல்களுள் ஒன்று. பரணிஆசிரியர் அவையடக்கம் கூறிக் கடவுள் வாழ்த்துப்பாடி, நாட்டு வளம் நகர் வளம் பாடிய பின் காப்பிய நிகழ்ச்சியைக் கூறத் தொடங்கவில்லை. முன்னோர் வரலாற்றை முறையாகக் கூறிமுடித்தபின் பாட்டுடைத் தலைவன் பிறப்பு, வளர்ப்புக்கூறி அவன் கல்வி கற்றது, போர்த் தொழில் பயின்றது, முடிபுனைந்து அரியணையில் அமர்ந்தது, உலாச் சென்றது ஆகியவற்றை நிரல்படக் கூறவில்லை. பகைவரை வென்று காடு கெடுத்து நாடாக்கிக் குளம்தொட்டு வளம் பெருக்கிச் செங்கோல்செலுத்தி மூத்து முதிர்ந்தான் என்று கூறும் முறையைக் கையாளவில்லை.

பரணியின் கட்டமைப்புக் கற்போரது ஆவலை மேன் மேலும் தூண்டுகிறது; நூல் முழுவதையும் விரைந்து கற்க வேண்டும் என்ற தணியாத வேட்கையை உண்டாக்குகிறது.

கடவுள் வாழ்த்துக்கூறி முடித்ததும் கடைதிறப்புப் பாடி நூலைத் தொடங்கி விடுகிறார். கடைதிறப்பில்கற்போரது உள்ளத்தைத் திறந்து வைக்கிறார்.

கடைதிறப்புப் பாடி முடித்தவுடன், சோழமன்னனின் முன்னோரது வரலாற்றையோ, அவன் படையெடுப்பையோ பாடவில்லை. காளிதேவி வாழும் காட்டில் வெம்மையை நெஞ்சை அள்ளும் வகையில் பாடுகிறார். அக் காட்டில் குலோத்துங்கன் காளிக்கு அமைத்த புதுவகையான கோயிலைக் காட்டுகிறார். தேவியைச் சுற்றி நிற்கும் பேய்களை நமக்கு அறிமுகப் படுத்துகிறார். பேய்களைச் சோழர் வரலாறு கூறச் செய்கின்றார். பாட்டுடைத்தலைவன் பிறப்புவளர்ப்பை ஒருபேய் சுவைபடக் கூறுகின்றது. வேறொரு பேய் ஓடிவந்து கலிங்கத்துப் போர் நிகழ்ச்சியைக் கூறுகின்றது. கலிங்க நாடு சென்று பேய்கள் போர்க் களத்தைக்

காண்கின்றன. பரணிக் கூழ் சமைக்கின்றன, உண்கின்றன, மன்னன் புகழ் பாடுகின்றன.

கற்பனை பெரிதும் கலக்காத—இலக்கியச் சுவை இல்லாத-வரலாற்றுப்பகுதியை நூலின் இடையில் வைத்து (உலா நூல்கள் கூறும் முறையைப் பின்பற்றாமல்) முன்னும் பின்னும் மிகச் சுவையான பகுதியை அமைத்த புலவரின் திறமை பாராட்டுதற் குரியது.

## நுவலும் திறன்

சிறந்த புலவர்கள் தாம் கூறவேண்டிய பொருளை ஒரே இடத்தில் மொத்தமாகக் கூறிவிட்டு விடுவதில்லை. பின்னால் விரிவாகக் கூறப்போகும் பொருளைப் பற்றிச் சிறிது சிறிதாக முன்னரே கூறிக்கொண்டுவந்து முடிவில் தாம் கருதிய பொருளைக் கற்போர் உள்ளத்தில் நன்கு பதியுமாறு சுவைபட விரித்துக் கூறுகின்றனர். துன்ப முடிவுக்கதை நாடகங்களில் துன்பச்சுவையை மிகுதிப்படுத்தப் புலவர்கள் கையாளும் முறைகள் பல. துன்பத்தைப் படிப்படியாக மிகுதிப்படுத்திக் கூறிக்கொண்டு வந்து நெஞ்சம் பக்குவமடைந்ததும் கற்போரைத் துன்பத்தில் ஆழ்த்திவிடும்பண்பு, சிறந்த புலவர்களிடத்தே காணப்படுகிறது.

சயங்கொண்டார் கலிங்கப் போரின் சிறப்பை உணர்த்துவதற்குப் பல முறைகளைக் கையாண்டுள்ளார். கற்போர் நெஞ்சம் அப்போரில் பெரிதும் ஈடுபடும் வண்ணம் போர் நிகழ்ச்சியைக் கூறிக்கொண்டு போகின்றார். நூலின் தொடக்கத்திலிருந்தே போர்மீது ஆவலை உண்டாக்குகின்றார். ஆவலை மெல்ல மெல்ல வளர்த்துக்கொண்டுவருகிறார். ஆவல் பெருகிக் கேட்போர் மிக விரும்பிக் கேட்கும் நிலையில் உள்ளபோது போர் நிகழ்ச்சிகளை விரிவாகப் பாடுகின்றார்.

நூலின் தொடக்கமாகிய கடைதிறப்பில்,

"இலங்கை எறிந்த கருணா கரன்தன்
இகல்வெஞ் சிலையின் வலிகேட்பீர்!
கலிங்க மெறிந்த கருணா கரன்தன்
களப்போர் பாடத் திறமினோ;"

என்று கூறி நம் ஆவலையும் திறந்துவைக்கிறார்.

காளி தேவி உறையும் காட்டைப் பாடத் தொடங்கும் போது,

"களப்போர் விளைந்த கலிங்கத்துக்
கலிங்கர் நிணக்கூழ் களப்பேயின்
உளப்போ ரிரண்டு நிறைவித்தான்
உறையுங் காடு பாடுவாம்!"

என்று கூறி ஆவலைத் தூண்டுகிறார்.

கலிங்கப்போர் மூளும் என்பதைக் குறிப்பால் அறிந்த பேய் ஒன்று தன் கால்கள் பிற்பட மனத்துவகை தள்ளிவர ஓடிவந்து,

"கலிங்கர் குருதி குருதி கலிங்கமடைய வடைய
மெலிந்த உடல்கள் தடிமின் மெலிந்த வுடல்கள் தடிமின்"
"வயிறுக ளென்னிற் போதா வாய்களோ போதா பண்டை
எயிறுக ளென்னிற் போதா என்னினு மீண்டப் போதும்',

என்று பேய்களிடம் கூறுகின்றது. இதைக் கேட்கும்போது போர்மீது கொண்டுள்ள நம் ஆவல் மேன்மேலும்பெருகுகின்றது.

காளிதேவியிடம் கலிங்கப்போர் நிகழ்ச்சியைக் கூறும்பேய்,

"மாவா யிரமும் படக் கலிங்கர்
மடிந்த களப்போர் உரைப்போர்க்கு
நாவா யிரமுங் கேட்போர்க்கு
நாளா யிரமும் வேண்டுமால்"

என்று கூறுகின்றது. இதைக் கேட்கும் போது நம் ஆவல்-போர் நிகழ்ச்சியைக் கேட்க வேண்டும் என்ற வேட்கை சுடர்விட்டு எரிகின்றது

இவ்வாறு கற்போரது ஆவலைப் பலவாறு தூண்டி அவர்கள் விருப்பத்தோடு கேட்கும் மனநிலை பெற்றதும், போர் நிகழ்ச்சிகளைப் புலவர் கூறத் தொடங்குகிறார்.

"பார்சி றுத்தலின் படைபெ ருத்ததோ?
படைபெ ருத்தலின் பார்சி றுத்ததோ?"

என்று கூறி வியக்கும்படி நால்வகைப் படைகளும் களத்தில் நிற்கின்றன:

"அகில வெற்புமின் றானை யானவோ?
அடைய மாருதம் புரவி யானவோ?
முகில னைத்துமத் தேர்க ளானவோ?
மூரி வேலைபோர் வீர ரானவோ?"

என்று பலவாறு கூறி வியந்து நால்வகைப் படைகளையும் நம் கண்முன் நிற்கவைக்கிறார்.

போர்நிகழ்ச்சிகளை ஆசிரியர் கூறுகிறார்.
"எறிகட லொடுகடல் கிடைத்தபோல்
இருபடை களுமெதிர் கிடைக்கவே
மறிதிரை யொடுதிரை மலைத்தபோல்
வருபரி யொடுபரி மலைக்கவே
"கனவரை யொடுவரை முனைத்தபோல்
கடகரி யொடுகரி முனைக்கவே
இனமுகில் முகிலொடு மெதிர்த்தபோல்
இரதமொ டிரதமு மெதிர்க்கவே"

போர் மிகவும் கடுமையாக நடக்கிறது. குருதிப் புனலில் யானைகள் மிதக்கின்றன; வீரர்களின் தலைகள் உருளுகின்றன. போர்க்களமெங்கும் பிணம், இரத்தம்!

பெரும் பசியால் வாடி உலர்ந்த பேய்கள் பரணிக்கூழ் சமைக்கின்றன; வயிறார உண்டு களிக்கின்றன. உண்டபின் பாடியாடுகின்றன.

முன்பு, பேய்களைப் புலவர் அறிமுகப்படுத்தியபோது,
"பெருநெ டும்பசி பெய்கல மாவன
பிற்றை நாளின்முன் னாளின் மெலிவன"
"வாயி னுல்நிறை யாத வயிற்றின"
'கொற்ற லம்பெறு கூழில மெங்களைக்
கொள்வ தேபணி யென்று குரைப்பன"

என்றெல்லாம் கூறி அவைகளின் பெரும் பசியை விளக்குகிறார். பெரும் பசியால் மெலிந்த பேய்கள்,

"வேகைக்கு விறகானேம் மெலியா நின்றேம்
மெலிந்த வுடல் தடிப்பதற்கு விரகுங் காணேம்
சாகைக்கித் தனையாசை போதும் பாழிற்
சாக்காடும் அரிதாகத் தந்து வைத்தாய்"

என்று காளிதேவியிடம் முறையிட்டு அழுகின்றன.

பெரும் பசியால் வாடிய பேய்கள் உணவு உண்டபின்னர்க் களித்து ஆடுகின்றன.

" களித்துக் குமண்டை யிட்டே
ஏப்பமிட்டுப் பருத்து நின்ற
குன்று குனிப்பபோல் கனத்துக்
கும்பிட் டேநட மிட்டனவே"

பெரு நெடும் பசியினுல் வாடிய பேய்கள்-பேருணவு உண்டு ஏப்ப மிட்டு ஆடுகின்றன. விறகாய் உலர்ந்த பேய்கள் பருத்த குன்று களைப்போல் காணப்படுகின்றன. எந்நேரமும் "பாவியேம் பசிக் கொன்றுமில்லேன்!" என்று தேவியிடம் அழுத பேய்கள், உண்ட பின் தேவியைக் கும்பிட்டுக் கூத்தாடுகின்றன.

பேய்களைக் கொண்டு, கலிங்கக் களத்தில் குவித்த பிணத்தின் மிகுதியைப் புலவர் புலப்படுத்தி விடுகிருர்.

கருதியது முடித்தல்

சிறந்த புலவர் எதுகை மோனைகளை இடர்ப்பட்டு அமைத்துத் தான் கூற நினைத்த கருத்து முழுவதையும் கூற முடியாமல் தவிப்பதில்லை. சொற்களும் எதுகை மோனைகளும், பாவும் பாவகைகளும் அவனுக்குத் தொண்டு செய்கின்றன. அதனுல் அவன் தான் கருதிய பொருளை எளிதில் கூறிச் செல்லுகின்றுன்.

குலோத்துங்க சோழன் புகழை — அவன் முன்னேர் பெருமையைக் கூறுவதற்குச் சயங்கொண்டார் பரணி நூலை இயற்றினர். அதில் தாம் கூற நினைத்த கருத்துக்கள் அனைத்தையும் பலவிடங்களில் சுவைபடக் கூறியுள்ளார்.

கடவுள் வாழ்த்தில் – மன்னன் புகழையும் பாடுகின்றுர்.

வழிபடு தெய்வத்தின் சிறப்பையும், செயலையும் கூறி அவைகளுக் கேற்ப மன்னன் சிறப்பையும் அருஞ்செயலையும் கூறியுள்ளார்.

"பேராழி உலகனைத்தும் பிறங்கவளர் இருள்நீங்க
ஓராழி தனிநடத்தும் ஒண்கடரைப் பரவுதுமே
பனியாழி உலகனைத்தும் பரந்தகலி இருள்நீங்கத்
தனியாழி தனிநடத்தும் சயதுங்கன் வாழ்கவென்றே"

கடைதிறப்பில் மன்னனது போர் வெற்றிகளைப் பாடி, தோற்ற மன்னர்கள் திறையாகத் தந்த மகளிரைக் கடை திறக்கு மாறு கூறுகின்றார்.

"மீனம்புகு கொடிமீனவர் விழியம்புக ஓடிக்
கானம்புக வேளம்புகு மடவீர்கடை திறமின்"
"அலைநாடிய புனனாடுடை அபயற்கிடு திறையா
மலைநாடியர் துளுநாடியர் மனைவிற்கடை திறமின்"

பாலை நிலத்தை,

"முள்ளாறுங் கல்லாறுந் தென்ன ரோட
முன்னொருநாள் வாளபயன் முனிந்த போரின்
வெள்ளாறுங் கோட்டாறும் புகையான் மூட
வெந்தவன மிந்தவன மொக்கி லொக்கும்"

என்று சயங்கொண்டார் கூறிச் சோழன் வெற்றியை நினைவூட்டு கிறார்.

காளிதேவிக்குச் சோழன் கோயில் கட்டினான். அக்கோயி லின் அடித்தளமாகத் தன்மாற்றரசர் மனைவியரின் அணிகளி லுள்ள மணிகளை அமைத்தான்; சேரர்களுடைய கொழுப்பாகிய சேற்றை, அவருடைய குருதிப் புனலில் கலந்து அவர் தலையாகிய கற்களால் சுவர் எழுப்பினான். அவன் தன் பகைவர் நாட்டுக் காவல் மரங்களை வெட்டிக் கோயிலின் தூண்களாக அமைத்தான். இவ்வாறு கோயில் அமைத்த சோழன் பெருமையை நாமே உணரும்படிப் புலவர் பாடியுள்ளார்.

பேய்களில் கூனும் குருடும் செவிடும் இருந்தன என்று

கூறி அவ்வாறு அவை தம் உறுப்பிழந்ததற்குக் காரணமும் கூறுகின்றார்.

சோழன் முன்பு போரிட்ட களம் ஒன்றில் மூளைச் சேற்றில் வழுக்கி விழுந்த பேய்கள் கால் இழந்தன. சக்கரக் கோட்டத்துப் போர்க்களத்தில் சமைத்த கூழ் தெறித்துக் கண்ணில் விழுந்ததால் சில பேய்கள் கண்களை இழந்தன. போர் முழக்கத்தைக் கேட்ட பேய்கள் சிலவற்றின் காது அடைத்தன.

கலிங்கத்துப் போர்க் களத்தில் பல்லரிசியைக் குற்றும் பேய்கள் சோழன் புகழை வள்ளைப் பாட்டாகப் பாடுகின்றன.

"முடிசூடு முடியொன்றே முதலபயன் எங்கோமான்
அடிசூடு முடிஎண்ணில் ஆயிரநா றாயிரமே"
"போர்தாங்குங் களிற்றபயன் புயமிரண்டு மெந்நாளும்
பார்தாங்கப் பரந்தீர்ந்த பணிப்பணநா றாயிரமே"

பரணி நூல் முழுவதிலும் சயங்கொண்டார் குலோத்துங்கன் புகழைப் பாடியுள்ளார்.

(தொடரும்)

# பண்டைக்காலப் பாத்தூண் நெறி

—o—

டாக்டர் மொ. அ. துரை அரங்கசாமி,
எம். ஏ., எம். ஓ. எல்., பி. எச்டி.
( தமிழ்த் துறைத் தலைவர், மதுரைப் பல்கலைக் கழகம். )

"உண்டால் அம்மஇவ் வுலகம்; இந்திரர்
அமிழ்தம் இயைவது ஆயினும் இனிதெனத்
தமியர் உண்டலும் இலரே; முனிவிலர்;
துஞ்சலும் இலர்,பிறர் அஞ்சுவது அஞ்சிப்
புகழ்எனின் உயிரும் கொடுக்குவர்; பழியெனின்
உலகுடன் பெறினும் கொள்ளலர்; அயர்விலர்;
அன்ன மாட்சி அனையர் ஆகித்
தமக்கென முயலா நோன்றாட்
பிறர்க்கென முயலுநர் உண்மை யானே,"
(புறநா. 182)

என்று பாடினன், சங்க கால முடிமன்னன் ஒருவன். இளம்பெருவழுதி என்பது அவன் பெயர். இஃது அவனுடைய இயற்பெயரன்று; சிறப்புப்பெயராகும். இளமையிலேயே பெருமைப் பண்புகளெல்லாம் உடையவன் அவன் என்பதையும், பாண்டிய மன்னன் அவன் என்பதையும் அப் பெயர் குறிப்பதாகும்.

நெடு நாட்களாக ஓர் ஐய உணர்வு அவன் உள்ளத்தில குடிகொண்டிருந்த தென்பதையும், அந்த ஐயம் நீங்கித் தெளிந்த நிலையில் இவ்வாறு அவன் பாடினன் என்பதையும் இப் பாடல் உணர்த்துவதாகும். அந்த ஐயம் யாது? "பசியும் பிணியும், பகைமையும் மலிந்துள்ள இந்த உலகம் என்றோ அழிந்தொழிந்திருக்கவேண்டுமே; ஆனல், அழியாது நிலைபெற்றிருக்கின்றதே; அஃது எவ்வாறு?" என்பதாகும்.

இந்த ஐயம், நீங்கா நினைவாய் நின்றதன் நெஞ்சத்துடன் அவன் உலக மக்களையும், அவர்களுடைய குணஞ்செயல்களையும்,

தான் சென்ற சென்ற இடங்களிலெல்லாம் உற்றுநோக்கலானான்.
உலக மக்களையின்றி உலகம் ஏது?

உலக மக்களுள் ஒரு சாரார், தாமே வாழவேண்டும், மற்றவரெல்லாம் அழிந்தொழிய வேண்டும் என்ற எண்ணமும், அதற்கேற்ற செயலும் உடையவராகக் காணப்பட்டனர்; இவர்களால் உலகம் அழியாது நிலைபெறுவதாகும் என்று அறிவிலிகளும் கூற முன் வாரார்.

"தாம் வாழ்ந்தால் போதும்; மற்றவர்கள் எவ்வாறு ஆயினும் ஆகுக" என்ற எண்ணமும் செயலும் உடையவராக மற்றொரு சாரார் காணப்பட்டனர். தந்நலக்காரர் மட்டும் வாழ இடங்கொடுக்கும் ஒரு கூறு உலகம் அல்லது முழு உலகமும் எவ்வாறு இவரால் நிலைபெறுவதாகும்?

"தாமும்வாழவேண்டும், மற்றவரும் வாழவேண்டும்" என்ற எண்ணமும் செயலும் பிறிதொரு கூற்றாரிடம் காணப்பட்டன. முன்னைய இரு கூற்றாரினும் இக் கூற்றார் சிறந்தோர் என்பதில் தடையில்லை தாம் வாழத் தாம் பாடுபடுவதுபோல், மற்றவரும் பாடுபட்டாலன்றித் தாம் வாழ முடியாது என்ற எண்ணம் கொண்டு அவ்வெண்ணத்திற்கேற்பப் பாடுபடுவார்களானால் தாமும் வாழலாம்; மற்றவர்களும் வாழலாம். அவ்வெண்ணமும் செயலும் மற்றவர்களிடம் இல்லையானால், அவர்கள் எவ்வாறு சிறப்புடன் வாழமுடியும்? ஆதலால் இக் கூற்றாரும் உலகம் அழியாது நிலைபெறுவதற்கு உறுதுணை ஆகார் என்றுதான் முடிவு செய்தல் வேண்டும்

தம்மைப் பற்றி ஒரு சிறிதும் கருதாமல், மற்றவர் அனைவரும் வாழவேண்டும் என்ற எண்ணமும் செயலும் உடைய நான்காம் கூற்றினர், நம் இளம் பெருவழுதியின் கண்ணையும் கருத்தையும் கவர்வாராயினர். பசியுடையமற்றவரைக் கண்டால், அவர், அன்னார் பசியை நீக்குவதற்கு உரிய செயல்களைச் செய்து அவர்தம் பசியைப் போக்கி மகிழ்ச்சியூட்டினர்; பிணியுடையோரைக் கண்டால் மருந்தும் பத்திய உணவும் தந்து அவர்தம் பிணியைப் போக்கப் பாடுபட்டனர். தேவர்க்கே உரிய அமிழ்தம்

ஒரு சிறிதளவு எதிர்பாராத வகையில் கிடைத்ததென்றாலும் அதனை இனிதெனக்கொண்டு, அதன் அருமை நோக்கி, அதனைத் தாமே உண்ணவேண்டும் என்று கருதாமல் மற்றவர்க்கே வழங்க வேண்டும் என்ற எண்ணமுடையவராக அவர்கள் திகழ்ந்தனர். மற்றவர்களுக்கு அவ்வரும் பொருளை வழங்கும்போது வழங்கும் அவரும் அதில் ஒரு கூறு உண்ண வேண்டும் என்று மற்றவர்கள் வற்புறுத்துவர் என்பது கூறாமலே தெரியலாம். இவ்வாற்றால், மற்றவர்க்காகப் பாடுபடுபவர் வாழ்க்கை அவர் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும், தன்னால் செவ்விதின் நடைபெறும் என்பது உள்ளங்கை நெல்லிக்கனியாகும். இவ்வாற்றால், மற்றவர்களும் வாழத் தாமும் வாழ்தல் அத்தகையோரால் நிகழ்வதாகலின், அவரால் தான் உலகம் அழிவில்லாமல் நிலைபெறுவதாகும் என்ற உண்மை இளம் பெரு வழுதிக்கு விளங்கலாயிற்று, ஐயம் நீங்கினான் இளம் பெரு வழுதி; களிக்கூத்தாடினான்; அவர்தம் ஏனைய செயல்களையெல்லாம் நுணுகி நோக்கினான். ஐயம் நீங்கித் தெளிந்த அவன், தான் கண்ட உண்மைக்கு ஒரு பாட்டோவியம் தீட்டினான். அந்தப் பாட்டோவியமே இக் கட்டுரையின் முதற்கண் காணப்படுவதாகும்.

அந்தப் பாட்டோவியத்தில் காணப்படும் எழிற் காட்சிகள் யாவை? எழிற் காட்சிகளாம் மாட்சிமைப் பொருள்கள் யாவை?

''என்றும் அழிவின்றி உளதாயிருக்கிறதுகாண் இவ்வுலகம்; தேவர்கட்கே உரிய அமிழ்தம் ஊழாலாவது, தவத்தாலாவது தமக்கு வந்து கூடுவதாயினும், அதனை இனிதெனக் கொண்டு, தனித்து உண்டலும் இலர்; எவ்வுயிரும் தம்முயிரேயாம் என்ற தெளிவு பெற்றவராதலின், யாரோடும் வெறுப்பிலர்; மற்றவர் அஞ்சத்தகும் துன்பத்திற்குத் தாமும் அஞ்சி, அது தீர்த்தற் பொருட்டுச் சோம்பியிருத்தலும் இலர்; புகழ் வருவதாயின் தம் உயிரையும் கொடுப்பர்; பழியெனின் உலகம் முழுவதும் பெறினும் கொள்ளார்; உயிரையே துரும்பாக மதிப்பவராதலின், மனக் கவற்சி யிலாரவர்; அப் பெற்றித் தாகிய மாட்சிமைப்பட்ட அத் தன்மையராகித் தமக்கென முயலாத வலிய முயற்சியையுடைய பிறர் பொருட்டென, முயல்வார் உளராதலின்'', என்பது கிடந்தவாறு பாட்டின் பொருளாகும்.

தமக்கென வாழாப் பிறர்க்குரியாளரால்தான் உலகம் அழியாது நிலைபெற்றுள்ளதாம் என்பது அதன் திரண்ட கருத்தாம். "உலகம் அழியாமல் என்றும் நிலைபெற்றிருப்பதற்கு அடிப்படை இவர்களே" என்பதை இளம் பெருவழுதி கண்டு கூறிய திறம் வியத்தொறும் வியத்தொறும் வியப்பிறந்த தாகின்றது.

இந்த இளம் பெருவழுதி பாடிய மற்றொரு பாடல், பரிபாடலில் இடம் பெற்றுள்ளது. அப்பாடற் பொருள், திருமாலிடத்து இவனுக்கு இருந்த எல்லையில்லாத அன்பினை எடுத்துக் காட்டுவதாகும். தான் பெற்ற இன்பம் மற்றவரும் பெற வேண்டும் என்னும் உயர்ந்த கருத்துடையவன் இவன் என்பதை அப்பாடல் உள்ளங்கை நெல்லிக்கனியாகக் காட்டும். மதுரைக்கு அண்மையில் உள்ள திருமாலிருஞ்சோலை மலையில் உறையும் திருமாலைப் பற்றியதாகும் அப் பாடல்.

"எல்லா மலைகளுள்ளும் திருமாலிருஞ்சோலைமலை சிறந்ததாகும்", என்று அதில் வழுதி அதைப்பற்றி எடுத்துக்கூறியிருக்கும் அழகும், சிலம்பாறு என்னும் ஆற்றால் அழகுமிகும் அக் குன்றத்தின் வளமும், அதில் கோயில்கொண்டு எழுந்தருளியிருக்கும் கண்ணனும், பலதேவனும் உருவத்தால் இருவராயினும் தொழிலால் ஒருவரே என்று உவமங்களால் விளக்கிக் கூறியிருக்கும் நயமும், அக் குன்றம் தன்னைக் கண்டோருடைய மயக்கத்தை அறுப்பதொரு வழிபடு தெய்வமே யாகுமாதலால் அதனருகிற் சென்று திருமாலைத் தொழமாட்டாதவர், தொலைவில் கண்டேனும் அதனைப் பணிந்து உய்யலாம் என்று உலக மக்களை நோக்கிப் பரிவுடன் கூறியிருக்கும் வழுதியின் அன்புடைமையும் அக் குன்றத்து அடியின் கண் உறைதலே தனக்கு வேண்டுமென்று அதனை முடித்திருத்தலும், பிறவும் பயிலுந்தொறும் பயிலுந் தொறும் இறும்பூது பயப்பன ஆகும்.

திருமாலிடத்துத் தன் உள்ளத்தைப் பறிகொடுத்துவிட்ட வழுதி,

"நாறிணர்த் துழாயோன் நல்கின் அல்லதை
ஏறுதல் எளிதோ வீறுபெறு துறக்கம்?"

என்று பசுமரத்தில் ஆணியை அறைந்ததுபோல், உள்ளத்தில்

நன்கு பதியுமாறு, தேற்றமுடன் அவன் கேட்கும் கேள்வி எப்படிப்பட்டவருடைய உள்ளத்தையும், திருமாலிடத்துப் பறிகொடுத்துவிடும் முடிவிற்குக் கொண்டு சென்றுவிடும்.

இறையன்புஉடையவர்கள் அதன் அருளால் மதிநலம் பெறுவார்கள். அந்த மதிநலத்தால் தத்துவக்கருத்துக்களை உண ரும் ஆற்றல் உண்டாம். ''தான் யார்? தன் தலைவன் யார்? தனக் கும் ஏனைய உயிர்களுக்கும் உள்ள தொடர்பு யாது?'' என்பன, போன்ற வினுக்களை எழுப்பிக்கொண்டு விடைகாணும் ஆற்றல், மக்களுள் ஒவ்வொருவருக்கும் இறை யன்பால் உண்டாகும். யாண்டும் நீக்கமற நிறைந்திலங்கும் இறையை உருவமாகக் கொண்டு வழிபாடாற்றுவார்க்கு, அவர் நினைந்த உருவில் நினைந்த வாறே அஃது எழுந்து தோன்றிக் காட்சியளித்து, மதிநலமும் தத்துவக்கருத்துக்களும் நல்கித் தான் யாண்டும் நிறைந்திலங்கும் உண்மையையும் தன்னெடு எல்லா உயிர்களும் கலந்திருக்கும் உண்மையையும் அவர்க்கு உணர்த்தும்.

எனவே, திருமால் வழிபாட்டால் பெற்ற மதிநலமும். அம் மதிநலத்தால் பெற்ற தத்துவக் கருத்துக்களும், உலகம் அழியா மல் நிலை பெற்றிருத்தற்கு அடிப்படை, தமக்கென வாழாப் பிறர்க் குரியாளர் ஆவர் என்ற உண்மையை இளம் பெருவழுதி உணர்ந்து உலகத்தாருக்கு உணர்த்துமாறு செய்தன எனலாம்.

உண்மையில், தத்துவக் கருத்துக்களின் உணர்வு பெற்ற வர்களே தமக்கென வாழாப் பிறர்க்குரியாளராகத் திகழ்வர். இறைவழிபாட்டால் பெறற்குரிய மதிநலமும், தத்துவக் கருத்துக் களும், அவற்றை அவ்வாற்ருல் பெற்ற அறிஞர் வாயிலாகவும் பெறலாம். அங்ஙனம் பெற்றவர் அவற்றைத் தம் வாழ்க்கையில் கடைப்பிடித் தொழுகிப் பிறவிப்பயனை எய்துவர்.

தமிழர்கள் கடைப்பிடித்தற்குரிய தத்துவக் கருத்துக்கள் இவை என்பதைக் கணியன் பூங்குன்றனர் தம் வாழ்க்கையில் கடைப்பிடித்த வகையில் வைத்து உணர்த்தியிருப்பது ஈண்டு நினைவு கூர்தற்கு உரியதாகும். பாட்டோவியமாகப் புறநானூற் றில் இடம் பெற்றிருக்கும் கணியன் பூங்குற்றனர் தம் பொருள் மொழிக் காஞ்சிப் பொருண்மையை அப் பாட்டோவியமாகவே ஈண்டு நாம் நினைவு கூர்வோமாக;

"யாதும் ஊரே! யாவரும் கேளிர்;
தீதும் நன்றும் பிறர்தர வாரா;
நோதலும் தணிதலும் அவற்றோ ரன்ன;
சாதலும் புதுவ தன்றே; வாழ்தல்,
இனிதென மகிழ்ந்தன்று மிலமே முனிவின்
இன்னா தென்றலும் இலமே; மின்னொடு
வானம் தண்டுளி தலைஇ ஆனாது
கல்பொருது இரங்கும் மல்லற் பேர்யாற்று
நீர்வழிப் படூஉம் புணைபோல் ஆருயிர்
முறைவழிப் படூஉம் என்பது, திறவோர்
காட்சியில் தெளிந்தனம்; ஆகலின், மாட்சியிற்
பெரியோரை வியத்தலும் இலமே;
சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே;"
(புறநானூறு: 192)

என்பது கணியன் பூங் குன்றனார் வாயுரையாகும்.

'எமக்கு எல்லாம் ஊர்; எல்லாரும் சுற்றத்தார்; எவ்வாறு? கேடும் ஆக்கமும் தாமே வரினல்லாது, பிறர் தர வாரா; நோதலும் அது தீர்தலும் அவற்றையொப்பத் தாமே வருவன. சாதலும் புதிதன்று; கருவிற்றோன்றிய நாளே தொடங்கியுள்ளது; வாழ்தலை இனிது என்று உவந்தது இலம்; ஒரு வெறுப்பு வந்தவிடத்து இன்னாதென்றிருத்தலும் இலம்; மின்னுடனே, மழை, குளிர்ந்த துளியைப் பெய்தலான் அமையாது, கல்லையலைத்து ஒலிக்கும் வளவிய பேரியாற்று நீரின் வழியே போம் மிதவை (தெப்பம்) போல, அரிய உயிர், ஊழின் வழியே படுமென்பது நன்மைக் கூறுபாடறிவோர் கூறிய நூலாலே தெளிந்தேம் ஆகலான், நன்மையான் மிக்கவரை மதித்தலுமிலேம், சிறியோரைப் பழித்தல் அம் மதித்தலினுமிலேம்" என்பது பாட்டின் பொருள்

இதனால் மன்னுயிர்கள் எல்லாம் தன் உயிர் போன்றனவே. என்றும, தனக்கு வரும் இன்ப துன்பங்களுக்குத் தானே அடிப் படை என்றும், முற்பிறப்புக்களில் தான் செய்த வினையின் பயனாகவே அவை வருவன என்றும், அதனால் இன்பம் வருங்கால் உவகையுறுதலும், துன்பம் வருங்கால் துயருறுதலும் அறியாமையால் என்றும் ஊழ் வழியே உயிர்

பொருந்தும் என்றும், அதனுல் உயர்ந்தோர் தாழ்ந்தோர் என்று வேறுபாடு கருதுதல் கூடாதென்றும் ஒருவன் கருதி வாழ்க்கை நடத்த வேண்டும் என்ற தத்துவக் கருத்துப் புலனுதலை நாம் அறியலம்.

இந்தப் பேருண்மையை நமக்கு உணர்த்தும் கணியன் பூங்குன்றனர் பாடிய மற்றொரு பாடல், நற்றிணையில் இடம் பெற்றுளது.

"மரஞ்சா மருந்தும் கொள்ளார், மாந்தர்,
உரஞ்சாச் செய்யார் உயர்தவம்; வளம்கெடப்
பொன்னும் கொள்ளார் மன்னர்; நன்னுதல்
நாம்தம் உண்மையின் உளமே; அதனுல்,
தாம்செய் பொருளளவு அறியார் தாம்கசிந்து
என்றூழ் நிறுப்ப நீளிடை ஒழியச்
சென்றோர் மன்றநம் காதலர்; என்றும்
இன்ன நிலைமைத் தென்ப
என்னோரும் அறிய இவ்வுலகத் தானே", (நற் 226)

என்பது அப்பாடல்.

"இந்த உலகத்தில் உள்ள மாந்தர், மரம் பட்டுப்போம்படி அதன்பால் உள்ள மருந்தை முற்றும் கொள்ளமாட்டார்; தம் வலிமை முற்றும் கெடுமாறு, உயர்ந்த தவத்தைச் செய்யார். அரசர், தம்முடைய குடிமக்களின் செல்வமெல்லாம் குறைபடும் வண்ணம், அவரிடத்து வரிவாங்கார். அவற்றை உணர்ந்து வைத்தும் தாம் வருத்தம் மேற்கொண்டு, வெயில்நிலை கொள்ள, நீண்ட சுரத்து நெறி, பின்னே ஒழிய, எம்மைப் பிரிந்து சென்றவ ராகிய நம் காதலர், தாம் எம்மைப் பிரியாதுறைதலின், நாம் உயிரோடிரா நின்றோம் தாம் ஈட்டவிரும்பும் பொருள் காரண மாக எம்மைப் பிரிவாராயின், அதனுலே வருவது எமது இறந்து பாடு என்பதனைத் திண்ணமாக அறிந்தவ ரல்லர்; எக்காலத்தும் இதுவே ஆடவ ரியற்கை என்பர் சான்றோர்; அதனை யாவரும் அறிந்திருப்பர் கண்டாய்" என்பது பாட்டின் பொருள்.

இதனுல், மனைவியை விட்டுப் பிரியாமல், அன்புடன் அவளொடு கணவன் உறைதலே வேண்டப்படுவதாம் என்ற

உண்மையையும் கணியன் பூங்குன்றனார் அறிந்து வலியுறுத்து கிறார் எனலாம்.

கணியன் பூங்குன்றனார் அறிந்து உணர்த்தி வாழ்ந்து காட்டிய செந்நெறியைக் கடைப்பிடித்துத் தம் உயிரைப்போல் எவ்வுயிரையும் கருதித் தமக்கென வாழாமல் தாம் ஈட்டிய பொருளை மன்னுயிர்க்கெல்லாம் வாரி வழங்கி நமக்கு வழிகாட்டிக ளாய்த் திகழ்ந்தவர் தம் வாழ்க்கைக் குறிப்புக்கள் சிலவற்றைக் காண்போம்.

அதியமான் நெடுமானஞ்சி என்பான் பண்டைக் காலத்தில் திகழ்ந்திருந்த ஒரு வள்ளல். அவன் இறந்த காலத்தில் ஔவையார் அவனைப் பற்றி வருந்திப் பாடிய பாட்டில்,

"சிறியகட் பெறினே எமக்கீயும், மன்னே!
பெரியகட் பெறினே,
யாம்பாடத் தான்மகிழ்ந் துண்ணும், மன்னே!
சிறுசோற் றானும் நனிபல கலத்தன் மன்னே!
பெருஞ்சோற் றானும் நனிபல கலத்தன், மன்னே!
என்பொடு தடிபடு வழியெல்லாம் எமக்கீயும் மன்னே!
அம்பொடு வேல்நுழை வழியெல்லாம் தான்நிற்கும்,
மன்னே!"

(புறநா. 235)

என்று கூறுவது ஈண்டு நினைவுகூரற்கு உரியது.

"சிறிய அளவினையுடைய மதுவைப் பெறின், எங்களுக்குத் தருவன்; அது கழிந்தது. பெரிய அளவினையுடைய மதுவைப் பெற்றானாயின் அதனை யாமுண்டு பாட, எஞ்சிய மதுவைத் தான் விருப்பி நுகர்வான்; அது கழிந்தது. சோறு எல்லார்க்கும் பொதுவாதலால் சிற்றளவினையுடைய சோற்றின்கண்ணும் மிகப் பல கலத்தோடும்கூட உண்பன்; அது கழிந்தது. என்பொடு கூடிய ஊன் தடி உளதாகிய இடம் முழுதும் எங்களுக்கு அளிப்பன்; அது கழிந்தது. அம்பொடு வேல் தைத்து உருவும் இடமாகிய போர்க்களம் முழுதும் தான் சென்று நிற்பன்; அது கழிந்ததே!" என்பது பாட்டின் பொருள்.

தனக்கென வாழாது பிறர்க்கெனவே வாழ்ந்த அஞ்சியின்

செயல் ஈண்டு ஔவையாரால் பாடப்பெற்றிருத்தலே நோக்குக. சிறிதளவே ஒன்றைப் பெறின் அதனை மற்றவர்கட்கே உரிமை யாக்குதலும், பெரிதளவில் பெற்ருல் அதனை மற்றவர்க்கு உரிமை யாக்கி அவர் உண்டு கழித்ததைத் தான் நுகர்தலும், அதியமான் நெடுமான் அஞ்சி, தன் வாழ்க்கையில் கடைப்பிடித்தான் எனில். அவன் தனக்கென வாழாதவன் என்பதும் மற்றவர் மகிழ்ச்சியையே தன் மகிழ்ச்சியாகக் கொண்டவன் என்பதும் தெளிவாம்.

அம்மட்டோ! பழைய நிலைமையை உடைய பெரிய மலை யிடத்து விடரின்கண், ஏறிப்பறிப்பதற்கரிய மரஉச்சியின்கண், கொள்ளப்பட்ட ஒரு நெல்லிப் பழத்தைப் பெறுவதற்கு அரிதென்று கருதாது, அதனுற்பெறும் பேற்றினை ஔவையார்க் குக் கூருது, தன்னுள்ளேயடக்கிச் சாதல் ஒழிய அவருக்குக் கொடுத்தான் அஞ்சி என்ருல், அவனுடைய தனக்கென வாழாத வாழ்க்கைச் சிறப்பை எவ்வெழுத்தால் எழுதிக்காட்ட இயலும்; அதனுல் அவனை, நீலமணிமிடற்று ஒப்பற்ற இறைவன் போல மன்னுக என்று ஔவையார் வாழ்த்தித் தம் நன்றியறிதலைக் காட்டிவிட்டார். நெல்லிக்கனியை உட்கொண்டால் அஃது இறப்பைத் தவிர்க்கும் என்ற உண்மையைக் கூருது அதை ஔவையாரை உண்ணச் செய்த பெருமை, அதியமானையன்றி யாருக்கு வரும்?

மற்றவர் நலமே நாடி வாழும் இவர்கள், உலகம் நிலைபெறு வதற்குக் கருவியானவர்கள் என்ருல் அதில் ஐயம் ஏது!

"போரடு திருவிற் பொலந்தார் அஞ்சி!
பால்புரை பிறைநுதற் பொலிந்த சென்னி
நீல மணிமிடற் றொருவன் போல
மன்னுக! பெரும! நீயே! தொன்னிலைப்
பெருமலை விடரகத் தருமிசைக் கொண்ட
சிறியிலை நெல்லித் தீங்கனி குறியாது
ஆதல் நின்னகத் தடக்கிச்
சாதல் நீங்க எமக்கீத் தனையே!" (புறம்: 91)

என்று அதியமான் அஞ்சியைப்பற்றி, ஔவையார் உளங்கசிந்து

பாடியிருக்கும் பாடல் எப்படிப்பட்டவர் கல் நெஞ்சையும் கனியச் செய்துவிடும்.

"பகைவர்களைப் போரின்கட் கொல்லும் வீரச் செல்வத் தினையும் பொன்னாற் செய்யப்பட்ட மாலையினையுமுடைய அஞ்சி! நீ பால்போலும் பிறைநுதல்போலப் பொலிந்த திருமுடியினையும் நீலமணிபோலும் கரிய திருமிடற்றினையுமுடைய ஒருவனைப்போல நிலைபெறுவாயாக! பெரும! நீ, பழைய நிலைமையினையுடைய நெல்லியின் இனிய பழத்தைப் பெறுதற்கரிதென்று கருதாது அதனாற் பெறும் பேற்றினை எமக்குக் கூறாது நின்னுள்ளே யடக்கிச் சாதல் ஒழிய எமக்கு அளித்தாயாதலால்," என்பது இவ்வடிகளின் பொருள்.

இவ் வதியமானைப்போல் தமக்கென வாழாப் பிறர்க்குரியாளராய் வாழ்ந்த பலர் சங்க காலத்தில் திகழ்ந்தனர். அவர்களுள் சிலரைப்பற்றி ஈண்டு நினைவு கூர்வோம்.

அவருள் ஒருவன், கண்டீரக்கோப் பெருநள்ளி என்பான். இவன் கடையெழுவள்ளல்களில் ஒருவன். தோட்டி என்னும் மலைக்கும், அதனைச் சார்ந்த மலை நாட்டிற்கும் காட்டு நாட்டிற்கும் தலைவன். வன்பரணர் என்ற புலவர், தம் சுற்றத்துடன் மிக்க பசியுடனே வேற்று நாட்டை நோக்கி நடந்து, களைப்பால் ஒரு பலா மரத்தினடியில் தங்கினர்; அவரது ஒய்ந்த செலவானுகிய வருத்தத்தினையும் மிடியையும் பார்த்து, அவரை நோக்கி ஒரு வேட்டுவன் நெருங்கிவந்தான். அவன், மான் திரளை வேட்டையாடிக் கொன்று குவித்திருந்தான்; அதனால், குருதி தோய்ந்த வீரக்கழலினையுடைய காலினையும். தூய எளிமையுடைய அழகிய நீலமணி விளங்கும் உச்சியையும் செல்வத்தையும் உடையதலைவன் அவன் என்பது வெளிப்படை. ஒரே காலத்தில் பல பொருள்களை ஊடுருவிச் செல்லும்படி அம்பை எய்யும் விற்றொழிலையுடைய வல்வில் வேட்டுவன் அவன். அவன், தம்மை நெருங்கியதும்; வன்பரணர் அஞ்சலிபண்ணி எழுந்திருக்க, அவரைக் கை குவித்து இருத்தி, நெய்யிழுது போன்ற வெள்ளிய நிணத்தையுடைய கொழுவிய தடியைத் தன் ஏவலர்களாகிய வீரரையும் எதிர்பாராமல், தான் கடைந்த தீயாற் சுட்டு அதை அவர் தின்னத்தந்தான்; அதைத் தின்று, பசி தீர்ந்து, அருவி நீரைக் குளிரக் குடித்து,

விடைகொள்ளத் தொடங்கினர் வன்பரணர். அப்போது அவன் விரைந்து, "பெறுதற்கரிய பெருமை யமைந்த நல்ல அணி கலன்கள் தருதற்கு வேறொன்றில்லை, யாம் காட்டு நாட்டேம்" எனச் சொல்லித் தனது மார்பிற் பூண்ட, விளங்கிய முத்து வடங் களையுடைய ஆரத்தை, முன் கையில் அணிந்த கடகத்தோடு, கழற்றித் தந்தான். அது கண்டு வியப்படைந்த வன்பரணர், "நும்முடைய நாடு எந்நாடோ?" என, அவன் தன் நாடு இன்ன தென்றும் சொல்லவில்லை. 'நீர் யார்?' எனக் கேட்கப் பேரும் சொல்லவில்லை. ஆனால், 'தோட்டி மலையைக் காக்கும் நள்ளி அவன்,' என்பதை வழியே செல்வார் சொல்லக் கேட்ட வன்பர ணருக் கேற்பட்ட வியப்பிற்கு அளவே யில்லை. இக் கருத்தடங்கிய பாடலைப் புறநானூற்றில் (150) படித்து அவன் செய்தியை உணர்ந்து நாமும் இன்புறலாம்.

"எந்நா டோவென நாடும் சொல்லான்
யாரீ ரோவெனப் பேரும் சொல்லான்
பிறர்பிறர் கூற வழிக்கேட் டிசினே
இரும்புபுனைந் தியற்றாப் பெரும்பெயர்த் தோட்டி
அம்மலை காக்கும் அணிநெடுங் குன்றிற்
பளிங்குவகுத் தன்ன தீநீர்
நளிமலை நாடன் நள்ளிஅவன் எனவே."

என்ற அடிகளையாதல் ஈண்டு, நினைவுகூர்தல் தக்கதாகும்

(இரும்புபுனைந்தியற்றாப் பெரும் பெயர்த்தோட்டி அம்மலை- இரும்பால் புனைந்து செய்யப்படாத மிக்க புகழையுடைய தோட் டியாகிய அம்மலை; அணிநெடுங்குன்றிற் பளிங்கு வகுத்தன்ன தீநீர் நளிமலைநாடன்- அழகிய பக்கமலையினையும் பளிங்கை வகுத் தாற்போன்ற வெளிய நிறத்தையுடைய இனிய நீரையுமுடைய பெரிய மலை நாட்டையுடையவன் நள்ளி.)

தான் இன்ன நாட்டினன், இன்ன பேரினன் என்றுகூட உணர்த்தாது வள்ளற்றன்மை பூண்டொழுகிய இவன் கொடைத் திறந்தான் என்னே! வழியின் கண்ணே வல்வில் வேட்டத்தைக் கண்டு, அத் தொழிற்கு உரியவன் ஓரியாகத்தான் இருக்கவேண் டும் என்று அவன் பெயரைக் கூற, அதற்கு நாணிப் பின்,

அவனை ஒப்பார்வேறு வேட்டுவர் இல்லை எனக் கூறப்புகுந்த இடத்து அதற்குக் காலம் தாராமல், தான் எய்த மானின் நிணத்தையுடைய தசையினது புழுக்குடன், மதுவும், தன் மலையிற் பிறந்த பொன்னும் மணிக்குவையும் கொள்ளத் தந்தான் என்று ஓரியையும் முற்கூறிய நள்ளியைப் போன்றவனுகக் காட்டுகின்ருர் வன்பரணர். தமக்கென வாழாப் பிறர்க்குரியாளர்தம் போக்கு எப்படியெல்லாம் இருக்கும் என்பதைச் சான்ருேர்கள் உணர்த்தும் திறம் பாராட்டின் எல்லையைக் கடந்ததாகும்

ஓரியைப் பற்றி வன்பரணர் பாடிய பாடல் முழுவதும் (புறநா, 152) படித்து இன்புறத்தக்கதாகும் அதில் மேற்காட்டிய கருத்து வரும் அடிகள் வருமாறு:

"வல்வில் வேட்டம் வலம்படுத் திருந்தோன்
ஓரி கொல்லோ அல்லன் கொல்லோ
... ... ... ... ...
கோவெனப் பெயரிய காலை ஆங்கது
தன்பெயர் ஆகலின், நாணி, மற்றுயாம்
நாட்டிடன் நாட்டிடன் வருதும் ஈங்கோ[illegible]
வேட்டுவர் இல்லைநின் ஒப்போர் என
வேட்டது மொழியவும் விடாஅன் வேட்டத்தில்
தான்உயிர் செகுத்த மான்நிணப் புழுக்கோடு
ஆன்உருக் கன்ன வேரியை நல்கித்
தன்மலைப் பிறந்த தாவில் நன்பொன்
பன்மணிக் குவையொடும் விரைஇக் கொண்மெனச்
சுரத்திடை நல்கி யோனே விடர்ச்சிமை
ஓங்கிருங் கொல்லிப் பொருநன்
ஓம்பா ஈகை விறல்வெய் யோனே" (புறநா. 152)

ஆய் என்பான் ஒரு வள்ளல்; பொதியில் மலைக்குத்தலைவன். அதனருகேயுள்ள ஆய்குடி என்பது இவன் ஊர். பாணர்க்கும் இரவலர்க்கும் யானைகளையும் பிறவற்றையும் பயன் கருதாது வாரி வாரி வழங்கினவன் இவன்.

இக் கருத்தை, 'இப் பிறப்பின்கட் செய்த தொன்று மறு பிறப்பிற்கு உதவுமென்று கருதிப் பொருளை விலையாகக்கொடுத்து

அதற்குப் பண்டமாற்றாக அறம் கொள்ளும் வணிகன் அல்லன் ஆய், சான்றோர் சென்ற வழி என்று உலகத்தார் கருத அந்த நற்செயலிலே பொருந்தியது அவன் கை வண்மை', என்பதாக,

''இம்மைச் செய்தது மறுமைக் காமெனும்
அறவிலை வணிகன் ஆய்அலன் பிறரும்
சான்றோர் சென்ற நெறியென
ஆங்குப் பட்டன் றவன்கை வண்மையே''

(புறநா. 134)

என்று உறையூர் ஏணிச்சேரி முடமோசியார் பாடுவதைக் காணலாம்.

'பிறிதோர் அணிகலமு மின்றிக் கொடுத்தற்கு அரிய மாங்கல்ய சூத்திரத்தையணிந்த மகளிருடனே பொலிவழிந்தது ஆய் கோயில் என்று சொல்லுவாராயினும், பிறர்க்கு ஈதலின்றித் தம்முடைய வயிற்றையே நிறைத்துச் சொல்லுதற்கு அமைந்த ... ட்ட புகழை நீங்கிய செல்வத்தினையுடைய அரசர் கோயில் இ... வ்வாது,'' என்று அழுத்தம் திருத்தமாக மோசியார் கூறும ...ில், முடிமன்னர் மூவர் இருந்தும் அவரால் பயன் ஒன்றும் இ...லை என்று அவர் கூறியிருத்தலைக் காணலாம்.

''ஈகை அரிய இழைஅணி மகளிரொடு
சாயின்று என்ப ஆஅய் கோயில்
சுவைக்கினி தாகிய குய்யுடை அடிசில
பிறர்க்கீ வின்றித் தம்வயி றருத்தி
உரைசால் ஓங்குபுகழ் ஒரிஇய
முரைசுகெழு செல்வர் நகர்போ லாதே''

(புறநா. 127)

என்ற அடிகளை நோக்குக.

''வடதிசை யதுவே வான்தோய் இமயம்
தென்திசை ஆஅய் குடியின் றாயின்
பிறழ்வது மன்னோஇம் மலர்தலை உலகே''

(புறநா. 132)

என்ற அடிகளால், உலகம் நிலை பெற்று நிற்க, ஆய் வள்ளல் எத்துணை இன்றியமையாதவன் என்பதை மோசிகீரனார் உணர்த்தியிருப்பதைக் காணலாம்.

தாம் பெற்றதைத் தம்மை யொத்தவர்க்குப் பகுத்துதவும் செய்கையொடுமட்டும் இவர்கள் அமைதி கொண்டனர் என்று கூறி நாம் அமைதி கொள்வதற்கில்லை. இளஞ்சிறுர்கள், பிற்காலத்துப் பெருந்தலைமை பூணும் மக்களாதல் வேண்டுமாயின், அவர்கள் தங்கள் இளம்பருவத்திலும் வயிருர உண்டு வாழவேண்டும் என்பதை இவர்கள் மறக்கவில்லை. சிறுகுடி என்ற ஊருக்கு உரிமையுடையவன் பண்ணன் என்ற தலைவன். வயிருர உண்ணும்பொருட்டுக் கட்டித் தயிரோடு கலந்து தந்த சோற்றுத் திரளைத் தம் கையிலோ, கையிலுள்ள இலையிலோ தட்டிலோ ஏந்திக்கொண்டு இளஞ் சிறுவர்கள் நிரல் நிரலாகச் செல்லும் காட்சி, தொலைவிலிருந்து நோக்குவார்க்குக் காலம் தப்பாத மழை பெய்யும் காலத்தைத் தம் இயல்பூக்கத்தால் உணர்ந்து தம் முட்டைகளை வாயில் ஏந்திக்கொண்டு மேட்டு நிலத்தை அடையும் மிகச் சிறிய எறும்பின் ஒழுங்கான செலவை ஒக்கும். இக் காட்சியைக் கண்டு வியந்த சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவனைத் தலைவனுகவும் நண்பனுகவும் கொண்டவன் பண்ணன். அப் பண்ணன், சிறுவர்கட்கெனத் தனிவகையான கொடை நெறியை வகுத்த திறத்தைப் பாராட்டிச் சோழன் பாடிய பாடல் பொன் எழுத்தால் பொறிக்கத் தக்கதாகும். ஏன்? தான் முடிமன்னனுக இருந்தும், தான் உணர்ந்து செய்தற்கியலாத ஒரு நற்செயலைப் பண்ணன் செய்தான் என்பதை எண்ணிப் பார்த்துத் தான் உலகில் வாழ்வதனுல் யாதும் பயனில்லை; பண்ணனே தன் வாழ்நாளும் உடன்பெற்று வாழட்டும் என்று கிள்ளிவளவன், தானே தன் நிலைக்கு வெட்கிப் பாடிய பாடலன்றே அது. அதைப் படிக்குந்தோறும், பதவியில் உயர்ந்து தம் கடமையை உணர்ந்து ஆற்றமாட்டாதிருப்பார்க்கு அஃது அறிவுகொளுத்தும் அன்றே! அந்தப் பாட்டோவியத்தை ஈண்டு நினைவுகூர்வோமாக.

''யான்வாழும் நாளும் பண்ணன் வாழிய!
யாணர்ப் பழுமரம் புள்இமிழ்ந் தன்ன
ஊன்ஒலி அரவம் தானும் கேட்கும்;
பொய்யா எழிலி பெய்விடம் நோக்கி
முட்டை கொண்டு வற்புலம் சேரும்
சிறுநுண் எறும்பின் சில்லொழுக் கேய்ப்பச்

சோறுடைக் கையர் வீறுவீ றியங்கும்
இருங்கிளைச் சிறுஅர்க் காண்டும், கண்டும்,
மற்றும் மற்றும் வினவுதும், தெற்றெனப்
பசிப்பிணி மருத்துவன் இல்லம்
அணித்தோ சேய்த்தோ கூறுமின் எமக்கே''
(புறநா. 173)

(கடும்பு – சுற்றம்; இடும்பை-வருத்தம்; யாணர்-புதுவருவாய்; புள் – பறவை; எழிலி – முகில், மேகம்; வீறு வீறு – வரிசை வரிசையாய்)

பாணன் வாய்மொழியாகக் கிள்ளிவளவன் பாடிய இப் பாடல், பண்ணன் ஆற்றிய தனிச் சிறப்பு வாய்ந்த செய்கையை எங்ஙனம் பாராட்டுகின்றது என்பதை நோக்குக.

''தனக்கென வாழாப் பிறர்க்குரியாளன் பண்ணன்''
(அகநா. 54)

என்றே கொற்றங் கொற்றனார் என்ற புலவர் பண்ணனைச் சிறப்பித்திருப்பது அவன்றன் ஈடெடுப்பில்லாத வள்ளல் தன்மையைத் தெளிய உணர்த்துவதாகும்,

தாம் பெற்றதை மற்றவர்கட்கும் கொடுத்து மகிழவேண்டும் என்னும் கருத்துடைய இத்தகையோர், மக்களுக்கும் மக்கட் சிறார்களுக்கும் ஈந்து மகிழ்ந்ததோடமையாமல் விலங்குகட்கும் ஓரறிவுயிர்கட்குங்கூடத் தாம் ஈட்டியதைப் பகுத்துக் கொடுத்து எஞ்சியதைத் தாம் உண்டு வாழ்ந்தனர் என்றால், எவ்வுயிரையும் தம் உயிர்போல் கருதி வாழ்வதே பாத்தூண் நெறி என்பது தெளிவாமன்றோ ?

பேகன் என்பவன் கடையெழு வள்ளல்களுள் ஒருவன். மலைநாட்டைத் தனக்கு உரிமையாக உடைய இவன், ஒரு நாள், வைகறைப் போதில் காலைக்கடன் கழித்தற்காக வெளியே சென்ற போது, ஒரு மயில் குளிர் மிகுதியால் நடுங்கிக் கொண்டிருந்ததை நோக்கினான்;, நோக்கியதும், தான், தன் குளிருக்காகப் போர்த்தி யிருந்த விலை மிக உயர்ந்த போர்வையை எடுத்து அதன்மீது போர்த்தி, அதன் குளிரைப் போக்கினான். இச் செயலை

MAHAMAHOPADHYAYA

" என்றும்,
உடாஅ போரா ஆகுதல் அறிந்தும்
படாஅம் மஞ்ஞைக் கீத்த எங்கோ
கடாஅ யானைக் கலிமான் பேகன்
எத்துணை யாயினும் ஈத்தல் நன்றென
மறுமை நோக்கின்றே அன்றே
பிறர்,வறுமை நோக்கின்றவன் கைவண் மையே",
(புறநா. 141)

என்று இசை யின்பமும் கவிதை யின்பமும் இழைந்தினிது துலங்கப் பாடி மகிழ்கின்றார் பரணர் என்னும் பண்பு நிறைந்த புலவர்.

"எந்நாளும், உடுத்துக்கொள்ள மாட்டா, போர்த்துக் கொள்ளமாட்டா ஆதலை அறிந்துவைத்தும்; படாத்தினை (போர்வையினை) மயிலுக்குக் கொடுத்த எம் இறைவன், மதம் மிக்க யானையினையும், மனம் செருக்கிய குதிரையினையுமுடைய பேகன், எவ்வளவாயினும் கொடுத்தல் அழகிதென்று, மறு பிறப்பை நோக்கிற்றேவெனின், அன்று; பிறரது மிடி (வறுமை) கருதிற்று, அவன் கைவண்மை", என்பது இவ் வடிகளின் பொருளாகும்.

" மடத்தகை மாமயில் பனிக்குமென் றருளிப்
படாஅம் ஈத்த கெடா நல்லிசைக்
கடாஅ யானைக் கலிமான் பேக", (புறநா. 145)

என மற்றோரிடத்தும் பரணர் மேற்குறித்த செயலை உணர்த்தியுள்ளார்.

இடைக்கழிநாட்டு நல்லூர் நத்தத்தனார் என்ற புலவர், தாம் இயற்றிய சிறுபாணாற்றுப் படையில், இச்செய்தியை,

" வானம் வாய்த்த வளமலைக் கவாஅன்
கான மஞ்ஞைக்குக் கலிங்கம் நல்கிய
அருந்திறல் அணங்கின் ஆவியர் பெருமகன்
பெருங்கல் நாடன் பேகனும்" (அடி. 84-87)

என்று கூறியிருத்தலையும் நோக்குக. பயன் கருதாது, மயில், அறிவுடைய உயிர் அன்று என்று கருதாது, அதன் குளிரைப்

போக்க முற்பட்ட பேகன் செய்கையை மேலும் எத்தனை புலவர்கள் பாடினாலும் தகு மன்றோ!

பாரி என்ற வள்ளலைப்பற்றி அறியாத தமிழ் மாணவர் எவரும் இரார். அவன் ஒருநாள் தேரில் ஊர்ந்து சென்றுகொண்டிருந்தான். அப்போது, கொழு கொம்பில்லாது தரையில் தாறு மாறாகப் படர்ந்து, தவிப்புடன் கிடந்த முல்லைக்கொடி ஒன்று, அவன் ஊர்ந்துசென்றுகொண்டிருந்த தேர்க்காலைத் (சக்கரத்தை) தாவிப் பற்ற, அதுகண்டு பாரி, அத்தேரை அங்கேயே நிறுத்தி, அம் முல்லைக் கொடியை அள்ளி யெடுத்து அத் தேர் மீது நன்கு படரும்படி அதற்கு வழிவகுத்துக் கொடுத்து, அத் தேரை அங்கேயே விட்டு விட்டுத் தன் பறம்பு நாட்டு அரண்மனைக்கு அவன் நடந்தே சென்றான் என்ற செய்தி சங்க நூலுள் இடம் பெற்றிருத்தலை அறியலாம்.

பாரி மகளிரை மணம் செய்வித்தற்பொருட்டு விச்சிக் கோனுழை அவரைக் கொண்டு சென்ற கபிலர்,

"விளங்குமணிக் கொடும்பூண் விச்சிக் கோவே,
இவரே, பூத்தலை அறாஅப் புனைகொடி முல்லை
நாத்தழும் பிருப்பப் பாடா தாயினும்
கறங்குமணி நெடுந்தேர் கொள்கெனக் கொடுத்த
பரந்தோங்கு சிறப்பிற் பாரி மகளிர்", (புறநா. 200)

என்று பாடியிருத்தலை நோக்குக.

"விளங்குகின்ற மணிகள் இழைத்த, வளைந்த பூண் அணிந்த விச்சிக்கோவே, இவர்கள் தாம், பூவைத் தனது தலையின்கண் மாறாத, அலங்கரித்தாற்போலும் கொடிமுல்லை தான், நாத்தழும் பேறப் பாடாதாயினும், ஒலிக்கும் மணியையுடைய கொடிய தேரைக் கொள்க என்று சொல்லிக் கொடுத்த, பரந்து மேம்பட்ட தலைமையினையுடைய பாரி மகளிர்" என்பது இவ்வடிகளின் திரண்ட பொருளாகும்.

ஈண்டொரு கருத்து நோக்கத் தக்கது. பாடும் புலவர்க்குப் பரிசில் ஈவது மக்கள் இயற்கை என்பதும், அங்ஙனம் பாடா விட்டாலும் பரிசில் ஈயும் இயல்பினன் பாரி என்பதும், "முல்லை

ந்நத்தழும் பிருப்பப் பாடாதாயினும், கறங்குமணி நெடுந்தேர் கொள்கெனக் கொடுத்த...பாரி'' என்ற அடிகளால் தெளியப் படும்.

பாடும் புலவர்க்கு, அவரால் தாம் பாடப்படின் தாம் வானுலகெய்தல் தவருதென்னும் கருத்துடையவர் பண்டைக் காலத் தமிழ் மக்கள். இக் கருத்து உறையூர் முது கண்ணன் சாத்தனர் சோழன் நலங்கிள்ளியைப்பாடிய புறநானூற்றுப்பாட லொன்ருல் விளங்குகின்றது.

> "புலவர் பாடும் புகழுடையோர், விசும்பின்
> வலவன் ஏவா வான வூர்தி
> எய்துப என்பதம் செய்வினை முடித்தெனக்
> கேட்பல் எந்தை சேட்சென்னி நலங்கிள்ளி"
>
> (புறநா. 27)

என்ற உறையூர் முது கண்ணன் சாத்தனர் வாய் மொழியைக் காண்க.

"புலவரால் பாடப்படும்புகழுடையோர், ஆகாயத்தின்கண் பாகனல் செலுத்தப்படாத விமானத்தைப் பொருந்துவர் என்று சொல்லுவார் அறிவுடையோர், தாம் செய்யும் நல் வினையை முடித்தென்று சொல்லக் கேட்பேன் என்னுடைய இறைவ, சேட்சென்னி நலங்கிள்ளி" என்பது இதன் பொருள். இக்கருத் தைச்சீர் தூக்கிப் பார்க்கும் போது பாடப்படும் பயன் கருதியே புரவலர் புலவர்க்கு ஈவர் என்பதும், பயன் கருதாமல் ஈபவன் பாரி என்பதும் தெற்றென விளங்கும்.

பாரி முல்லைக்குத் தேரீந்த செய்தியைக் கபிலர் மற்ருே ரிடத்தும் குறித்திருப்பது காணலாம்:

> "இவர்யார் என்குவை யாயின் இவரே
> ஊருடன் இரவலர்க் கருளித் தேருடன்
> முல்லைக் கீத்த செல்லா நல்லிசைப்
> படுமணி யானைப் பறம்பிற் கோமான்
> நெடுமாப் பாரி மகளிர்,"
>
> (புறநா. 201)

இப்பாடல் பாரிமகளிரை இருங்கோ வேளுழைக்கொண்டு சென்றபோது, அவனைப் பார்த்துக் கபிலர் பாடிய பாடலாகும்.

இவ்வாறு ஆறறிவு உயிர் முதல் ஓர் அறிவு உயிர் ஈறாக எல்லா உயிர்கட்கும் தாம் ஈட்டியதைப் பகிர்ந்து கொடுத்து வாழும் வாழ்க்கையே சிறந்த வாழ்க்கையாகப் பண்டைத் தமிழ் நாட்டில் நன்னெறி பற்றி நிற்கும் புரவலர்களாலும் புலவர்களாலும் மேற்கொள்ளப்பட்டது.

முன்பே வந்து பொருள் பெற்றுச்சென்ற இரவலரை மீண்டும் இரப்புக்குறித்துத் திரும்பி வரினும் இல்லையெனல் இன்னுதாம் எனப் புலவர்கள் புரவலர்களுக்கு உவமைநயம் காட்டி ஈகையைக் கடைப்பிடித்தல் வேண்டும் என்று வற்புறுத்திவந்தனர். ஊன்பொதி பசுங்குடையார் சேரமான் பாமுளூர் எறிந்த நெய்தலங்கானல் இளஞ்சேட்சென்னியைக் குறித்துப் பாடிய பாடல் இதற்குத் தக்க சான்றாகும்:

"கழிந்தது பொழிந்தென வான்கண் மாறினும்
தொல்லது விளைந்தென நிலம்வளம் கரப்பினும்
எல்லா உயிர்க்கும் இல்லால் வாழ்க்கை
இன்னும் தம்மென எம்மனோர் இரப்பின்
முன்னும் கொண்டிரென நும்மனோர் மறுத்தல்
இன்னு தம்ம இயல்தேர் அண்ணல்,
இல்லது நிரப்பல் ஆற்று தோரினும்
உள்ளி வருநர் நகைஇழப் போரே
அனையையும் அல்லை நீயே, ஒன்னார்
ஆரெயில் அவர்கட் டாகவும் நுமதெனப்
பாண்கடன் இறுக்கும் வள்ளியோய்
பூண்கடன் எந்தைநீ இரவலர் புரவே."

(புறநா. 203)

இப்பாடலில் ஒரு நயமான கருத்து அமைந்திருத்தலைக் கண்டு இறும்பூதுஎய்தலாம்.

இல்லாதவர்க்குக் கொடுத்தல் இயலாதவர், வறியவரினும் இன்னுமை எய்துவர். எவ்வாறு? வறியவரால் பரிசில் நினைந்து

வரப்படுவார் கொடாராயின், அவ் விரப்போரால் நச்சப்படும் இன்பத்தை இழப்பர். இன்பத்தை இழப்பது, இன்னுமை எய்துவதற்கு ஒப்பாகும் அன்றோ! அம்மட்டோ! அதனால் அவர் உயிர்விடவும் முன்வருவர். 'ஈத்துவக்கும் இன்பம்,' என்று திரு வள்ளுவர் கூறுவதும் காண்க. இவ் வின்பத்தை இளஞ்சேட் சென்னி ஏன் இழத்தல்வேண்டும்? பகைவர் அரண் அவரிடத்த தாகவும், அதனை அழித்துக் கைப்பற்றுவதற்கு முன்னேயே, அது பாணருடையதாகும் என்று கூறும் வெற்றிச் சிறப்புடை யன் சென்னியாதலால், ஈவார்க்கு இல்லையென்று கூறுவதற்கு உரிய நிலை அவனுக்கு ஏது?

எனவேதான், ஊன் பொதிபசுங்குடையார், "எத்துணை முறைதான் இரவலர் மீண்டும் மீண்டும் வந்து பொருள் வேண்டி னும் இல்லையென்னுது கொடுத்தல் வேண்டும்," என்று சென்னி யிடம் ஈகையை வற்புறுத்திக் கூறுவராயினர். இதற்கு மேல், தனக்கென வாழாப் பிறர்க்குரியாளனுகிய சென்னி ஈகையை எவ் வாற்றானும் கைவிடுவானோ?

மேற்காட்டிய பாடலின் பொருள் முழுதையும் அறிதல் நலம் பயப்பதாம்.

"கழிந்த காலத்தில் பெய்தேன் எனக் கருதி மழை பெய் யாது மாறினும், முற்காலத்தே விளைந்தேன் எனக் கருதி நிலம் விளைவை நிறுத்தினும் எல்லா உயிர்கட்கும் வாழ்க்கை யில்லாது போகும், அதுபோல, இன்னும் எமக்குப் பரிசில் தாரும் என்று சொல்லி எம் போல்வார் இரப்பின் அவருக்கு' 'நீர் முன்பும் பரிசில் பெற்றீர்'' என்று நும் போல்வார் மறுத்தல் இன்னுதாகும். அம்ம! இயல்தேர் அண்ணலே, இல்லாத பொருளைத் தேடி நிரப்பமாட்டாத வறியரினும், அவரால் பரிசில் நினைந்து வரப் பெற்றவர் கொடுக்கவில்லையென்றால், அவ் விரப்போரால் விரும் பப்படும் இன்பத்தை இழப்பர்; நீ அத்தன்மையையுமல்லே; உயிர் விடவும் செய்வாய். பகைவரது அரிய அரண் அவரிடத்தாகவும், அதனை அழித்துக் கைக்கொள்ளுவதன் முன்னே, நும்முடைய தாகும் என்று சொல்லிப் பாணர்க்குக் கடனுகக் கொடுக்கும் வெற்றியும் வன்மையும் உடையாய். ஆதலால், எந்தையே, நீ

இரப்போரைப் பாதுகாத்தலைக் கடனாகப் பூண்பாயாக,'' என்பது பாட்டின் திரண்ட பொருளாகும்.

இவ்வாற்றால், புலவர் புரவலர்க்கு ஈதலில் ஊக்கம் கொளுத்தப் புரவலர் ஈத்துவக்கும் இன்பம் பெறுவது பண்டைத் தமிழர் மரபென்பதை அறிக.

புலவர் பாடும் புகழுடையோர் வானுலகடைவர் என்ற கருத்தை வற்புறுத்திக் கொடையால் புகழ் வருவதாகலின் அக்கொடைக் கடனைக் கடைப்பிடிக்கும்படி புரவலர்களைப் புலவர்கள் ஊக்கி வருவராயினர் என்பது முன்பும் சிறிது குறிக்கப்பட்டது. இக்கருத்தைச் சோழன் நலங்கிள்ளியை உறையூர் முதுகண்ணன் சாத்தனார் பாடிய பாடலிலிருந்து உறழ்ச்சிஉவம நயத்தோடு அறிந்து இன்புறல் தக்கதாகும்.

"சேற்று வளர் தாமரை பயந்த ஒண்கேழ்
நூற்றிதழ் அலரின் நிரைகண் டன்ன
வேற்றுமை இல்லா விழுத்திணைப் பிறந்து
வீற்றிருந் தோரை எண்ணுங்காலை
உரையும் பாட்டும் உடையோர் சிலரே
மரைஇலை போல மாய்ந்திசினோர் பலரே;
புலவர் பாடும் புகழுடையோர் விசும்பின்
வலவன் ஏவா வான வூர்தி
எய்துப என்பதம் செய்வினை முடித்தெனக்
கேட்பல் எந்தை சேட்சென்னி நலங்கிள்ளி''

(புறநா. 27.)

இதன் பொருள்:

''சேற்றில் வளரும் தாமரை பூத்த ஒள்ளியநிறத்தையுடைத்தாகிய, நூறாகிய இதழையுடைய மலரினது நிரையைக் கண்டாற்போன்று, ஏற்றத்தாழ்வில்லாத குடியின்கண் பிறந்து வீற்றிருந்த வேந்தரை எண்ணுங்காலத்துப் புகழும் பாட்டும் உடையோர் சிலர்; தாமரையினது இலையையொப்பப் பயன்படாது மாய்ந்தோர் பலர். புலவரால் பாடப்படும் புகழுடையோர், ஆகாயத்தின்கண் பாகனால் செலுத்தப்படாத ஊர்தியைப்பொருந்துவார் என்று சொல்லுவர் அறிவுடையார், தாம் செய்யும் நல்வினையை

முடித்து என்று சொல்லக் கேட்பேன், என் இறைவ சேட்சென்னி நலங்கிள்ளி,'' என்பதாகும்.

இதனால், ஒவ்வொருவரும் தாம்தாம் புலவரால் பாடப் பெறவேண்டும் என்பதற்காகக் கொடைக் கடன் பூணுதலால் பாத்தூண் நெறியில் நிற்பர் அல்லரோ!

ஆற்றுப்படைகள் என்ற ஐந்து நூல்கள் பத்துப் பாட்டில் உள்ளன. அவையனைத்தும் இரவலர்க்குப் புரவலர்களும் மற்ற வர்களும், அவர்க்கு வேண்டுவன கொடுத்து மகிழ்வித்துத்தாமும் மகிழும் இயல்பைக் குறிப்பனவேயாகும். அவருள், குடிமக்களும் கொடைக்கடனில் எத்தயை ஈடுபாடு கொண்டிருந்தனர் என்பதை அறியும்போது எல்லையில்லா வியப்பும் மகிழ்வும் ஏற்படும்.

பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம் பார்க்கச் சாலுவது போல ஆற்றுப்படைகள் பலவற்றுள் ஓர் ஆற்றுப்படையில் வரும் நிகழ்ச்சியை ஈண்டு நாம் நினைவுகூர்தல் சாலும்.

சிறுபாணாற்றுப் படை ஓய்மான் நல்லியக் கோடனாகிய புரவலனது கொடைச் சிறப்பைப் பாராட்டுவதாகும். அதில் வரும் சிறுபாணன் ஒருவன் நல்லியக் கோடனிடம் தன் கலைத் திறத்தைக் காட்டி அதற்கீடாகப் பெரும் பொருள் பெற்றுத் திரும்பி வருபவன், தன்னைப்போல் ஒரு சிறுபாணன் பசியால் வாடி வதங்கினனாய் எதிர்ப்பட்ட அவனைப் பாத்து, ''யாம் நல்லியக் கோடனை அடைந்து பசிநீங்கி யானையொடு தேரெய்தி அவனிடத்திலிருந்து வருகின்றோம். நீயும் உன் சுற்றமும் அவனை யடைந்தால் யானை குதிரை அணிகலன் முதலிய பரிசில்களை அவன் உங்களுக்குத் தந்து வழி கூட்டி உடனே அனுப்புவான். அவனிடம் செல்வதை விடுத்துச் சேரமன்னனுடைய வஞ்சியை அடைவீர்களாயின், அது தரும் பசியில் சிறியதாய் இருக்கும்; பாண்டி மன்னனுடைய மதுரையை அடையின் அது தரும் பரிசில் சிறியதாய் இருக்கும்; அதுவன்றிச் சோழனுடைய உறந்தையை யடையின் அது தரும் பரிசிலும் சிறிதாகவே இருக்கும். எனவே, அந்த எண்ணத்தைக் கைவிடுத்து நல்லியக் கோடனை நயந்து செல்வீராயின், நீங்கள் வழியிற் பெறுபவற்றை யாம் கூறக் கேளுங்கள்: வழியில் உள்ள எயிற்பட்டினத்தை

அடைவீர்களாயின், அங்கேயுள்ள பரதவர் மனைதோறும் கள் தேறலோடு குழல் மீனைச் சுட்ட சூட்டினைப் பெறுவீர்; வேலூரை அடைவீராயின், எயின குலமகளிர் அட்ட இனிய புளிங்கறியிட்ட சோற்றை ஆமான் சூட்டிறைச்சியொடு பெறுவீர்; அதையுங் கடந்து ஆமுரை அடைவீர்களாயின் உழவர்மகள் தரும் அரிசியா லான கட்டியாகிய வெள்ளிய சோற்றைக் கவைத்த காலினை யுடைய நண்டும் பீர்க்கங்காயும் கலந்த கலவையொடு பெறுவீர்.

"அதன்பின், நல்லியக் கோடனுடைய விழா நடக்கின்ற பழைய ஊர் சேய்த்தும் அன்று; மிக்க அண்மையிடத்ததேயாகும். அவனையடையின், விருந்தளித்து, நிதியமொடு, யானை குதிரை அணிகலம் முதலிய பரிசில்களையும் தந்து அன்றே உங்களை வழி கூட்டியனுப்புவான்," என்று கூறி ஆற்றுப்படுத்துகிறான்.

இதிலிருந்து புரவலர்களேயன்றி மற்றக் குடிமக்களும் பாத்தூண் நெறியில் நின்ற பண்பு நன்கு புலனாகும்.

நல்குரவு என்பது நம் தமிழ்நாட்டில் இன்றுபோல் பண்டும் உண்டு. ஏன்? எல்லா நாட்டிலும் நல்குரவு என்றும் உள்ளதே யாகும். நல்குரவாவது நுகரப்படுவனயாவும் இல்லாமையாகும். வறுமையாகும். நல்குரவைப் பற்றித் திருவள்ளுவர் கூறும் கருத் துக்கள் ஈண்டுத் தொகுத்துணர்வதற்கு உரியவாகும். "வறுமை மிகவும் இன்னாததாகும். வறுமைபோல் இன்னாதது வறுமையே யாகும். வறுமை, இம்மையின்பம், மறுமையின்பம் ஆகிய இரண்டையும் இல்லையாக்கும். குடிப்பிறப்பையும் அதற்கேற்ற புகழுரையையும் அது கெடுக்கும்; உயர்குடிப்பிறந்தவரிடத்தும் இளிவந்த சொற்பிறத்தற்கு அடிப்படையான சோர்வினை உண் டாக்கும். நல்குரவென்னும் இடும்பையுள் பல்வேறுவகைப்பட்ட துன்பங்கள் வந்து விளையும். நல்குரவுடையோர், மெய்ந்நூற் பொருளைத் தெளிய அறிந்து சொல்வாராயினும், அவர் சொல்லிய சொல், பொருளின்மையதாய் முடியும். ஈன்ற தாயாலும் நல்குர வுடையோன் பிறன்போல நோக்கப்படுவான். நெருப்பினுட் கிடந்து உறங்கலும் ஒருவனுக்கு இயலலாம், ஆனால் நல்குரவு வந்துழி, யாதொன்றனாலும் உறங்கல் உயலாது.

நுகரப்படும் பொருள் இல்லாதவர், தம்மாற் செயற்பாலது

முற்றத்துறத்தலேயாகவும் அது செய்யாதொழிதல், பிறர் இல்லில் உள்ள உப்பிற்கும் காடிக்கும் கூற்றுதலாம்.'' இவ்வாறு நல்குரவைப் பற்றிக் கூறியுள்ளார் திருவள்ளுவர்.

நல்குரவைப் போக்கிக் கொள்ள வழி யாது? முயன்று பொருளீட்டி நுகர்தலேயாகும். அது மாட்டாதார்க்கு அதைப் போக்கிக் கொள்ள வேறு வழியே இல்லையா? உண்டென்கிருர் திருவள்ளுவர். அவ்வழி மானம் தீரா இரவாகும் என்கிருர் அவர். ஓர் அதிகாரமே இதற்குத் திருவள்ளுவர் ஒதுக்கியிருக்கிருர். அதன் நுட்பத்தை அறிந்தவிடத்து அது பாராட்டுதற்கு மிகமிக உரியதாகும்.

மானம் தீரா இரவு இரவாமையோடொத்தலின், அதனுலும் வீடெய்தற் பயத்ததாகிய உடம்பு ஓம்பப்படும் என்னும் அறநூல் வழக்குப்பற்றி, நல்குரவால் இறந்துபடுதலை விலக்குதற் பொருட்டுத் திருவள்ளுவர் இரவு கூறுகின்ருர் என்று இரவு என்னும் அதிகாரத்திற்கு முன்னுரை கூறுகின்ருர் பரிமேலழகர்.

மானம் தீரா இரவு பற்றித் திருவள்ளுவர் கூறும் சில கருத்துக்களைப் பரிமேலழகர் குறிப்புக்களோடு ஈண்டு நினைவு கூர்தல் தக்கதாகும்:

''இரத்தற்கு ஏற்புடையாரைக்கண்டால், நல்கூர்ந்தார் அவர்மாட்டு இரக்க. இரந்தால். அவர் கரந்தாராயின், அவர்க்குப் பழியாவதல்லது தமக்குப் பழியாவதின்ரும்''. இரத்தற்கு ஏற்புடையராவர், உரையாததற்கு முன் உணரும் ஒண்மையுடையராய் மாற்ருதிவார் என்கிருர் பரிமேலழகர்.

'இரந்த பொருள்கள், ஈவாரது உணர்வு உடையமையால் தான் துன்பம் உருமல் வருமாயின், ஒருவனுக்கு இரத்தல் தானும், இன்பத்திற்கு ஏதுவாம் என்கிருர் வள்ளுவர். ஈவாரிடம் காலமும் இடமும் அறிந்து செல்லலும், அவர் குறிப்பறிதலும், அவரைத் தம் வயத்தராக்கலும், அவர் மனம் நெகிழ்வன நாடிச் சொல்லலும் முதலியவற்ருல் வருவனவும், மறுத்த இடத்து வருவனவும் இரப்பார்க்கு வரும் துன்பங்களாம்; அத்துன்பங்கள் உருமல் வருதலாவது, ஈவார், முன்னுணர்ந்து ஈய, இரப்

பார் கொள்ளுதலாம். இவ்வாற்ருல் நல்குரவால் உயிர் நீங்கும் எல்லைக்கண் இளிவில்லா இரவு விலக்கப்பட்டது என்பது கூறப் பட்டது''என்கிருர் பரிமேலழகர்.

' கரத்தல் இல்லாத நெஞ்சினையுடைய மானமறிவார் முன்னர் ஒன்று இரத்தலும் நல்கூர்ந்தார்க்கு ஓர் அழகுடைத் தாகும்.''

''தமக்கு உள்ளது சரத்தலைக் கனவின்கண்ணும் அறியா தார் மாட்டுச் சென்று ஒன்றனை இரத்தலும், வறியார்க்கு ஈதலே போலும்''. ''சொல்லுதல் மாட்டாது. முன்நிற்றல் மாத்திரத் தால், இரப்பார் உயிரோம்பற் பொருட்டு அதனை மேற்கொண்டு செல்கின்றது, அவருக்கு, உள்ளது கரவாது கொடுப்பார் சிலர் உலகத்து உளராய தன்மையானேயன்றிப் பிறிதொன்ருல் அன்று.''

''உள்ளது கரத்தலாகிய நோயில்லாரைக்கண்டால், மானம் விடாது இரப்பார்க்கு வறுமையால் வரும் துன்பங்களெல்லாம் சேரக் கெடும்.

''தம்மை அவமதித்து இழிவு சொல்லாது பொருள் கொடுப்பாரைக் கண்டால், அவ் விரப்பாரது உள்ளம் மகிழ்ந்து உள்ளே உவக்கும் தன்மையுடைத்து. அவமதித்து இழிவு சொல்லாது என்றமையால், நன்கு மதித்தலும் இனிமை கூறு தலும் ஈவாரிடம் இருத்தல் வேண்டற்பாலதாகும்.

''வறுமையுற்று இரப்பார் இல்லையாயின் குளிர்ந்த இடத்தையுடைய பெரிய ஞாலத்துள்ளார்தம் செலவுவரவுகள் உயிரில்லாத மரப்பாவை எந்திரக் கயிற்ருல் சென்றுவந்தாற் போலும்.

''ஈவாரிடம் சென்று ஒன்றை இரந்து கோடலை விரும்பு வார் இல்லாதவிடத்துக் கொடுப்பார் மாட்டு என்ன புகழுண் டாம்? யாதும் இல்லை.''

''ஈவானுக்குப் பொருள் முட்டுப்பாடுற்றவிடத்து, இவன் எனக்கு ஈகின்றவன் என்று அவனை இரப்பான் வெகுளாதொழி

தல் வேண்டும். அது, வேண்டியபொழுது பொருள் உதவாது என்பதற்கு வேறு சான்று வேண்டா, வறுமையாகிய தன் இடும்பை தானேயும் சான்றுதலமையும்,''

மேற்கூறிய மானந்தீராத இரவியல்பை நோக்குமிடத்துந் தமக்கென வாழாப் பிறர்க்குரியாளராய்ப் பாத்தூண் நெறி நிற் பாரே நல்குரவாளர்தம் வாழ்க்கைக்கு இன்றியமையாதவராதல் தெளிவாகும். பாத்தூண் நெறியாளர் இல்லையாயின் நல்கூர்ந்தா ரெல்லாம் இறந்தொழிதலன்றி வேறு வழியே இல்லையாகும்.

மானந்தீரா இரவைச் சிறப்பித்துக் கூறிய வள்ளுவர், ''மானந்தீரவரும் இரவிற்கு அஞ்சவேண்டும் என, ''இரவச்சம்'' என்றோர் அதிகாரம் அமைத்துள்ளார். அதில் கூறும் கருத்துக் களையும் காண்போம்.

''தமக்கு உள்ளது கரவாது, 'இவர் வரப்பெற்றேம்' என்று உள் மகிழ்ந்து கொடுக்கும் கண்போலச் சிறந்தார்மாட்டும், இரவாமலே, ஒருவன் வறுமை கூர்தல் இரந்து செல்வம் எய்து தலைவிடக் கோடிமடங்கு நன்றாகும்.

''இவ்வுலகத்தைப் படைத்தவன், இதன்கண் வாழ்வார்க்கு முயன்று வாழ்தலையன்றி, இரந்தும் உயிர்வாழ்தலை வேண்டி விதித்தானாயின், அக் கொடியோன்றானும் அவரைப் போன்று எங்கும் அமந்து கெடுவானாக.'' மக்களுயிர்க்கெல்லாம் வாழ் நாளும் அதற்கு வேண்டுவதாய உண்டியும், அதற்கு ஏதுவாகிய செய்தொழிலும் பழவினை வயத்தால் கருவொடு கலந்த அன்றே அவன் கற்பிக்குமன்றே! அவற்றுட் சிலவுயிர்க்கு இரத்தலையும் ஒரு செய் தொழிலாகக் கற்பித்தானாயின், அத்தீவினையால், தானும் அத்துன்பமுறல் வேண்டும் என்பதாம்' என்பது பரிமேலழகர் தரும் விளக்கம்.''

''வறுமையால் வரும் துன்பத்தை முயன்று நீக்கக் கடவேம் என்று கருதும் வன்மைபோல வன்மைப்பாடுடையது பிறிதில்லை. எனவே வறுமை தீர்தற்கு வழி இரவன்றாம்.

''நுகரவேண்டுவன இன்றி நல்கூர்ந்தவழியும் பிறர்பால்

சென்று இரத்தலை உடன்படாத அமைதி, எல்லா உலகும் ஒருங்கியைந்தாலும் கொள்ளாத பெருமையுடைத்தாகும்.

"நெறியாய முயற்சி கொண்டுவந்து தந்தது தெளிந்த நீர் போலும் அடுபுற்கையேயாயினும், அதனை உண்டற்குமேல் இனியதில்லை.

"தண்ணீர் பெறாது இறக்கும் நிலைமைத்து ஆயதோர் ஆவினைக்கண்டு அறம், நோக்கி, "இதற்குத் தண்ணீர் தரல் வேண்டும்," என்று இரந்து சொல்லுங்காலும் அவ்விரவுபோல ஒருவன் நாவிற்கு இளிவந்தது பிறிதில்லை. ஆ காத் தோம்பல் பேரறமாயினும் முயன்று செய்வதல்லது இரந்து செய்யற்க என விலக்கியதாம்.

"நுமக்கு இரக்கவேண்டுமாயின், தமக்கு உள்ளது கரப் பாரை இரவாதொழிமின் என்று சொல்லி இரப்பாரையெல்லாம் யான் இரவா நின்றேன்" என்கிறார் வள்ளுவர். இளிவந்த இர வுச் செயலால் ஊட்டிய வழியும், உடம்பு நில்லாதாகலான் இது வேண்டா என்பது தோன்ற 'இரப்பன்' என்றார்.

"இவ்வறுமை என்னும் கடலை இதனால் கடப்போம் என்று கருதி ஒருவன் ஏறிய இரவென்னும் சேமமற்ற தோணி, அதன்கண் ஒடுங்கால், கரத்தல் என்னும் வன்னிலத்தொடு தாக்குமாயின் பிளந்துபோம்:

"உடையார்முன் இல்லார் சென்று இரந்துநிற்றலின் கொடுமையை நினைந்தால், எம் உள்ளம் கரந்து உருகா நிற்கும். இனி இந்நிலையைக் கண்டுவைத்தவர் இல்லையென்றகொடுமையை நினைத்தால் அவ்வுருகு மனத்தானுமின்றிப் பொன்றிவிடும்.

"கரப்பார், இல்லையென்று சொல்லாடிய துணையானே, இரப்பார் உயிர் போகாநின்றது. இனிச் சொல்லாடுகின்ற அவர் தமக்கு உயிர் பின்னும் நிற்றலால், அப்பொழுது எந்தப்புரையுள் அது புக்கொளித்து நிற்கும்?" ஈண்டு உயிர்போதலாவது, 'இனியாம் என்செய்வோம்? என்று ஏங்கிச் செயலற்று நிற்ற லாகும்' என்பது பரிமேலழகர் தரும் விளக்கம்.

இவ்வாற்ருல் நல்கூர்ந்தாரெல்லாம் இரவாமல் முயன்று பொருளீட்டியே வாழவேண்டும் என்கிருர் வள்ளுவர்.

தமக்கென வாழாப் பிறர்க்குரியாளரான புரவலர் பண்டைத் தமிழகத்தில் தாம் ஈட்டியதை மற்றவர்கட்குப் பகுத்தளித்து எஞ்சியதைத் தாம் உண்ணும் மரபுடையவராய் இருந்தனர். இம்மரபாகிய இலக்கியங்கண்ட திருவள்ளுவர், அதற்கு இலக்கணங் கூறுவார்போல், பகுத்துண்டல் வகையைத் தம் நூலில் விளங்க உணர்த்தியிருப்பது பாராட்டுதற்கு உரியதாகின்றது.

''இல்லறத்தில் நிற்பவன் இயல்புடைய மூவராகிய பிரம்மச்சாரி, வானப்பிரத்தன், துறவி, களைகண் ஆனவரால் துறக்கப்பட்டான், நல்கூர்ந்தான், ஒருவரும் இன்றித் தன்பால் வந்து இரந்தான் என்ற இந்த அறுதிறத்தார்க்கும் துணைவனாய் நிற்பதொடு,தென்புலத்தார் தெய்வம், விருந்து, ஒக்கல் என்ற நான்கிடத்தும் செய்யும் அறநெறியை வழுவாமல்செய்து எஞ்சியதைத் தான் நுகர்தல் வேண்டும் என்று கூறுகிருர்.

முடிவாக அவர், ''பொருள் செய்யுங்கால், பாவத்தை அஞ்சி ஈட்டி, அப்பொருளை மேற்சொன்னவர்க்குப் பகுத்தளித்துத் தான் உண்டலை ஒருவன் இல்வாழ்க்கை உடைத்தாயின், அவன் குடிவழி உலகத்தில் எஞ்ஞான்றும் நிற்றல் அல்லது இறத்தல் இல்லை'', என்று உணர்த்துகின்ருர்.

''பழிஅஞ்சிப் பாத்தூண் உடைத்தாயின் வாழ்க்கை
வழிஎஞ்சல் எஞ்ஞான்றும் இல்''

என்பது அவர் வாய்மொழி.

கொல்லாமை என்ற அதிகாரத்தில், பாத்தூண் மரபை மேலும் திருவள்ளுவர் வற்புறுத்துவாராய், ''உண்பதனைப் பசித்த உயிர்கட்குப் பகுத்துக்கொடுத்துப் பின் தானுண்டு, இவ்வாற்ருல், ஐவகை உயிர்களையும் ஓம்புதல், அறனூல் உடையார் தொகுத்த அறங்கள் எல்லாவற்றிலும் தலையாய அறமாம்''என்று உணர்த்துகின்ருர்.

"பகுத்துண்டு பல்உயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாம் தலை"
என்பது அவர் வாய்மொழி.

திருவள்ளுவர் ஈகை எனவும், ஒப்புரவறிதல் எனவும் அமைத்துள்ள அதிகாரக் கருத்துக்களை நோக்கினால், பாத்தூண் நெறியின் தன்மை மேலும் நன்கு தெளிவாகும்.

இந்த இரண்டதிகாரங்களும் மற்றவர்கட்கு உதவும் நெறியையே வற்புறுத்துகின்றன. அவற்றுள் ஒப்புரவு, இம்மை நோக்கியது; ஈகை மறுமை நோக்கியது.

பொருள் முட்டுப்பாடு நேர்ந்தவர்கட்குக் கடன் உடன் கொடுத்துத்தம்மை ஒப்பப் பொருள் முட்டுப்பாடின்றி வாழச் செய்வதேஒப்புரவாகும். வட்டியில்லாக் கடன் தருவதுபோல்வது ஒப்புரவு எனலாம். பதிலுதவி வேண்டாதது ஒப்புரவு ஊரில் வாழ்வார் அனைவருந்தண்ணீருண்ணும் ஊர்க்குளமாகிய ஊருணி போல்வது ஒப்புரவாளன் திரு. பாழ்போகாது நெடிது நின்று எல்லார்க்கும் வேண்டுவன தப்பாது உதவுவதன்றோ ஊருணி! ஒப்பரவு உடையவனிடம் செல்வம் உண்டாயின் பயன்படுமரம் ஊர்நடுவே பழுத்தாற்போல்வதாம்; எல்லார்க்கும் எளிதிற் பயன் கொடுக்கும் என்பதாம். ஒப்புரவுடையான்கண் பட்ட செல்வம், எல்லாவுறுப்பும் பிணிகட்கு மருந்தாய்த் தப்பாத மரத்தை யொக்கும்.

"செல்வம் சுருங்கிய காலத்திலும், கடனறி இயற்கையுடையார் ஒப்புரவிற்கு ஒல்கார். இவ்வாற்றால் மற்றவர்க்கு உதவி செய்தலையே கண்ணுங் கருத்துமாகக் கொள்பவர் ஒப்புரவுடையார்" என்கிறார் வள்ளுவர்.

ஈகை என்பது மறுமை நோக்கியது; என்று முன்பே கூறினோம். வறியராய் ஏற்றார்க்குத் தான் ஈட்டியதைப் பகிர்ந்து கொடுத்து எஞ்சியதை நுகர்பவனைப் பசி என்னும் தீப்பிணி தீண்டலரிது என்கிறார் வள்ளுவர்.

"பாத்தூண் மரீஇ யவனைப் பசியென்னும்
தீப்பிணி தீண்டல் அரிது."
என்பது அவர் வாய்மொழி.

கொடுத்துக் கொடுத்து வறியவன் ஆய்விட்டாலும், இவனிடம் பொருள் பெற்றவர், அவன் வறியனாய காலத்துக் கொடுத்துதவுவர் ஆகலான் பசிப்பிணி தீண்டாதாகும்.

" ஈத்துவக்கும் இன்பம் அறியார்கொல் தாமுடைமை
வைத்திழக்கும் வன்க ணவர்,"

என்று கூறுதல் வாயிலாக, வறியார்க்கு அவர் வேண்டியதைக் கொடுத்து அவர் உவத்தலான் அருளுடையார் இன்பம் எய்துவர் என்று விளக்குகிறார் வள்ளுவர்.

பாத்தூண் நெறியால் வரும் இன்பத்தைச்கூறும் ஒரு மணிக் குறட் கருத்தை நுகர்ந்து இக்கட்டுரையை முடிவிற்குக் கொண்டுவரல் நேரிதாகும்.

ஒருவனும் ஒருத்தியும் கூடுங்கால் பிறக்கின்ற இன்பம் இத்தகையது என்று அவ்விருவரும் தத்தம் உள்ளத்தால் மகிழ்ந்து இன்புறற்குரியதேயன்றிப் பிறர்க்கு ஒருவகையாலும் எடுத்துக்கூறும் தகையதன்று என்பது சான்றோர் துணிபு.

இறைவனை வழிபட்டு அவனைக் கண்டு அவனொடு கலத்தலால் வரும் இன்பத்தை அடியவர்கள் அகத்தால் நுகர்ந்து மகிழ்ச்சியுறுவர் என்பதற்கு உவமமாக ஒருவனும் ஒருத்தியும் கலந்து அகத்தால் மகிழும் இன்பத்தையே திருமூலரும் எடுத்துக் கூறியுள்ளார்:

" முகத்தில் கண்கொண்டு காண்கின்ற மூடர்காள்
அகத்தில் கண்கொண்டு காண்பதே ஆநந்தம்
சகத்தில் தாய்தன் மணாளனோ டாடிய
சுகத்தைச் சொல்லென்றால் சொல்லுமா றெங்ஙனே,,'

என்பது அவர் வாய்மொழி.

ஒருதாய் தன் மணவாளனொடு கலந்து நுகர்ந்த இன்பம் இத்தகையது என்று தன் மகளுக்கு எடுத்துக் கூறமுடியுமா? முடியாது. மகள் தன் கணவனொடு கலந்து மகிழும் போது தானே தன் உள்ளத்தால் நுகர்தற்குரியது அவ்வின்பமேயொழிய தாய்கூறி அறிந்து கொள்ளமாட்டாதது அது.

அத்தகைய இன்பத்தைத் திருவள்ளுவர் ஓர் உவமை வாயிலாக மற்றவரும் அறியுமாறு அறிவிக்கும் வகை மிக மிகப் பாராட்டுதற்கு உரியதாகின்றது.

ஒருவன் தான் ஈட்டியதை இயல்புடைய மூவர், துறந்தார்' ஒவ்வாதவர், இறந்தார், தென்புலத்தார், தெய்வம், விருந்து, ஒக்கல் என்ற பத்துவகையினர்க்கும் பகுத்துக்கொடுத்து விட்டு எஞ்சியதைத் தான் உண்டலால் எத்தகைய இன்பம் உண்டாகுமோ அத்தகைய இன்பம் ஒருவன் தன் மனையாளைக் கலத்தலால் உண்டாகும் என்னும் பொருள்பட,

> ''தம்இல் இருந்து தமதுபாத் துண்டற்றால்
> அம்மா அரிவை முயக்கு'',

என்று திருவள்ளுவர் பாடியுள்ள குறள் பயில்தொறும் இன்பம் பயப்பதாம். பாத்தூண் நெறி நிற்பார் அடையும் இன்பம் அந்நெறிநின்று பயில்வார்க்குக்கண்கூடாம்.எனவேதான், பண்டைத் தமிழகத்தில் இப்பாத்தூண் நெறி பெரும்பான்மையோரால் கடைப்பிடிக்கப்பட்டது. இந்நெறிநிற்பவரால், பசியும், பிணியும் பகைமையும் இல்லாத நிலை நட்டில் நிலைப்பதாயிற்று. தமக்கென வாழாப் பிறர்க்குரியாளராய்ப் பாத்தூண் நெறி நிற்பவரால் உலகம் அழியாது நிலைபெறுவதாயிற்று; அந்நெறியை இந்நாளிலும் யாவரும் கடைப்பிடித்தொழுகுவாரானல், யாவரும் இன்பம் நுகரலாம்; உலகம் அழியாது நிலைபெறும்.

சென்னை நகரில் 1968 சனவரி 3 முதல் 10 முடிய நடைபெற்ற இரண்டாவது உலகத் தமிழ் ஆராய்ச்சிக் கருத்தரங்குமாநாட்டிற் பங்குகொண்ட அறிஞர்கள், 15–1—68-இல்மதுரைக்குவந்தபோது அவர்கட்கு, மதுரைத் தமிழ்ச் சங்கத்தார் அளித்த

# வரவேற்பிதழ்

**அறிவு நலம் சான்ற பெருந்தகையீர்,**

இன்று, தமிழ்ப் பெருமக்கள் பெரிதும் உவக்கும் பொங்கற் பெருநாள்! இந்நன்னாளில் தங்களைக் காணும் போது எங்கள் உள்ளம் பூரிப்படைகின்றது பண்டு தொட்டே பைந்தமிழை வளர்த்துவரும் பாண்டிநாட்டின் தலைநகராம் இம்மதுரைக்கு வருகைபுரிந்த தங்களை 'வருக, வருக' என அகம்கனிந்து வரவேற்கின்றோம்.

இலக்கியக்கருவூலங்களை உருவாக்கிய முதல், இடை, கடைச் சங்கங்கள் மறைந்து, பன்னூறு ஆண்டுகட்குப்பின், கி பி. 1901-இல், தோன்றியது இம்மதுரைத் தமிழ்ச் சங்கம். இதனைத் தோற்றுவித்த பெருந்தகையாளர் சேது மன்னர் குடும்பத்தில் தோன்றிய பொ பாண்டித்துரைத் தேவரவர்கள் ஆவர். இச் சங்கம் தமிழுக்குச் செய்த தொண்டுகள் பலப்பல அரியபல தமிழ் ஏடுகளைத் தொகுத்தது; அவற்றை ஆய்ந்து நூல்வடிவில் வெளியிட்டது; தமிழ்ப்புலவர்கள் பலரை உருவாக்கியது; தமிழகமெங்கும் தாய்மொழி உணர்வைத் தூண்டியது; இத்தகைய அரிய பணிகளால் நான்காம் தமிழ்ச் சங்கம் எனத் தமிழ் மக்களால் போற்றப்பெறுவது.

அன்று, பாண்டிய வேந்தர்கள் சங்கத்தைக் காத்தனர்; இன்று நாடாள்வோரும், தமிழ் மக்களும் இதனைக் காத்து வருகின்றனர். இச்சங்கம், இன்னும் பல பணிகளை மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளது தங்கள் வருகை எங்கட்கு மேலும் ஊக்கம் அளிப்பதாக உள்ளது எனக்கூறி மீண்டும் எங்கள் உளமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொண்டு, வருக, வருக என்று வரவேற்கின்றோம்.

இங்ஙனம்,

மதுரைத் தமிழ்ச் சங்கத்தார்.

சங்கச் செய்திகள்:

# வரவேற்பு விழா

சென்னை மாநகரில் 1968 சனவரி 3 முதல் 10 முடிய நடைபெற்ற இரண்டாவது உலகத் தமிழ் ஆராய்ச்சிக் கருத்தரங்கு மாநாட்டிற் பங்குகொண்ட அறிஞர்களில் 180 பேர் 15-1-1968 இல் மதுரைக்கு வருகை புரிந்தனர். அப்போது, நம் சங்கத்தின் சார்பில், அன்று மாலை 5-30 மணிக்குச் சங்கக் கட்டிடத்தில், வரவேற்பு விழா ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இவ்விழாவுக்குச் சங்கத் தலைவர் தமிழவேள் திரு பி. டி. இராசனவர்கள் தலைமை தாங்கினர்.

செந்தமிழ்க் கல்லூரி மாணவியரின் இறைவணக்கப் பாடலுடன் கூட்டம் தொடங்கியது. தமிழவேளவர்கள், தம் தலைமையுரையிற் கூறியதாவது:-

"இம் மாலை வேளையில் உங்களனைவரையும் வரவேற்பதில் பெருமகிழ்வெய்துகிறேன். உலகின் பல்வேறு பாகங்களினின்றும் வந்துள்ள தமிழறிஞர்களாகிய உங்களை வரவேற்பதாகிய இப்பணி, இதற்குமுன் யாருக்கும் கிடைத்திராத பெரு வாய்ப்பென்றே கருதுகிறேன்.

இம்மாநகர் மதுரையானது, அங்கயற்கண்ணி தன்னொடுமமர்ந்த ஆலவாயண்ணலின் திருக்கோயிலை மையமாகக் கொண்டு அமைக்கப்பட்ட மாண்பினையுடையது. அக்கோயில் மூன்றும் தமிழ்ச் சங்கத்தின் இருப்பிடமாய்த் திகழ்ந்தது. நான்காம் தமிழ்ச் சங்கம் எனப் பெயர் பெறும் இம் மதுரைத் தமிழ்ச் சங்கத்தைத் தோற்றுவித்தவர் பாண்டித்துரைத் தேவராவர். அவர், ஒருமுறை மதுரை வந்த போது, திருக்குறள் நூலைப் பார்க்கவிரும்பினார்; எங்குத் தேடியும், எவரிடங் கேட்டும் அது கிடைக்கப் பெறவில்லை. எனவே மனம் வருந்திய தேவரவர்கள் மதுரையில் தமிழ்ச் சங்கம் ஒன்றை நிறுவ வேண்டுமென முடிவு செய்தார். அவரது முயற்சியின் பயனாக இச் சங்கம் 1901



உலகத் தமிழ் மாநாட்டுறுப்பினர்கள் மதுரைத்தமிழ்ச்சங்கம் வந்தபோது எடுக்கப்பெற்றது உருமேனிய உறுப்பினர் திரு. டான்டுமிட்ரியூ, பிரெஞ்சுநாட்டறிஞர் திரு. கால்டுவெல்லர் ஆகியோருக்கு ஓலைச்சுவடிபற்றித் திரு. ஒளவை. சு. துரைசாமிப் பிள்ளை விளக்கிக் கூறுவதையும், திரு. ம. பொ. சி., சங்கச் செயலர் திரு. கி. பழனியப்பன் ஆகியோர் அருகிலிருப்பதையும் காணலாம்.

செப்டம்பர் 11-இல் தோற்றுவிக்கப் பெற்றது. அக்காலம், ஆங்கிலத்தில் பேசுவதே பெருமை, நாகரீகம் என்றும், தமிழில் பேசுவது இழிவு என்றும், படித்தவர் பலரும் எண்ணிக்கொண்டிருந்த காலம்! பாண்டித்துரைத்தேவர், தமிழ்ப் புலவர்களனைவரையும் வரவழைத்தார்; பல்வேறிடங்களுக்கும் புலவர் சிலரையனுப்பிப் பழந்தமிழ் ஓலைச் சுவடிகளைக் கொண்டுவரச் செய்து, தொகுப்பித்தார். இப்புலவர்கள், தமிழ் இலக்கியத்திற்கு மீண்டும் புத்துயிரளித்து, இழந்த பழம் பெருமையை நிலைநாட்டத் தொடங்கினர். 1920-இல், இச்சங்கத்தில், எதிர்பாராத நெருப்பு விபத்து ஏற்பட்டு, அதனுல் கட்டிடத்திற்கும் பழுதுண்டாயிற்று; விலை மதிப்பற்ற ஏடுகளும், நூல்களும் எரிந்துபோயின. சங்கத்தின் பணி மீண்டும் தொடர்தற்குரிய பொறுப்புத் திரு. டி. சி. சீனிவாசஅய்யங்காருக்கு அளிக்கப்பட்டது.

கடந்த 60 ஆண்டுகளாக இச்சங்கம், தமிழுக்குச் செய்துள்ள பணிகள் பலப்பல. இப்பணிகளைப் போல, வேறு எந்த நிலையமோ, தனிப்பட்டவர்களோ, செய்திருக்க முடியாது என உறுதியாகக் கூறலாம். ஏனையவற்றைவிடத் தமிழ்மொழி, வளமும், வலிமையும் கொண்டிருத்தலினுலேதான், நல்ல பணிகளைச் செய்ய முடிந்தது. கடந்த காலங்களில், நிகழ்ந்த இரு பெருங் கடற்கோள்களால், தமிழர்கள் சொல்ல முடியாத் தொல்லைக்குள்ளாயினர். தமிழ் நிலத்தின் பெரும்பகுதிகள் கடலாற் கொள்ளப்பட்டன. முந்திய சங்கங்களின் காலம் தமிழகத்தின் பொற்காலம் எனலாம். உள்நாட்டில் நிகழ்ந்த போர்கள், பூசல்கள் காரணமாகத் தமிழர்கள், பல நூற்றுண்டுகளாகப்பிற நாட்டார்தம் ஆட்சியில் அடங்கிக்கிடக்க வேண்டியவராயினர். ஆயினும், முன்னைப் பழந்தமிழ் மொழியின் இலக்கிய நடை, பின்னைப் புதுமைக்கும் வழிவகுப்பதாகவும், விழுமிய கருத்துக்களை வழங்குவதாகவும் அமைந்துள்ளது.

தமிழகத்திற்கு வந்த பல்வேறுபட்ட மொழியாளர்கள், பல்வகை மதச் சார்புடையவர்கள், தெய்வச் செந்தமிழ் மொழியில், தம் சிந்தையைப் பறிகொடுத்தனர். அதனுல் அவர்கள், தத்தம் ஆற்றலுக் கேற்பத் தமிழுக்குத் தொண்டாற்றினர்.

பிரெஞ்சுப் பேரரசர் சார்லசு, பல்வேறு மொழிகளின்

தகுதிகளைப்பற்றிப்பின்வருமாறு கூறியதாகச் சுவைமிக்கவரலாறு ஒன்றுஉண்டு:- "நீ, ஒரு பெருந்தகையாளனிடத்துப் பேசவேண்டுமானால் 'ஸ்பேனிய'மொழியிற் பேசவும்; காதலரிடம் பேசவேண்டுமானால், 'இத்தாலிய' மொழியிற் பேசவும்; போர்வீரரிடம் பேசவேண்டுமானால் 'செர்மானிய' மொழியிற்பேசவும்; சாத்தானுடன் பேச விரும்பினால் 'ஆங்கிலத்திற்' பேசவும்!"

சைவநாயன்மார்களின் தேவாரத்தையும், வைணவ ஆழ்வார்களின் பிரபந்தங்களையும் சார்லசு மன்னர் படித்திருந்தால், "ஆண்டவனிடம் நீ பேசவேண்டுமானால், தமிழில்தான் பேசவேண்டும்" என்றும் சொல்லியிருப்பார் என நான் நம்புகிறேன்.

அறிஞர் பெருமக்களே! இவ்வரவேற்புக் கூட்டம், திருக்குறள் அரங்கேற்றப்பட்ட இடம் எனக் கூறப்படும் மூன்றும் சங்கத்தின் இருப்பிடமாகிய மதுரை மீனாட்சி திருக்கோயிலின் பரந்த இடத்தில், கூட்டப்பட்டிருத்தல் வேண்டும் ஆனால்' நீங்களனைவரும் இந்நான்காம் தமிழ்ச் சங்கக் கட்டிடத்தைப் பார்வையிட வேண்டுமென நான் விரும்பினேன்.

நீங்கள் விரும்பினால், இது தொடர்பான என் சொந்த வாழ்க்கைக் குறிப்பை ஈண்டுக் கூறலாமெனக் கருதுகிறேன் நான் சிறுவனாயிருந்தபோது, இச் சங்கக் கட்டிடத்தை அடுத்துள்ள வீட்டில் வாழ்ந்து வந்தேன் அப்போது, இச்சங்கத்தைத் தோற்றுவித்த பாண்டித்துரைத் தேவரும், தமிழ்ப் புலவர்களும் நாள்தோறும் இங்கு வந்து போவதைக் காண்பதுண்டு இச் சங்கத்தின் தலைவனாக நான் வருவேன் என்பதை, அச்சிறு பருவத்தில் கிஞ்சித்தும் எண்ணிப் பார்த்தது கிடையாது. உலகத் தமிழ் மாநாட்டுக் கருத்தரங்கு, மீண்டும் தமிழகத்திற் கூடுங் காலத்து, இதைவிட விரிவான, பரந்த, தமிழ்ச்சங்க இடத்தில் வரவேற்கப் படுவர் என நம்புகிறேன்.

பாட்டுக் கொரு புலவனும் பாரதியார்,

"பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்
தமிழ்மொழியிற் பெயர்த்தல் வேண்டும்!
இறவாத புகழுடைய புதுநூல்கள்
தமிழ்மொழியில் இயற்றல் வேண்டும்!

மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள்
சொல்வதிலோர் மகிமை யில்லை!
திறமான புலமையெனில் வெளிநாட்டார்
அதைவணக்கம் செய்தல் வேண்டும்!''

என்றார். அவர் இன்று உயிரோடு நம்மிடையே இருந்திருப்பாரானால் 'உலகின் பல்வேறிடங்களில் வாழும் அறிஞர்கள், தமிழ்மொழியை நன்கு அறிந்துள்ளனர்' என்பதை மெய்ப்பித்துக் காட்டுமாறு அமைந்த, சென்னை உலகத் தமிழ் மாநாட்டினைக் கண்டு, கழிபேருவகை கொண்டிருப்பார்!

இச் சங்கத்தின் பொன்விழா, 1956-இல், மிகப்பெருமளவில் கொண்டாடப் பெற்றது. அது சிறப்பாக, இயல், இசை, நாடகத்தில் தனிக்கவனம் செலுத்தியது. சங்கத்தின் பழம் பெருமைகளைப் பேசிக் கொண்டிருக்கும் நாம், பெருந்தொகை யினைச் சேர்த்து, அதன்வாயிலாக, வருங்காலத்தில் ஏற்றம்பெறத் தக்க செயல்களையும் மேற்கொள்ளவேண்டும் என எண்ணியுள் ளோம். மீனாட்சி கோயில் திருப்பணி மிகச்சிறப்புற நிறைவேறி யதுபோல இச்சங்கத்தின் வருங்காலப் பணியும், மீனாட்சி அரு ளால் நிறைவேறும் என்று நம்புகிறேன்.

பெருமக்களே! தமிழகத்தைப் பொறுத்தமட்டில், கடந்த சில ஆண்டுகளாகத் தமிழரிடையே, தாய்மொழியில் நல்ல ஆர்வம் ஏற்பட்டுள்ளது; இதை இச் சங்கம் வரவேற்கிறது; என்றாலும், வெறும் ஆர்வமட்டும் போதாது; கடும் உழைப்பும், ஒழுக்கமும் தாம், நல்ல வளமான வாழ்க்கையைத் தரும் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன். நடைமுறையில் மக்கட்கு வழி காட்ட இச்சங்கம் தன்னாலான பணிகளைச் செய்யும்.

உங்களனைவரையும் மீண்டும் 'வருக வருக! என வரவேற் கிறேன்.''

இங்ஙனம் தமிழவேளவர்கள், தம் தலைமையுரையிற் கூறிய பின், சங்கத் துணைத் தலைவரும், மாவட்ட முன்னாள் நடுவருமாகிய திரு. பி அரங்கசாமிநாயுடு அவர்கள் வந்திருந்தோர்க்கு வரவேற்

பிதழ் படித்துக் கொடுத்தனர். (அதனை மற்றொரு பக்கத்தில் காணலாம்.)

இவ்வரவேற்பு, வெண்பட்டுத் துணியில் அச்சடிக்கப்பட்டு ஓலைச் சுருள்போலச் சுருட்டிக் கொள்வதற்கேற்றவாறு, அழகாகவும், கவர்ச்சியாகவும் அமைக்கப்பட்டிருந்தது குறிப்பிடத் தக்கது.

வந்திருந்த உலக மாநாட்டு உறுப்பினர்கள் சார்பில் இலங்கையைச் சேர்ந்த, முன்னாள் நடுவர் திரு. வி. கே. கந்தசாமி அவர்கள், சங்கத்தைப் பாராட்டி, நன்றி தெரிவித்தார்.

சங்கச் செயலர் திரு கி. பழனியப்பன் அவர்கள் நன்றி கூற நாட்டு வாழ்த்துடன் கூட்டம் இனிது முடிந்தது.

தொடக்கத்தில் உறுப்பினரனைவர்க்கும் தேநீர் விருந்தளிக்கப்பட்டது ஆங்கிலத்தில் எழுதப்பெற்ற சங்க வரலாறு, திரு. கே. தியாகராசனவர்களால் எழுதப்பெற்ற 'The Madurai Temple', தமிழ்வேளவர்களால் எழுதப்பெற்ற 'Status of women in Tamilnad' முதலாயின, வெண் துணிப்பையில் இடப்பட்டு அனைவர்க்கும் வழங்கப்பட்டன.

சங்கத்தில், அழகாக அடுக்கி வைக்கப்பெற்ற ஏடுகளை வெளிநாட்டறிஞர் கண்டு வியப்புற்றனர் உருமேனிய உறுப்பினர், திரு. டான் டுமிட்ரியூ, திருமுருகாற்றுப்படையைப் பிரெஞ்சு மொழியில் மொழிபெயர்த்த திரு. கால்டு செல்லர் முதலானோர், தமிழ் ஓலைச் சுவடிகளைப் பெரு விருப்புடன் கண்டு விவரம் அறிந்தனர். பேராசிரியர் திரு. ஔவை சு. துரைசாமிப் பிள்ளையவர்கள், ஓலைச்சுவடிகள் பற்றி விவரமாக எடுத்துரைத்தார். (இதுபற்றிய புகைப்படம் இவ்விதழில் காணலாம்)

சங்கச் செயலர் திரு. கி. பழனியப்பன் அவர்கள், வரைந்த, நாற்பதுக்கு மேற்பட்ட தமிழ்ப் புலவர்களின் வண்ணப்படங்கள் காட்சியாக வைக்கப்பெற்றிருந்தன.* சங்கத்தின் வெளியீடு

---

* இப் படங்கள், முன்பு, கோலாலம்பூரில் நடைபெற்ற மாநாட்டுக் கண்காட்சியில் வைக்கப்பட்டு, அமைச்சர் திரு. எம். பக்தவத்சலமவர்களால் திறந்துவைக்கப்பட்டன.

களும் அழகாக அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. இவற்றையும் சங்க நூல் நிலையம், செந்தமிழ்க் கல்லூரி முதலானவற்றையும், உறுப்பினர் பலருங்கண்டு உவகை கொண்டனர்.

## சங்கத் தேர்வுகள்

வழக்கம்போல் இவ்வாண்டும், சங்கத் தமிழ்த் தேர்வுகள், மிக நன்முறையில் நடைபெற்றன. உயர்நிலைப்பள்ளி, பயிற்சிப் பள்ளிகட்கு 24—2—68லும், கல்லூரிகட்கு 9, 11—3—68லும் தேர்வுகள் நடந்தன. தேர்வுகளில் கலந்துகொண்ட மாணவ ரனைவர்க்கும், உறுதுணைபுரிந்த ஆசிரியப் பெருமக்கட்கும், இச் சங்கம், தன் நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கின்றது.

சங்கத்தின், நுழைவு, இளம் புலவர், புலவர் தேர்வுகள் 8—4—68-இல் நடைபெறவிருக்கின்றன.

சங்கப் புலவர் தேர்வெழுதி வெற்றிபெற்றோர், தமிழக அரசு நடத்தும் ஆசிரியப் பயிற்சிக் கல்லூரிகளில் (Pandits' Training) பயிற்சி பெறுதற்கு எடுத்துக்கொள்ளப் பெறுவர் என்ற செய்தியையும் மகிழ்வுடன் தெரிவித்துக்கொள்கின்றோம்.

# மதிப்புரை

[குறிப்பு: மதிப்புரைக்கு நூல் அனுப்புவோர் ஒவ்வொன்றிலும் இரண்டுபடிகள் அனுப்பவேண்டும்.]

**சிலப்பு மணிகள்:**

(ஆசிரியர்: பேராசிரியர் ஆ. சிவலிங்கனர், மயிலம். பக்கம்: 168. விலை ரூ. 2-25. வெளியீடு: மாணிக்கம் பதிப்பகம், சென்னை-7.)

சிலப்பதிகாரத்தே கண்ணகி, கோவலன், மாதவி, கோப்பெருந்தேவி முதலான மாமணிகளை மட்டுமன்றித் தேவந்தி, கவுந்தி, வயந்தமாலை, மாடலன், மாதரி, மதுராபதி முதலான நன்மணிகளையுங் காணலாம். இம்மணிகளையெல்லாம் ஒன்றாக நிரல்படுத்தி நம்மவர்க்கு அளித்துள்ளார் மயிலம் தமிழ்க் கல்லூரி முதல்வர் பேராசிரியர் ஆ. சிவலிங்கனர். சிலம்பிற் பல்காலும் பயின்று, பயின்று, அதன் மணிகளையும், அவற்றின் படைப்புக்களையும், அவை வழங்கும் கருத்தோசையினையும் அழகுற எடுத்துக்காட்டுந் திறம் போற்றத் தக்கது. 'கவுந்தியடிகள், வம்பப் பரத்தரைச் சபித்தமையால், தம் தவ ஆற்றலை இழந்தார்; கூனியும் வயந்தமாலையும் வேறுவேறானவர்; கண்ணகி எனுஞ் சொல் 'கண்ணகத்துள்ளாள்' என்று பொருள்படும்: இளங்கோவடிகள் சைனர் அல்லர், சைவசமயத்தாராகவே இருத்தல் வேண்டும், என்பன போன்ற அரிய கருத்துக்களை இந் நூற்கண் காணலாம். அனைவரும் படித்தின்புறத் தக்க, ஆராயத் தக்க ஒரு நூல் இது!

**உண்மை விளக்கம் உரை:**

(உரையாசிரியர்: திருப்பெருந்திரு. சிவப்பிரகாச ஞான தேசிக பரமாசாரிய அடிகளார், காஞ்சி. பக்கம்: 110. விலை ரூ.2-75 வெளியீடு: மாணிக்கம் பதிப்பகம், சென்னை-7.)

உண்மை விளக்கம் என்னும் நூல், சித்தாந்த சாத்திரம் பதினான்கனுள் ஒன்று. மெய்கண்ட தேவரின் மாணவருள் ஒருவராகிய திருவதிகை மனவாசகங் கடந்தாரால் அருளிச்

செய்யப் பெற்றது. இதில், மனவாசகங் கடந்தார், தம் ஆசிரியராம் மெய்கண்ட தேவரிடம் பொருளியல்புகளைப் பற்றிப் பல வினாக்களை வினவுவதாகவும், அவற்றிற்கு ஆசிரியர் விடையளிப்பதாகவும், அவற்றால் எல்லாவுண்மைகளையும் உணர்ந்ததாகவும் கூறி, 'முடிவில் வாழ்ந்தேன் அருட்கடலே' என்று முடிக்கின்றார். இது 54 வெண்பாக்களே கொண்ட சிறு நூலாயினும், ஆழ்ந்த அரிய கருத்துக்களைத் தன்னகத்தே உடையது. இத்தகு நூலுக்கு உரை எழுதப் புகுவோர், சாத்திர, தோத்திர, இலக்கண, இலக்கிய நூற்பயிற்சி மிக்குடையராய், நுண்மாண் நுழைபுலமுடையராய் இருத்தல் வேண்டும். இத்தகு புலமை நலத்துடன் அருள் நலமும் கனியப்பெற்ற காஞ்சி நகர்த் தொண்டைமண்டலாதீன குருமகா சந்நிதானம் திருப்பெருந்திரு. ஞானப்பிரகாச தேசிக பாமாசாரிய அடிகளார் அவர்கள், இந் நூலுக்குப் பேருரை வகுத்துத் தந்துள்ளனர். அருஞ்சொல் பற்றிய குறிப்புக்கள், விளக்கங்கள், சித்தாந்தம், திருமுறை ஆகியவற்றின் மேற்கோள்கள் நன்முறையில் தரப்பட்டுள்ளன. ஆதலின் இதனைப் படிப்பார், பன்னூற் பயிற்சியும் பெறுவர் என்பது ஒருதலை. இவ்வழகிய உரையினை வகுத்துத் தந்த அடிகளாரவர்கட்குத் தமிழ்ப் பெருமக்கள் பெரிதும் கடமைப்பட்டுள்ளனர். இந் நூலுக்குத் தருமையாதீனத்துக் குரு மகா சந்நிதானம் திருப்பெருந்திரு, கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பாமாசாரிய அடிகளார் அவர்கள் அளித்த அருளுரை, மணிமுடியாய்த் திகழ்கிறது. அனைவரும் கற்றுப் பெரும் பயன் அடைவார்களாக.

— ச. சாம்பசிவன்

**இளம்பூரணர் எழுத்துரை:**

(ஆசிரியர்: பேராசிரியர், ஆ. சிவலிங்கனார், மயிலம், பக்கம்: 164, விலை: 3, வெளியீடு: மாணிக்கம் பதிப்பகம் சென்னை-7.)

இந் நூல் ஓர் இலக்கணத் திறவுகோல் என்று சொல்லலாம். ஆசிரியர் இளம்பூரணர் தொல்காப்பிய எழுத்ததிகாரத்திற்கு எழுதியுள்ள உரையில் விளங்காமல் கிடக்கும் சிலபகுதிகளை எடுத்துக்கொண்டு அவற்றைக் கற்பார் புரியுமாறு விளக்கிச் செல்கிறார்

ஆசிரியர். பல்லாண்டுகளாக வித்துவான்தேர்வுமாணவர்களுக்குப் பாடம் சொல்லிக் கொடுத்த வாய்ப்பினுல் மாணவர்களின் சந்தேகங்களைப் புரிந்துகொண்டு அதனைத் தெளிவுபட விளக்கிச் சென்றிருப்பது இந்நூலின் தலையாய சிறப்பாகும். கருவி, செய்கை, திரிந்ததன் திரிபு, அதுவும் பிறிதும், என்பன போன்ற சொற்ருெடர்கள் எதனைக் குறித்து நிற்கிறது என்பதனை விளக்கி நிற்கும் பாங்கு மிகத் தெளிவாக அமைந்துள்ளது. மேலும் நும் நீயிர் என்ற தலைப்பில் அச்சொற்கள் எவ்வாறு மாற்றம் பெறுகிறது என்பது விரிந்த அளவில் ஆராயப்பட்டுள்ளது. இதனில் காணப்படும் கட்டுரைகள் யாவுமே 'செந்தமிழ்' போன்ற இதழ்களில் வெளிவந்தவைதாம். சுருக்கமாகச் சொன்னுல் கற்பாரின் உள்ளத்தில் தோன்றும் ஐயங்களை இந்நூல் தெள்ளிதின் விளக்கும். வித்துவான் தேர்விற்குப் பாடநூல்களில் ஒன்ருக இதனையும் வைக்கும் சிறப்பிற்குரியது.

— மு. உலகநாதன்

## திருவள்ளுவர்

(ஆசிரியர்: மா. வழித்துணைவன்.)

வள்ளுவர் வாழ்க்கை ஒரு புதிர், புரியாத ஒன்று. பழமையான அவ்வாழ்க்கை வரலாற்றினைப் புதுமையான இவ்வுலகிற்கு நாடகவுருவில் ஆக்கித் தந்துள்ளார் இந்நூலாசிரியர். திருவள்ளுவ மாலையில் வந்துள்ள ஒரு சில கருத்துக்களைத் தவிர வள்ளுவரைப் பற்றிய வேறு சான்றுகள் கிடைத்தில. ஆயின் இவ்வாசிரியர், ஆராய்ச்சியாளர் எழுதியுள்ள ஆய்வுரைகளையும், வள்ளுவர் வாழ்ந்ததாக அறியப்படும் கடைச் சங்க கால மன்னர் வேளிர், புலவர் ஆகியோரது வரலாற்றையும், திருக்குறட் கருத்துக்களையும் அடிப்படையாகக் கொண்டு வள்ளுவர் வரலாற்றை நாடகம் ஆக்கியுள்ளார். வள்ளுவர் தீட்டியுள்ள சிறந்த நல்லோனையும், தீயோனையும், நாடகப் பாத்திரங்களாக ஆக்கி உலவவிட்டமை சுவை தருகிறது. வள்ளுவர் வரைந்துள்ள உயர்ந்த கருத்துக்களைக் கோர்வையாக்கி வள்ளுவர் ஆங்காங்கே மக்களுக்கு அறிவுரைகளாகக் கூறுவதுபோல் அமைத்துள்ளமை இன்பந்தருகிறது. சான்ருக, நாகவேள் பல்லக்குத் தூக்கி வந்தவரிடம் குறைந்தகூலிகொடுத்து, அவனை அமைதிப் படுத்த

தீவினை செய்தமையால்தான் தன்னை அவன் சுமந்து வந்ததாகக் கூற, வள்ளுவர் இதனை மறுத்து இவற்றை அறத்தின் பயன் என்று கூறுவது தவறு எனச் சுட்டிக் காட்டுகிறார். (பக்-15)

ஆசிரியர் கற்பனையாக உலவவிட்ட பாத்திரங்களில், நாக வேள், ஏலேலசிங்கர் முல்லை, கார்குழலி ஆகியவை நம் மனக்கண் விட்டு அகலாது இடம்பெறத் தக்கவையாம். இதனை ஒருமுறை படித்தால் திருக்குறளை நன்கு ஓதியதன் பயனை அடையலாம்.

வள்ளுவர் வரலாற்றினை முழுமையாக வரைய முற்பட்டவர் அதனை நாடகமாக்கித் தந்தவர், அறக்கருத்துக்களையும் அறிவுரைகளையும் கற்பனையாகவும் கதையாகவும் ஆக்கியருளினவர் எனலாம். தமிழ் கூறும் நல்லுலகம் இதனைப் படித்துப் பயன்பெறுதல் நலம்.

— வி. சி சீனிவாசன்

**வரப்பெற்றோம்:**

1. சிவநெறிப் பிரகாசம்: (நந்தி சிவாக்கிரயோகிகள் உரையுடன்) வெளியீடு: திருவாவடுதுறை ஆதீனம். பக்: 229.

2. புதுமுறை விவசாயம்: (ஆசிரியர்) வீலர்மக்மில்லன்; தமிழாக்கம். ஏ. அமிர்தலிங்கம். வெளியீடு: சோதி நிலையம், சென்னை-18. பக்-180. விலை ரூ. 2)

3. தமிழ் நூல்களின் விவரத் தொகுப்பு: (வெளியீடு: தென் மொழிகள் புத்தக டிரஸ்ட், சென்னை-10. பக்-58, விலை: 50 காசு)

4. பாவை: (மகளிர் திங்கள் இதழ்) (ஆசிரியர்: இறைக்குருவன், சிதம்பரம். பக்-56, விலை 50காசு நல்ல, இனிய, தனித் தமிழில் வெளிவருவது, கதை, கவிதை, கட்டுரைகள் தாங்கி வருவது.)

## தமிழ் அன்றும் இன்றும்

[ஆசிரியர்: சிந்தாமணிச் செல்வர் மகா வித்துவான் மே. வீ. வேணுகோபாலப்பிள்ளை. வெளியீடு: தமிழியல் மன்றம், 245–அங்கப்பநாய்க்கன் தெரு, சென்னை–1. விலை ரூ. 1–25. பக்கங்கள் 80]

சென்னைப் பல்கலைக் கழகத்தில், சொல்லின் செல்வர் டாக்டர் ரா. பி. சேதுப்பிள்ளை அவர்களின் பெயரால் விளங்கும் அறக்கட்டளைச் சார்பாக, ஆசிரியர் நிகழ்த்திய சொற்பொழிவே, இந்நூல் வடிவில் வெளிவந்துள்ளது. முச்சங்க வரலாறு, அவை வளர்த்த தமிழ், தமிழ் இலக்கியங்களில் காணப்படும் சிறப்பு, மொழி வளர்ச்சிக்கான வழிகள் முதலியன, ஆசிரியர் மகா வித்துவான் அவர்களால் இந்நூலில் தெளிவாக எடுத்து விளக்கப்பெற்றுள்ளன. தொல்காப்பியங் கற்போர், உரைகளைக் கற்கும் போது அவ்வுரைநடை இனிது விளங்காமையாற் பெரிதும் இடர்ப்படுவதைத் தவிர்க்க, எளிய உரைநடையில், முழு நூலுக்கும்புத்துரையெழுதி வெளியிடவேண்டுமென்பது ஆசிரியர் விருப்பம். மேலும் பண்டை நூல்களையும் உரைகளையும் பயிலும் மாணவர்களுக்கு, விளங்காவெனக் கருதும் உரைப் பகுதிகளை, மொழி கற்பிக்கும் ஆசிரியர்கள், தெளிவுற விளக்கும் பொறுப்பை மேற்கொள்ள வேண்டும். எளிய நடையில் எழுதுவது பலர்க்குப் பயன்படும் என்பதால், பிழை மலிந்த தமிழை, மரபுக்கு ஒவ்வாத முறையில் எழுதிப் பரப்பி, முன்னோர் கட்டிய மொழிக் கலைக்கோயிலைச் சிதைப்பது சரியன்று. இவைபோன்ற தமிழ் வளர்ச்சிக்கான பல அரிய கருத்துக்கள் நூலில் காணப்படுவதுடன் சங்க இலக்கியங்களின் அமைப்பு, உரையாசிரியர்களின் சிறப்பு, முதலியனவும் மேற்கோள்களுடன் எடுத்துக்காட்டப்பட்டுள்ளன. இந்நூல் கற்றறிந்த அறிஞர்களுக்கு மட்டுமன்றிக் கற்க விரும்பும் பொதுமக்களுக்கும் மிகப் பயனுடையதாகும்.

— **கி. பழனியப்பன்**